


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:198 | 02-02-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி




## இன்றைய பஞ்சாங்கம்

02.02.2026 தை19
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.36

திதி:
இன்று அதிகாலை 4.43 வரை பௌர்ணமி பின்பு பிரதமை.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 01.01 வரை பூசம் பின்பு ஆயில்யம்.

யோகம் :
இன்று காலை 8.42 வரை ஆயுஷ்மான் பின்பு சௌபாக்யம்.

கரணம் :
இன்று அதிகாலை 4.03 வரை பவம் பின்பு மாலை 4.10 வரை பாலவம் பின்பு கௌலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று ஷ அதிகாலை 01.01 வரை மூலம் பின்பு பூராடம்.

நல்ல நேரம்
காலை 6.00 – 7.00.
மாலை 4.30 – 5.30
இராகு காலம்
காலை 7.30 – 9.00.
எமகண்டம்
காலை 10.30 – 12.00.

குளிகை
பிற்பகல் 1.30 – 3.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040



# பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பயனளிக்கும் பட்ஜெட்

## நிர்மலா சீதாராமன் அறிவிப்பு

புதுடெல்லி, பிப்.2:

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பயனளிக்கும் பட்ஜெட் இது என்று நிர்மலா சீதாராமன் கூறினார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த 28ம் தேதி இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தொடரில் ஜனாதிபதி உரையுடன் தொடங்கியது. இதனிடையே, ஆண்டுதோறும் பிப்ரவரி 1ம் தேதி மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவது வழக்கம். இந்நிலையில், 2026-27ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் நேற்று காலை 11 மணிக்கு நாடாளுமன்றத்தில் மத்திய பஜெட்டை தாக்கல் செய்தார்.

பொதுவாக ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்றம் விடுமுறை தினமாகும். ஆனால் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பட்ஜெட் தாக்கல் என்பதால் நாடாளுமன்றம் செயல்பட்டு வருகிறது.

27 ஆண்டுகளுக்குப்பின் முதல் முறையாக ஞாயிற்றுக்கிழமையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2026-27-ம் ஆண்டிற்கான பட்ஜெட்டை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார். அவர் தாக்கல் செய்யும் 9வது பட்ஜெட் இது.மிகச் சரியாக முற்பகல் 11.01க்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் உரையைத் தொடங்கினார். அப்போது அவர் பேசியவதாவது:-

புனிதமான தைப்பூச நாளிலும், ரவி தாஸ் ஜெயந்தி நாளிலும் நாட்டிற்கான பட்ஜெட்டை தாக்கல் செய்கிறேன்.

பிரதமர் மோடி தலைமையிலான அரசு 12 ஆண்டுகளில் பொருளாதார நிலைத்தன்மையை உறுதிப்படுத்தி உள்ளது.

தன்னிறைவு பெற்ற இந்தியா என்ற இலக்கை நோக்கி வேகமாக முன்னேறி வருகிறோம்.

பணவீக்கத்தை முறையாக கட்டுப்படுத்தியதன் காரணமாக நாட்டின் வளர்ச்சி மேம்பட்டுள்ளது.

தடைகளைத் தாண்டி சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்பதில் பிரதமர் மோடி உறுதியாக உள்ளார்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பலன் அளிக்கும் வகையில் பட்ஜெட்டை உருவாக்கி இருக்கிறோம்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7 சதவீதமாக உள்ளது.

இளைஞர் சக்தியை முன்னிறுத்தி 2026- 27ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது.

**வளர்ச்சியின் பலன்கள்**

அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடைவதை உறுதி செய்து இருக்கிறோம்.

அடிப்படையில் மத்திய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 350 சீர்திருத்தங்களை மத்திய அரசு செய்துள்ளது.

அனைவருக்குமான வளர்ச்சி, நிலையான பொருளாதாரம், மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவது ஆகிய மூன்றும் முக்கிய கடமை.

மிக முக்கியமாக ஜிஎஸ்டி சீர்திருத்தம், லேபர் கோட் சீர்திருத்தம் என பல்வேறு சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

காதி, கைத்தறி கைவினைப் பொருட்களை வலுப்படுத்த 'மகாத்மா காந்தி கிராம் ஸ்வராஜ்' என்ற புதிய திட்டம் தொடங்கப்படும்.

**சென்னைக்கு அதிவேக ரெயில் திட்டம்**

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, ஒடிசாவில் அரிய வகை தாது வழித்தடங்கள் அமைக்கப்படும்.

நாடு முழுவதும் 7 நகரங்களுக்கு இடையே அதிவேக ரெயில் வழித்தடம் அமைக்கப்படும்.

சென்னை-ஐதராபாத், பெங்களூரு - சென்னை, மும்பை புனே, புனே ஹைதராபாத், ஹைதராபாத் பெங்களூரு, புது தில்லி வாராணசி, வாராணசி சிலிகுரி ஆகிய நகரங்களுக்கு இடையே 7 அதிவேக ரயில் தடங்கள் அமைக்கப்படும்" என்று தெரிவித்தார்.

**தேசிய நீர்வழிப் போக்குவரத்து வழித்தடம்**

ஒடிசாவில் ஏற்படுத்தப்படும்.

கடலோர சரக்கு போக்குவரத்திற்கு கூடுதலாக நிதி ஒதுக்கப்படும்.

இந்தியாவின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என அனைத்து பிராந்தியங்களையும் இணைக்கும் வகையில் புதிய திட்டம்.

நகர் அடிப்படையிலான வளர்ச்சிக்கு 5 ஆண்டுகளில் ரூ.5000 கோடி ஒதுக்கீடு.

**மெகா ஜவுளி பூங்கா**

புதிய மெகா ஜவுளி பூங்காக்கள் அமைக்கப்படும்.

மாநிலங்களுடன் இணைந்து பிரத்யேக கெமிக்கல் பூங்கா அமைக்கப்படும்.

வங்கி துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்கு உயர்மட்டக்குழு அமைக்கப்படும்.

**25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்பு**

கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேரை வறுமையில் இருந்து மத்திய அரசு மீட்டுள்ளது.

சிறு, குறு தொழில் வளர்ச்சிக்கு ரூ.10,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நுண் சிறுகுறு தொழில்துறையை மேம்படுத்த மும்முனை திட்டம் அறிமுகம். புதிய திட்டத்திற்கு ரூ.10,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தாக்கலுக்கு முன் ஜனாதிபதியுடன் சந்திப்பு



தொடர்ந்து ஒன்பதாவது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்கு முன்னதாக, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஜனாதிபதி திரௌபதி முர்முவை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

நிதியமைச்சர் நாடாளுமன்றத்திற்குச் செல்வதற்கு முன்பு ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியை சந்தித்தார்.

முன்னதாக, சீதாராமன் தனது ராஷ்டிரபதி பவனில் உள்ள அலுவலகத்திற்கு வெளியே தனது பட்ஜெட் குழுவினருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

தமிழ்நாட்டைச் பட்டுப் புடவை அணிந்திருந்த அவர், தேசியச் சின்னம் பொறிக்கப்பட்ட சிவப்புப் பையில் ஒரு டேப்லெட்டை எடுத்துச் சென்றார். அவருடன் நிதித்துறை இணையமைச்சர் மற்றும் அவரது அமைச்சகத்தின் ஆறு செயலாளர்களும் உடன் இருந்தனர்.

"மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி மற்றும் நிதி அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளுடன், மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்கு முன்பு ஜனாதிபதி திரௌபதிமுர்முவை குடியரசுத் தலைவர் மாளிகையில் சந்தித்தார். பட்ஜெட் தாக்கல் செய்வதற்காக மத்திய நிதி அமைச்சருக்கும் அவரது குழுவினருக்கும் ஜனாதிபதி தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்," என்று இந்தியக் குடியரசுத் தலைவர் அலுவலகம் எக்ஸ் சமூக வலைதளத்தில் ஒரு பதிவில் தெரிவித்துள்ளது.

மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காக நாடாளுமன்றத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு, மங்களகரமானதாகக் கருதப்படும் தயிர்-சர்க்கரையை ஜனாதிபதி முர்மு, சீதாராமனுக்கு வழங்கினார்.

## தமிழகத்துக்கு புதிய திட்டங்கள்

- சென்னை – பெங்களூரு, சென்னை – ஐதராபாத் இடையே அதிவேக ரெயில் வழித்தடம் அமைக்கப்படும்.
- கடலோர பகுதிகளில் தேங்காய் சாகுபடியை ஊக்குவிக்க புதிய திட்டம் செயல்படுத்தப்படும். தென்னை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் பட்டுப்போன தென்னை மரங்களை நீக்கி புதிய மரங்கள் நட திட்டம்.
- தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கலாச்சார மையம் அமைக்கப்படும்
- பழவேற்காட்டில் பறவைகளை கண்காணிக்க 3 புதிய கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்படும்
- பொதிகை மலை, இமாச்சல், ஜம்மு காஷ்மீரில் டிரக்கிங் சுற்றுலாவை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- மாணவி விடுதிகள்
- மாவட்டந்தோறும் மாணவிகளுக்கான விடுதிகள் அமைக்கப்படும்.
- பொதிகை மலையில் சுற்றுச்சுழலுக்கு உகந்த மலையேற்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்
- இயற்கை நூல் உற்பத்திக்கு புதிய திட்டம்; பருத்தி, பட்டு கம்பளி நூல் உற்பத்திக்கு திட்டம்
- சிறு, குறு தொழில்களுக்கு ரூ.10,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
- மாநிலங்களுடன் இணைந்து பிரத்யேக கெமிக்கல் பூங்கா அமைக்கப்படும்.
- அரியவகை கனிமம் எடுப்பதற்கான புதிய வழித்தட திட்டம் தமிழ்நாடு, ஆந்திரா, ஒடிசா, கேரளாவுக்கு அறிமுகம். இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.







## பட்ஜெட்டில் முக்கிய பிரச்னைகள் புறக்கணிப்பு: ராகுல்



**புதுடில்லி, பிப்.2:**

மத்திய பட்ஜெட்டில் நாட்டின் முக்கிய பிரச்னைகள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

2026 – 27 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று தாக்கல் செய்தார். மத்திய பட்ஜெட் குறித்து பாஜகவினர் வரவேற்பளித்து வரும்நிலையில், எதிர்க்கட்சிகள் ஏமாற்றளிப்பதாகக் கூறுகின்றனர்.

இந்த நிலையில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தனது எக்ஸ் பக்கத்தில், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பின்மை, வீழ்ச்சியடைந்து வரும் உற்பத்தி, மூலதனத்தை இழந்துவரும் முதலீட்டாளர்கள், சரிந்து வரும் வீட்டு சேமிப்பு, விவசாயிகளின் நிலைமை, உலகளாவிய அதிர்ச்சி நிலைமை ஆகிய அனைத்தும் மத்திய பட்ஜெட்டில் புறக்கணிக்கப்பட்டு விட்டன.

திருத்தம் செய்ய மறுக்கப்படும் இந்த பட்ஜெட், இந்தியாவின் நெருக்கடிகளைக் கண்டு கண்மூடித்தனமாய் இருப்பதாய் உள்ளது.

## தமிழகத்துக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி துரோகம்



மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு புதிய திட்டங்கள் ஏதுமில்லை என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், "எப்படியும் தோல்வி உறுதி என்பதால் தமிழ்நாட்டை மீண்டும் புறக்கணித்த ஒன்றிய பாஜக அரசு. தமிழ்நாட்டுக்குப் புதிய திட்டங்களும் இல்லை.

ஏற்கெனவே வரவேண்டிய ஜல் ஜீவன் மற்றும் கல்வி நிதியும் இல்லை; அட, வழக்கமாகச் சொல்லும் திருக்குறள் கூட இம்முறை இல்லை.

அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட் கேட்டால், 5 ஆண்டுத் திட்டம் போல வாசித்திருக்கிறார்கள். மொத்தத்தில், மத்திய பட்ஜெட் 2026 என்பது ஏமாற்ற பட்ஜெட்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழகத்துக்கு துரோகமிழைக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி என்று பதிவில் முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, மத்திய பட்ஜெட்டில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பின்மை, வீழ்ச்சியடைந்து வரும் உற்பத்தி, மூலதனத்தை இழந்துவரும் முதலீட்டாளர்கள், சரிந்து வரும் வீட்டு சேமிப்பு, விவசாயிகளின் நிலைமை, உலகளாவிய அதிர்ச்சி நிலைமை ஆகிய அனைத்தும் மத்திய பட்ஜெட்டில் புறக்கணிக்கப்பட்டு விட்டதாக ராகுல் காந்தியும் குற்றம் சாட்டியுள்ளார்.

## "குறிக்கோள்களுடன் கூடிய இந்த பட்ஜெட் நாட்டின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும்": மோடி



2047-ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய நமது பயணத்திற்கு இந்த பட்ஜெட் ஒரு அடித்தளம் என்று தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, இது நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் மத்திய பட்ஜெட் 2026 குறித்த தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். இதில் பேசிய பிரதமர், "இந்த பட்ஜெட் வரலாற்றுச் சிறப்புமிக்கது. பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்தில் செயல்படும் தேசத்தின் உணர்வைப் பிரதிபலிக்கிறது. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், ஒரு பெண் நிதி அமைச்சராக, தொடர்ந்து ஒன்பதாவது முறையாக நாட்டின் பட்ஜெட்டைத் தாக்கல் செய்து ஒரு புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார். இந்தப் பட்ஜெட் மகத்தான வாய்ப்புகளைக் கொண்டது. இது நிகழ்காலத்தின் கனவுகளை நிறைவேற்றி, இந்தியாவின் பொன்னான எதிர்காலத்திற்கான அடித்தளத்தை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. 2047-ம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கான ஒரு வலுவான அடித்தளமாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளது.

# திருக்குறள் குறள்-518

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்



ஒருவன் ஒரு தொழிலைச் செய்வதற்கு உரியவனாக இருப்பதை ஆராய்ந்த பிறகு அவனைத் அத் தொழிலுக்கு உரியவனாகும்படிச் செய்ய வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



எதிர்த்து நிற்போர்
எல்லாம் எதிரிகள்
இல்லை உடன்
இருப்போர் எல்லாம்
உறவுகள் இல்லை
காலமே நிர்ணயிக்கிறது
எதிரி யார் உறவு யார்
என்று

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## பூபதித் திருநாள்



நேற்று பூர்த்தியாகும் பூபதித் திருநாள் பத்தாம் நாள், நம்பெருமாள் காலை சந்தனு மண்டபம் ஏள்ளி, அங்கே திருமஞ்சனம் கண்டருளி மாலை உத்திரவீதிகள் வலம் வந்து, தாயார் சந்நதியில் "திருமந்திக்காப்பு" முடித்து, ஆயிரங்கால் மண்டபம் வழியாக உடையவர் சந்நதியில் ஸ்ரீ ராமாநுஜர் தாகசாந்திக்காக சமர்ப்பிக்கும் இளநீரை அம்சையாகி, கார்த்திகை கோபுரவாசலில் அத்யாபக சாற்றுமுறையாகி, பின் துவஜஸ்தம்பம முன் படிப்பு முடித்து நேராக 09.30க்கு மூலஸ்தானம் ஏள்ளுவார்! (மற்ற ஒன்பது நாட்களும் கண்ணாடி அறையிலே). இந்த சப்தாவரணம் புறப்பாட்டில் எந்த ஒரு வாத்யமும் இல்லாமல் நம்பெருமாள் திருவீதி உலா வருவது, அத்யாபக ஸ்வாமிகள் சேவிக்கும் இராமாநுச நூற்றந்தாதியை நம்பெருமாள் திருச்செவி சாய்த்து அன்வயிக்க எந்தவித சப்தமும் இல்லாமல் புறப்பாடு கண்டருள்கிறார்!

மூலஸ்தானம் ஏள்ளியபின், அவரோஹணம்-கொடியிறக்கம் வைபவம் நடைபெறும்! திருமகளும்-மண்மகளும் சிறக்கவந்தோன் வாழியே! செய்யவிடைத் தாய்மகளார் சேவிப்பான் வாழியே!

## சீர்காழி தென்பாதி ஸ்ரீசீரடி சாய்பாபாதியான ஆலயத்தில் ஸம்வத்ஸரா ஹோமம் மற்றும் ஹயக்ரீவர் ஹோமம்



**சீர்காழி , பிப் .02 :**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதி ஸ்ரீ சீரடி சாய்பாபா தியான ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் ஸம்வத்ஸரா ஹோமம் மற்றும் ஹயக்ரீவர் ஹோமம் நடைபெற்றது. 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ , மாணவிகள் கலந்து கொண்டு பாபாவிற்கு தங்கள் கைகளாலே பால் அபிஷேகம் செய்து பாபாவின் அருளை பெற்றார்கள் .

## தைப்பூசம் சிறப்பு வழிபாடு





திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் முருகப்பெருமானுக்கு தைப்பூசத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், வண்ணமலர் மாலைகளால், எலுமிச்சம் பழம் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபாரதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முருகப்பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# காட்பாடி ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் தங்கக் கவசத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!

**வேலூர், பிப்.02:**
வேலூர் மாவட்டம், காட்பாடி சித்தூர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ளது ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோயில். இந்த கோயிலில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று தங்கக் கவசத்தில் ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

அதேபோன்று பிப்ரவரி மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையை முன்னிட்டு ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் தங்கக் கவச அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அத்துடன் வடை மாலை சாத்தியும், வெற்றிலை மாலை சாத்தியும் பக்தர்கள் ஸ்ரீபக்த ஆஞ்சநேயரை வழிபட்டனர்.

இதற்கு முன்னர் அதிகாலை



5 மணிக்கு நடை திறக்கப்பட்டு ஸ்ரீபக்த ஆஞ்சநேயருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடந்தன.

இதையடுத்து மலர்களாலும், தங்கக் கவசத்தாலும் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இதையடுத்து பக்தர்கள் வடைமாலை சாத்தியும், வெற்றிலை மாலை, துளசி மாலை சாத்தியும் தொடர்ந்து வழிபட்ட வண்ணமாக இருந்தனர்.

தொடர்ந்து நாள் முழுவதும் தங்கக் கவசத்தில் பக்தர்களுக்கு ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் அருள் பாலித்து வந்தார். பூஜையில் திரளாக கலந்து கொண்டனர் பக்தர்கள்.

பூஜையில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீரங்கம் ஸ்ரீகண்ணன் பட்டாச்சாரியார் வெகு விமரிசையாக செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் முருகனை தரிசிக்க திரண்ட பக்தர்கள்



திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நேற்று முருகனை தரிசிக்க திரண்ட பக்தர்கள்.

# தைப்பூசம், பௌர்ணமி சிறப்பு வழிபாடு

**சென்னை, பிப்.02:**
சோழங்கநல்லூரில் ஸ்ரீ விஜயகணபதி ஆலயத்தில் அமைந்திருக்கும் முருகப் பெருமானுக்கு தைப்பூசத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியத்துடன் தீபாரதனையும் நடைபெற்றது.

தை மாத பௌர்ணமி முன்னிட்டு விஜய கணபதி ஆலயத்தில் அமைந்திருக்கும் சித்ரகுப்தருக்கு மாத மாதம் பௌர்ணமி அன்று சித்ரகுப்தருக்கு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள் வண்ணமலர் மாலைகள் அலங்கரித்து பாட்டுக்கள் பாடி வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன்,மகா தீபாரதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முருகப்பெருமானையும், சித்ரகுப்தரையும் வேண்டி அருள் பெற்றனர்.









**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# 108 திருவிளக்கு பூஜை



சமயபுரம் மாரியம்மன் கோயிலில் பவுர்ணமியையொட்டி நேற்று 108 திருவிளக்கு பூஜை நடந்தது.

## அண்ணாமலையார் தீர்த்தவாரி



திருவண்ணாமலை ஈசான்ய குளத்தில் நேற்று தைப்பூச தினத்தில் அண்ணாமலையார் தீர்த்தவாரி நடந்தது.

## தைப்பூசத்தையொட்டி திரண்ட பக்தர்கள்



காஞ்சிபுரம் குமரக்கோட்டம் முருகன் கோயிலில் தைப்பூசத்தையொட்டி திரண்ட பக்தர்கள்

## சிறப்பு அலங்காரத்தில் சுப்பிரமணியசுவாமி வள்ளி, தெய்வானை



பழமுதிர்சோலையில் நேற்று தைப்பூசதினத்தில் சிறப்பு அலங்காரத்தில் சுப்பிரமணியசுவாமி வள்ளி,தெய்வானை.

## தைப்பூச திருவிழாவில் தேரோட்டம்



கழுகுமலை கழுகாசலமூர்த்தி கோயில் தைப்பூச திருவிழாவில் நேற்று தேரோட்டம் நடந்தது.

## நாகராஜா கோயில் தைத்திருவிழாவில் தேரோட்டம்



நாகர்கோவில் நாகராஜா கோயில் தைத்திருவிழாவில் நேற்று தேரோட்டம் நடந்தது.

## பறவை காவடி எடுத்த பக்தர்கள்



திருவண்ணாமலை மாவட்டம் மன்சுராபாத் திருமுருகப் பெருமான் கோயிலில் 89-ம் ஆண்டு தைப்பூச விழாவில் பறவை காவடி எடுத்த பக்தர்கள்.

# மகளிர்க்கு இலவச தையல் இயந்திரங்கள்



தூத்துக்குடி எம்.பி., கனிமொழி பிறந்தநாள் விழாவில் 150க்கும் மேற்பட்ட மகளிர்க்கு இலவச தையல் இயந்திரங்களை அமைச்சர் கீதா ஜீவன் வழங்கினார்.

## பக்தர்கள் வெள்ளத்தில் மிதந்து வந்த தேர்



பழநி தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு ரத வீதியில் பக்தர்கள் வெள்ளத்தில் மிதந்து வந்த தேர்

## கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி




ஆம்பூரில் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை கலெக்டர் சிவசவுந்தரவல்லி வழங்கினார்.

# பாடம் நடத்துவதை நிறுத்திய அரசு மருத்துவர்கள் தமிழகம் முழுவதும் போராட்டம் தீவிரம்




**சென்னை, பிப்.2:**

தமிழகம் முழுவதும் போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ள அரசு மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பதை நிறுத்தியுள்ளனர்.

'முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்த அரசாணை 354-ஐ மறு ஆய்வு செய்து, அரசு மருத்துவர்களுக்கான திருத்தப்பட்ட ஊதியம், 20 ஆண்டுகள் கடந்த மூத்த முதுநிலை மருத்துவர்களுக்கு ஊக்கத்தொகை, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு படிகள் ரூ.3,000 வழங்குவது, நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய மருத்துவ பணியிடங்களை உருவாக்குவது' என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

இதற்காக, பல்வேறு சங்கங்கள் ஒருங்கிணைந்து, அனைத்து அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பை உருவாக்கி, சுகாதாரத் துறை அமைச்சர், செயலருடன் பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் தீர்வு கிடைக்கவில்லை. இதையடுத்து, தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் 20 ஆயிரம் மருத்துவர்கள் கடந்த 12-ம் தேதி முதல் கோரிக்கைகள் அடங்கிய அட்டை அணிந்து பணியாற்றினர்.

அடுத்த கட்டமாக 48 மணி நேர உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்நிலையில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பதை அரசு மருத்துவர்கள் தற்போது நிறுத்தியுள்ளனர்.

# சட்டப் பாதுகாப்புக் குழு அறிவித்தார் விஜய்

**சென்னை, பிப்.2:**

பிரச்சார அனுமதி பெறுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக தவெக-வில் தேர்தல் பிரச்சார சட்டப்பாதுகாப்புக் குழுவை அக்கட்சியின் தலைவர் விஜய் நியமித்துள்ளார்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பிரச்சாரங்களை ஒருங்கிணைக்கவும் மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்பை உறுதி செய்யவும் பல்வேறு முக்கிய குழுக்களை தவெக நியமித்துள்ளது. அந்தவகையில், தற்போது தேர்தல் பிரச்சாரத்தின் போது காவல்துறையிடம் அனுமதி பெறுவது மற்றும் சட்டப் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக, அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்களை கொண்டு, சட்டப்பேரவை தேர்தல் பிரச்சார மாநில பாதுகாப்பு குழு ஒன்றை விஜய் நியமித்துள்ளார்.

அந்தக் குழுவில், கட்சியின் இணை பொதுச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல் குமார், பொருளாளர் வெங்கட்ராமன், வழக்கறிஞர் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் அறிவழகன், சட்ட ஆலோசனைப் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் குமரேசன், இணை ஒருங்கிணைப்பாளர்கள் சிவசண்முகம், பாண்டியன், வழக்கறிஞர் பிரிவு இணை ஒருங்கிணைப்பாளர்கள் இந்திரா தன்ராஜ், சக்கரவர்த்தி, தேசிய செய்தி தொடர்பாளர் சத்யகுமார் உள்ளிட்ட 25 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவினர், கட்சியின் தேர்தல் களப்பணிகள் எந்தவித சட்டச் சிக்கல்களும் இன்றி சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் ஒரு முக்கியமான அரணாகச் செயல்படும். மேலும், தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்காணித்தல், பிரச்சார அனுமதிகளை பெறுதல், பொய் வழக்குகள் மற்றும் சட்ட நெருக்கடிகளைத் தடுத்தல், வேட்பு மனுத் தாக்கல் மற்றும் சரிபார்த்தல், மாவட்ட அளவிலான வழக்கறிஞர் அணிகளை ஒருங்கிணைத்தல், சமூக ஊடகக் கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள இருக்கின்றனர்.

# "தமிழகத்தைக் கைப்பற்ற பாஜக எடுக்கும் முயற்சி பலனளிக்காது!" - உதயநிதி ஸ்டாலின்

**சென்னை, பிப்.2:**

என்டிடிவி நிகழ்வில் பங்கேற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: "வரவிருக்கும் தேர்தல் தமிழகத்துக்கு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல். இது திராவிடத்துக்கும், பாசிச சக்திகளுக்கும் இடையிலான நடக்கும் போராக இருக்கப்போகிறது. திராவிட கருத்தியல் என்பது அனைவராலும் கடைப்பிடிக்கப்பட்டால், அது இந்தியாவை இன்னும் வலிமையாக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

'நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். என்னை திராவிடன் என்று அழைத்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். எங்களிடம் இந்த உலகத்துக்கு வழங்க திட்டவட்டமான, தெளிவான மற்றவைகளிடமிருந்து வேறுபட்ட சில திடமான, தனித்துவமான கொள்கைகள் உள்ளன என நம்புகிறேன்' என்ற அண்ணாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க வரிகளை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இவை வெறும் வார்த்தைகளோ, முழக்கமோ அல்ல. இது சுயமரியாதைக்கான பிரகடனம், சமூக நீதி மற்றும் மாநில உரிமைகளுக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பின் வெளிப்பாடு. ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சேர்ந்த மக்களின் விருப்பத்தின் விளைவாக பிறந்த ஒரு கருத்தியல், முழு தேசத்தையும் எவ்வாறு வலுப்படுத்த முடியும் என்று உங்களில் பலர் என்னிடம் கேட்கலாம். இந்த கேள்வி என்னை ஆச்சரியபடுத்தவில்லை.

திராவிட கருத்தியல் என்பது, பிரிவினையை தூண்டுவதல்ல. உண்மையில், அது பிரிவினைக்கு எதிரானது. திராவிடம் அனைவரையும் உள்ளடக்கியது. இது ஆதிக்கத்தால் விளையும் ஒருங்கிணைப்பை அல்ல, சமத்துவத்தின் மூலமான ஒற்றுமையையே வலியுறுத்துகிறது என்பதை தெளிவாகப் பதிவு செய்ய விருப்பப்படுகிறேன்.

பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியபோது, சில சுயநலவாதிகள் அது தேச ஒற்றுமைக்கு எதிரானது என்று சித்தரித்தனர். ஆனால், அவர் சமூக நீதி காக்கும் திராவிட இயக்கத்துக்குத் தலைமை தாங்கி அதை தீவிரமாக முன்னெடுத்தார்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு, அரசு அலுவலகங்களில் சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின்தங்கிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடமே இல்லை. பெரும்பாலான வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் மற்றும் பொறியாளர்கள் உயர்சாதியினராகவே இருந்தனர். இந்தத் தடைகளைத் தகர்த்து, அவற்றை மக்கள்மயப்படுத்தியது திராவிட இயக்கம்தான்.

வரும் ஆண்டுகளில், திராவிட மாடல் தமிழ்நாட்டை, புதிய உயரங்களுக்கு அழைத்துச் செல்லும், வலுவான இந்தியாவைக் கட்டமைப்பதில் முக்கிய பங்காற்றும். இந்த நேரத்தில், தமிழ்நாட்டைக் கைப்பற்ற எடுக்கும் பாஜகவின் எந்த முயற்சியும் பலனளிக்கப் போவதில்லை. நமது முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் பாசிச சக்திகளை நிச்சயம் தோற்கடித்து, வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறும் என்றார்.

# நந்தன் கால்வாய் திட்ட நில எடுப்பு பணிக்கு ரூ.42 கோடி ஒதுக்கீடு

**சென்னை, பிப்.2:**

நந்தன் கால்வாய் திட்ட நில எடுப்பு பணிக்கு ரூ.42 கோடி ஒதுக்கீடு செய்து தமிழக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்ட மக்களின் முக்கியக் கோரிக்கை, நந்தன் கால்வாய் திட்டம். சாத்தனூர் அணையின் உபரிநீர் தென்பெண்ணை ஆறு மூலமாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, அதை விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்குப் பயன்படுத்தும் திட்டமாகும். இதற்குச் சாத்தனூர் அணையில் இருந்து 23 கிலோமீட்டர் நீள ஊடு கால்வாய் மூலமாக நந்தன் கால்வா யுடன் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

செஞ்சி, விக்ரவாண்டி, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இது இருந்து வந்த நிலையில், தற்போது இந்தத் திட்டத்துக்கான நில எடுப்பு பணிக்கு ரூ.42 கோடி ஒதுக்கீடு செய்து தமிழக அரசாணை வெளி யிடப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கோரிக்கைக்காக தமிழ்நாடு சட்டமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து குரல் எழுப்பி வந்தது குறிப்பிடத்தக்கது.

# பணி வரன்முறைப்படுத்தக் கோரி பிப்.26-இல் டாஸ்மாக் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம்

**சென்னை, பிப்.2:**

கூட்டு நடவடிக்கைக் குழுவின் ஆலோசனைக்கூட்டம் வெள்ளியன்று (ஜன.30) டாஸ்மாக் ஊழியர் மாநில சம்மேளன (சிஐடியு) தலைவர் கே.திருச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், டாஸ்மாக் சில்லரை விற்பனைக் கடைகளில் 22 ஆண்டுகளாக பணிபுரியும் ஊழியர்களை பணி வரன்முறைப்படுத்த வேண்டும். நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படும் சட்டச் சலுகைகளை கடை ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும். காலி மதுபாட்டில் திரும்ப பெறும் திட்டத்தை தனி முகமை மூலம் அமல்படுத்த வேண்டும். சில்லரை விற்பனைக் கடை ஊழியர்களுக்கு நிர்வாகத்தின் மருத்துவத் திட்டத்திற்கு மாற்றாக இஎஸ்ஐ திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

ஓய்வு வயதை 60 ஆக உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட 40 அம்ச கோரிக் கைகளை வலியுறுத்தி பிப்.26 அன்று வேலைநிறுத்தம் நடைபெறும். இதற்கான அறிவிக்கையை நிர்வாகத்திற்கு வழங்குவ தோடு, முதல் வாரத்தில் மாவட்ட அளவில் வேலை நிறுத்த ஆயத்த மாநாடு, 2 ஆவது வாரத்தில் மண்டல அளவிலான ஆயத்த மாநாடு நடத்தப்படும். பிப்.15-20 தேதிகளில் அரசியல் கட்சித் தலைவர்களை சந்தித்து ஆதரவு கோரப்படும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# ராமதாஸ் தொடர்ந்த வழக்கில் பிப்.2-இல் விசாரணை

**சென்னை, பிப்.2:**

பாமகவின் பெயர், கட்சிக்கொடி, மாம்பழம் சின்னத்தை அன்புமணி அல்லது வேறு யாரும் பயன்படுத்தத் தடை விதிக்கக் கோரி, கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தரப்பு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், அன்புமணி தலைமையிலான பாமகவை அங்கீகரித்த தேர்தல் ஆணையம், தலைவர் பதவியை நீட்டித்து, மாம்பழம் சின்னத்தையும் வழங்கியது.

இது தொடர்பாகக் கடந்த ஆண்டு செப்டம்பர் 9 மற்றும் நவம்பர் 27 ஆகிய தேதிகளில் தேர்தல் ஆணையம் இரு கடிதங்களை அன்புமணி தரப்புக்கு அனுப்பியுள்ளது. இதையடுத்து, சின்னம் தொடர்பாகத் தேர்தல் ஆணையம் தமது தரப்புக்கே கடிதம் அனுப்பியிருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டிய ராமதாஸ் தரப்பு, அன்புமணிக்குத் தேர்தல் ஆணையம் அனுப்பிய கடிதத்தை ரத்து செய்யக் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய் துள்ளது.

இந்த மனு தலைமை நீதிபதி அமர்வு முன்னிலை யில் திங்கட்கிழமை (பிப்ரவரி 2) விசாரணைக்கு வரு கிறது.

# போராட்டம் ஒத்திவைப்பு

**சென்னை, பிப்.2:**

சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இடைநிலை ஆசிரியர்கள் போ ராட்டம் நடத்திவந்தநிலையில், இடைநிலை ஆசிரியர்கள் தங்களின் போராட்டத்தை தற்காலிக மாக ஒத்திவைத்துள்ளனர்.

இதனிடையே அமைச்சர் வெளியிட்டு உள்ள அறிக்கையில், "மூவர் குழு அறிக்கை விரைவில் வெளியிடப்பட இருக்கிறது. அதனடிப் படையில் இடைநிலை ஆசிரியர்களது ஊதியப் பிரச்சனைக்கு முடிவு எடுக்கப்படும்" என குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### இதயத்தை பலமாக மாற்றும் பயிறு!

நமது உடலுக்கு பருப்பு வகைகளும், பயறு வகைகளும் மிகவும் நன்மை பயக்கும் உணவுப் பொருட்களாகும். காராமணி(KARAMANI) என்று அழைக்கப்படும் தட்டைப் பயிறு பல ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது. இதில் உள்ள நார்ச்சத்து செரிமானத்திற்கு மிகவும் ஏற்றது. குடல் இயக்கத்தை சீராக்க உதவுகிறது. அதனால் உடல் எடை கூடாமல் பார்த்துக்கொள்ளும். உடல் பருமன் மிக்கவர்கள் இதை அடிக்கடி எடுத்துக் கொண்டால் உடல் எடை குறையும்.

இதில் வைட்டமின் சி, ஏ, பி, போலிக் ஆசிட், இரும்புச்சத்து, பொட்டாசியம், கால்சியம், சோடியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், தயாமின் போன்ற பல்வேறு வைட்டமின்கள் உள்ளன. இவை நோய் எதிர்ப்பு சக்திகளை கொண்டதால் உடல் ஆரோக்கியமாக விளங்கும். சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் ஏற்றது தட்டைப்பயிறு. இரத்தத்தில் சர்க்கரை அளவுகளை மிகவும் சீராக வைத்துக் கொள்ளும்.

இதயத்திற்கு இதமானது தட்டைப் பயிறு. இதில் குறைந்த அளவு கிளைசெமிக் இன்டெக்ஸ் உள்ளது. அதனால் இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ராலின் அளவுகளை கட்டுக்குள் வைத்திருக்கும். எனவே, இதயம் ஆரோக்கியமாக செயல்படும். புரதச்சத்து மிக்க தட்டைப்பயிறு உடலின் திசுக்களை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் ஒட்டுமொத்த உடல் செயல்பாட்டிற்கும் உதவுகிறது.

தொடர்ந்து தட்டைப்பயிறை உணவில் சேர்த்துக் கொள்பவர்களுக்கு கூந்தல் ஆரோக்கியமாக இருக்கும். முடி உதிர்வையும் குறைக்கும். இதில் உள்ள வைட்டமின் ஏ மற்றும் சி சத்துக்கள் ஆன்டி ஆக்சிடென்ட் குணங்கள் நிறைந்தது. இதனால் இயக்க உறுப்புகளால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து சரும அணுக்களை பாதுகாக்கின்றன. பளபளப்பான சருமம் கிடைக்கும். இத்தனை நன்மைகள் நிறைந்த தட்டைப் பயிறை வாரத்தில் இரண்டு நாட்களாவது எடுத்துக் கொள்வது உடல் நலத்துக்கு ஆரோக்கியமாகும்.

தட்டைப் பயிறை மசாலா அரைத்து குழம்பாக செய்து உண்ணலாம். முளைகட்டி பச்சையாக உண்ணலாம். மேலும், முளைகட்டிய தட்டை பயிறு குழம்பும் செய்யலாம். அடை செய்யும்போது பிற பருப்புகளுடன் தட்டைபயறையும் சேர்த்து செய்தால் மிகவும் சுவையாக இருக்கும். மோர் குழம்பு, பருப்பு உருண்டை குழம்பும் செய்யலாம்.

அவியல் செய்தும் சாப்பிடலாம். துவையல் அரைத்து சாப்பிட்டாலும் சுவையாக இருக்கும். கல்யாண வீடுகளில் சாம்பார், ரசம் மற்றும் நவராத்திரி சமயங்களில் சுண்டல் போன்ற உணவுகளில் தட்டைப்பயிறு பயன்படுத்தப்படுகிறது.

### பாலில் 'முருங்கை தேன்' கலந்தால்....

முருங்கை பூ தேன் (MORINGA FLOWER HONEY BENEFITS) என்பது, முருங்கை தோட்டங்களில் கூடு வைத்து தேனீ வளர்க்கப்பட்டு அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேன் ஆகும். ஏராளமான மருத்துவ குணங்கள் நிறைந்தது இந்த முருங்கை தேன். இது, முருங்கை மரத்தின் மருத்துவ குணங்களையும் தேனின் ஊட்டச்சத்துக்களையும் ஒருங்கே கொண்ட ஒரு சக்திவாய்ந்த இயற்கை உணவுப் பொருளாகும்,

முருங்கைப்பூ தேனில் புரதம், கொழுப்பு, நார்ச்சத்து, தாது உப்புகள் (கால்சியம், இரும்பு, மக்னீசியம், பொட்டாசியம்), வைட்டமின்கள் (A, C, E) மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன.

இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் (ANTIOXIDANTS) உடலின் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துகின்றன, நோய்த்தொற்றுகளுக்கு எதிராகப் போராடுகின்றன.

கம்ப்யூட்டர் மற்றும் தொலைக்காட்சியின் முன் நீண்ட நேரம் அமர்ந்திருப்பது கண்களுக்கு பெரும் தீங்கிழைக்கிறது. இதில் இருந்து நிவாரணம் பெற, முருங்கை தேனை பாலில் கலந்து நன்கு காய்ச்சி சாப்பிடலாம்.

முருங்கை தேன் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை குறைத்து இருதய செயல்பாட்டை மேம்படுத்துகிறது. இது குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, அஜீரணம், வாயுத்தொல்லை போன்ற பிரச்னைகளைத் தீர்க்கிறது.

வறட்சியான சருமம் கொண்டவர்கள், இத்தேனை முகத்தில் தடவி, ஈரப்பதத்தை அதிகரிக்கச் செய்து, முகப்பொலிவு பெறலாம்.

# வாக்காளர் பட்டியலில் திருத்தம் கோரி 35 லட்சம் பேர் விண்ணப்பம்: பெயர் சேர்ப்பதற்கான அவகாசம் நிறைவு

**சென்னை, பிப்.2:**

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அவகாசம் நிறைவடைந்த நிலையில், பெயர் சேர்க்க, திருத்தங்கள் செய்யக்கோரி இதுவரை 34.75 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். பிப்.17-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.



தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் உயிரிழந்த வாக்காளர்கள், முகவரி மாறியவர்கள், உரிய ஆவணங்கள் இல்லாதவர்கள் உள்ளிட்டோரின் பெயர்கள் நீக்கப்பட்டு வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த டிச.19-ம் தேதி வெளியிடப்பட்டது.

தமிழகத்தில் கடந்த அக்.27-ம் தேதி நிலவரப்படி, 6.41 கோடி வாக்காளர்கள் இருந்தனர். ஆனால் வரைவு வாக்காளர் பட்டியலில் 5.43 கோடி பேர் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். மொத்தம் 97.37 லட்சம் வாக்களர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. இந்நிலையில், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட டிச.19 முதல் ஜன.30-ம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் செய்வதற்கான அவகாசம் வழங்கப்பட்டது. இதில் பெயர் சேர்க்க 17.10 லட்சம் பேரும் நீக்கம் செய்யக் கோரி 1.84 லட்சம் பேரும் திருத்தம் கோரி 5.51 லட்சம் பேரும் என மொத்தம் 24.47 லட்சம் வாக்காளர்கள் அதற்குரிய படிவங்களை பூர்த்தி செய்து வழங்கியிருந்தனர்.

இதே காலகட்டத்தில் இணையவழியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 5.74 லட்சம், நீக்கல் கோரி 15,935, திருத்தம் கோரி 4.38 லட்சம் என 10.28 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தனர். ஆக மொத்தம் 34 லட்சத்து 75,717 பேர் விண்ணப்பித்திருந்தனர். இந்த விண்ணப்பங்கள் வாக்காளர் பதிவு அலுவலர்கள் மூலம் சரி பார்க்கப்பட்டு வருகிறது. இதற்கிடையே, இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.17-ம் தேதி வெளியாக உள்ளதாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து விண்ணப்பிக்கலாம்: வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அவகாசம் முடிவடைந்தாலும், 18 வயது பூர்த்தியானவர்கள் தொடர்ந்து விண்ணப்பிக்கலாம். வாக்காளர் பட்டியலில் திருத்தம் கோரியும் விண்ணப்பிக்கலாம். இவர்களின் பெயர்கள் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெறாது. ஆனால் சட்டப்பேரவை தேர்தலின்போது துணைப் பட்டியலில் சேர்க்கப்படும். எனவே, இத்தேர்தலில் அவர்கள் வாக்களிக்க முடியும் என தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## திமுக தேர்தல் வாக்குறுதிகள் மார்ச் 15-இல் வெளியீடு

**சென்னை, பிப்.2:**

தமிழ கத்தில் வரவிருக்கும் சட்ட மன்றத் தேர்தலை யொட்டி, திமுகவின் தேர்தல் வாக்குறுதிகள் மார்ச் 15 ஆம் தேதி வெளியிடப்படும் என கட்சி யின் செய்தித் தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன் அறிவித்துள்ளார். மார்ச் 10 ஆம் தேதிக்குள் மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு குழுக்களுடன் ஆலோ சனை நடத்திய பின்னரே தேர்தல் அறிக்கையை இறுதி செய்வதாக அவர் தெரிவித்தார். மக்களின் தேவைகளையே முதன் மையாகக் கருதி வாக்கு றுதிகள் தயாரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மருத்துவ சிகிச்சை பெற தமிழகம் வரும் வெளிநாட்டினர்

**சென்னை, பிப்.2:**

வெளிநாடு களில் இருந்து மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக ஆண்டுதோறும் சுமார் 15 லட்சம் பேர் தமிழகத்திற்கு வருகை தருகிறார்கள் என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்து உள்ளார். இந்தியாவுக்கு மருத்துவம் பார்க்க வரும் வெளிநாட்டவர்களில் 25 சதவீதம் பேர் தமிழ்நாட்டுக்கு வருவதாக அவர் குறிப்பிட்டார். நோயாளர் களுக்கு சிறந்த சிகிச்சை வழங்குவதற்காக தமிழ் நாட்டுக்கு ஐக்கிய நாடுகள் சபை விருது வழங்கியுள்ள தாகவும் அவர் பெருமை யுடன் தெரிவித்தார்.

## தேசிய டேக்வாண்டோ போட்டி தங்கம் வென்ற மாணவிக்கு பாராட்டு

**கிருஷ்ணகிரி, பிப்.2:**

மேற்கு வங்க மாநிலம் கொல்க த்தாவில் நடைபெற்ற தேசிய அளவிலான டேக்வாண்டோ போட்டியில், கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் வேளாங்கண்ணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் ஒன்பதாம் வகுப்பு மாணவி தஷண்யா சாதனை படைத்துள்ளார். 55 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற மாணவி தஷண்யா, அபாரமாக விளையாடி தங்கப் பதக்கம் வென்றார். வெற்றி பெற்ற மாணவிக்கு பள்ளி நிர்வாகம் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இதில் பள்ளியின் தாளாளர் கூத்தரசன் கலந்துகொண்டு மாணவியைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்தார். இந்நிகழ்வின் போது பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

## கண்டன ஆர்ப்பாட்டம்

**விழுப்புரம், பிப்.2:**

மருத்துவத் துணைப் படிப்புகளிலும் (PARA MEDICAL) நீட் தேர்வைத் திணிக்கும் ஒன்றிய அரசின் முடிவைக் கண்டித்து, விழுப்புரத்தில் சனிக்கிழமை (ஜன.31) கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திராவிட மாணவர் கழக மாநில இணைச் செயலாளர் நாகை மு.இளமாறன் இந்த ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கினார். இதில் இந்திய மாணவர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் மு.ஜீவானந்தம், முற்போக்கு மாணவர் கழக வி.அகத்தியன், சமூக நீதி மாணவர் கழக மண்டலப் பொறுப்பாளர் ஒசாமா, ஆகியோர் கலந்துகொண்டு ஒன்றிய அரசை வன்மையாகக் கண்டித்து உரையாற்றினர்.

# வடலூரில் தைப்பூச ஜோதி தரிசன பெருவிழா கொடியேற்றம்

**கடலூர், பிப்.2:**



வடலூரில் வள்ளலார் நிறுவிய சத்திய ஞான சபை யில் 155-வது ஆண்டு தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா கொடியேற்றம் நேற்று நடை பெற்றது. இதில் ஏராளமான வள்ளலார் பக்தர்கள் கலந்து கொண்டனர். (பிப்.1) ஜோதி தரிசனம் நடைபெறுகிறது.

கடலூர் மாவட்டம் வடலூரில் உள்ள சத்திய ஞான சபையில் ஆண்டு தோறும் தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா விமரிசை யாக நடைபெறும். அதன் படி, 155-வது ஆண்டு ஜோதி தரிசன விழாவையொட்டி நேற்று அதிகாலை 5 மணிக்கு அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் பாடப்பட்டது.

காலை 7.30 மணிக்கு தரும சாலையில் சன்மார்க் கக் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து, வள்ளலார் பிறந்த ஊரான மருதூர் வள்ளலார் சந்நிதியில் கிராம மக்களால் கொடியேற்றப்பட்டது.

பின்னர், பார்வதிபுரம் கிராம மக்கள் பழங்கள், சீர் வரிசைப் பொருள்களுடன், வள்ளலார் பயன்படுத்திய பொருள்களை பல்லக்கில் வைத்து, மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக சத்திய ஞான சபை வளாகத்துக்கு கொண்டு வந்தனர்.

பின்னர், சன்மார்க்க அன் பர்கள் வள்ளலாரின் பாடல் களைப் பாடினர். காலை 10 மணியளவில் சன்மார்க் கக் கொடியேற்றம் நடை பெற்றது. இன்று காலை 6 மணிக்கு சத்திய ஞானசபை யில் முதல் ஜோதி தரிசனம் நடைபெறும்.

தொடர்ந்து, காலை 10 மணி, நண்பகல் 1 மணி, இரவு 7 மணி, இரவு 10 மணி, நாளை (பிப்.2) காலை 5.30 மணிக்கு 7 திரைகளை நீக்கி ஜோதி தரிசனம் நடை பெறும்.

வரும் 3-ம் தேதி மேட் டுக்குப்பத்தில் சித்திவளாக திருஅறை தரிசனம் நடை பெறும். கடலூர் எஸ்.பி. ஜெயக்குமார் தலைமையில் 2 ஆயிரம் போலீஸார் பாது காப்புப் பணியில் ஈடுபட் டுள்ளனர்.

அவர்களுக்கு முன்பாக 'வைர வேல்' வைக்கப்பட்ட பெட்டி மாட்டு வண்டியில் பலத்த பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டது. விழாவையொட்டி மாவட்ட நிர்வாகம், போலீஸ் நிர்வாகம் இணைந்து அடிப்படை வசதிகள் செய்து வருகிறது.

# தைப்பூசத் திருவிழாவையொட்டி பழநி கோயிலில் திருக்கல்யாண உற்சவம்

**பழநி, பிப்.2:**



பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான பெரியநாயகி யம்மன் கோயிலில் தைப் பூசத் திருவிழா ஜன. 26-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமார சுவாமி பல் வேறு வாகனங்களில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். தினமும் ஆயிரக்கணக்கான பக்தர் கள் பாதயாத்திரையாகவும், பேருந்துகள், ரயில்கள் மற் றும் சொந்த வாகனங்களி லும் பழநி வந்த வண்ணம் இருக்கின்றனர்.

விழாவின் 6-ம் நாளான நேற்று இரவு 7 மணிக்கு மேல் திருக்கல்யாண உற் சவம் கோலாகலமாக நடை பெற்றது. தொடர்ந்து, இரவு 9 மணிக்கு மேல் மணக் கோலத்தில் வள்ளி, தெய் வானை சமேத முத்துக்கு மார சுவாமி வெள்ளித்தேரில் எழுந்தருளி நான்கு ரத வீதி களில் வலம் வந்து பக்தர் களுக்கு காட்சியளித்தார்.

விழாவின் முக்கிய நிகழ் வான தேரோட்டம் இன்று மாலை நடைபெற உள்ளது. இதையொட்டி, இன்று அதி காலை 5 மணிக்கு மேல் முத் துக்குமார சுவாமி தோளுக் கினியானில் சண்முக நதிக்கு எழுந்தருள்கிறார். பின்னர், காலை 11.15 மணிக்கு மேல் தேரேற்றம் நடைபெற உள் ளது.

இதைத் தொடர்ந்து, மாலை 4 மணிக்கு மேல் நான்கு ரத வீதிகளில் தேரோட்டம் நடைபெற உள்ளது. இரவு 7 மணிக்கு மேல் தேர்க்கால் பார்க்கும் நிகழ்ச்சி நடை பெறும். மேலும் பிப். 4-ம் தேதி காலை 9 மணிக்கு திரு வூடல் நிகழ்ச்சியும், இரவு 7 மணிக்கு மேல் தெப்பத் திருவிழாவும் நடைபெறும். அன்று இரவு 11 மணிக்கு மேல் கொடி இறக்குதலுடன் திருவிழா நிறைவு பெறு கிறது.

தைப்பூசத்தை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் பழநியில் குவிந்து வருவதால், போலீஸார் பாதுகாப்பு பணியைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

# "ரங்கா...கோவிந்தா..." - பக்தர்கள் வெள்ளத்தில் மிதந்து வந்த ஸ்ரீரங்கம் தைத்தேர்

**ஸ்ரீரங்கம், பிப்.2:**

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் தைத்தேரோட்டம் நடைபெற்றது. பக்தர்கள் "ரங்கா.. ரங்கா.. கோவிந்தா.. கோவிந்தா.." என்ற கோஷங்கள் விண்ணதிர தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

பூலோக வைகுண்டம் என்றும், 108 வைணவத் திருத்தலங்களில் முதன்மையானதாகவும் விளங்கும் திருத்தலம் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில். இங்கு ஆண்டுதோறும் தை மாதத்தில் நடைபெறும் பூபதி திருநாள் எனப்படும் தைத்தேர் திருவிழா ஜன.23-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தினந்தோறும் யாளி வாகனம், கருட வாகனம், யானை வாகனம், தங்க குதிரை உள்ளிட்ட பல்வேறு வகையான வாகனங்களில் உபயநாச்சியார்களுடன் நம்பெருமாள் எழுந்தருளி உத்திர வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு சேவை சாதித்தார். தை தேர் உற்சவத்தின் 9-ம் திருநாளான இன்று தைத்தேரோட்டம் நடைபெற்றது. இதற்காக அதிகாலை 4 மணிக்கு நம் பெருமாள் முத்துப்பாண்டியன் கொண்டை அலங்காரத்தில் உபநாச்சியார்களுடன் மூலஸ்தானத்தில் இருந்து புறப்பட்டு தைத் தேர் மண்டபம் வந்தடைந்தார். பின்னர் தனுர் லக்னத்தில் அலங்கரிக்கப்பட்ட தேரில் நம்பெருமாள் உபய நாச்சியார்களுடன் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

சரியாக காலை 6 மணிக்கு பக்தர்கள் "ரங்கா.. ரங்கா.. கோவிந்தா.. கோவிந்தா.." கோஷங்கள் விண்ணதிர தேரை வடம் பிடித்து இழுத்தனர். நான்கு உத்தர வீதிகளில் பக்தர்கள் வெள்ளத்தில் ஆடி அசைந்தபடி வலம் வந்த தைத்தீர் சரியாக காலை 9 மணிக்கு நிலையை வந்து அடைந்தது.இந்தத் தை தேரில் மட்டும்தான் நம்பெருமாள் உபய நாச்சியார்களுடன் எழுந்தருளுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீரங்கம் கைத்தேர் திருவிழாவையொட்டி ஸ்ரீரங்கம் காவல் ஆய்வாளர் திருவானந்தம் தலைமையில் 150-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## தமிழகத்தில் பிப். 6-ம் தேதி வரை மிதமாக மழை பெய்ய வாய்ப்பு

**சென்னை, பிப்.2:**

சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளி யிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: லட்சத்தீவு, கேரளா மற்றும் அதையொட்டிய தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நில வுகிறது. தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசைக் காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத் தில் 2-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களி லும், 3-ம் தேதி கடலோர மாவட்டங்களிலும், 4-ம் தேதி தமிழகத்தில் சில இடங்களிலும், 5-ம் தேதி ஓரிரு இடங் களிலும், 6-ம் தேதி தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட் டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்யக் கூடும். வரும் 2, 3, 4-ம் தேதிகளில் கிருஷ்ணகிரி, திருப் பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை நேரத்தில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

## ஆசிரியர் பணி தகுதிக்கான 'டெட்' தேர்வில் 1.50 லட்சம் பேர் தேர்ச்சி

**சென்னை, பிப்.2:**

பள்ளி ஆசிரியர் பணித் தகுதிக்கான 'டெட்' தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. இதுவரை இல்லாத அளவுக்கு 1.50 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஆசிரியர்கள் தங்களது தேர்ச்சி சான்றிதழை (பிப்.2) முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று டிஆர்பி தெரிவித்துள்ளது. இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி, அனைத்து விதமான பள்ளிகளிலும் இடைநிலை, பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர தகுதித் தேர்வில் (டெட்) தேர்ச்சி பெறவேண்டும். இந்த தேர்வு மொத்தம் 2 தாள்களை கொண்டது. முதல் தாளில் தேர்ச்சி பெறுவோர் இடைநிலை ஆசிரியராகவும், 2-ம் தாளில் தேர்ச்சி பெறுவோர் பட்டதாரி ஆசிரியராகவும் பணிபுரியலாம். தமிழகத்தில் ஆசிரியர் தேர்வு வாரியம் (டிஆர்பி) மூலம் டெட் தேர்வு நடத்தப்படுகிறது. கடந்த 2025-ம் ஆண்டுக்கான டெட் தேர்வு கடந்த நவம்பர் 15, 16-ம் தேதிகளில் நடைபெற்றது. 4.24 லட்சம் பேர் தேர்வு எழுதினர். மொத்தம் 150 மதிப் பெண்கள் கொண்ட டெட் தேர்வில் தேர்ச்சி பெற, பொதுப் பிரிவினர் 60 சதவீதமும் (90 மதிப்பெண்), இடஒதுக்கீட் டுப் பிரிவினர் 55 சதவீதமும் (82 மதிப்பெண்) எடுக்க வேண்டும். ஆந்திரா, தெலங்கானா, ஒடிசாவைப் பின் பற்றி, தமிழகத்திலும் சமீபத்தில் இடஒதுக்கீட்டுப் பிரி வினருக்கு டெட் தேர்ச்சி மதிப்பெண் 5 சதவீதம் வரை குறைக்கப்பட்டது. இணையதளத்தில் முடிவுகள்: அதன் அடிப்படையில், டெட் தேர்வு முடிவுகளை டிஆர்பி நேற்று முன்தினம் இரவு வெளியிட்டது. தேர்வு முடிவு விவரங்களை HTTP://TRB.TN.GOV.IN என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். ஆசிரியர்கள் தங்களது தேர்ச்சி சான்றிதழை நாளை (பிப்.2) முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று டிஆர்பி தெரிவித்துள்ளது.

# மேகங்களை வைத்து மழையோ, புயலோ, சூறைக்காற்றோ... எப்படி கண்டுபிடிப்பது?

மனித வாழ்க்கை இயற்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டது. இயற்கையின் பல கூறுகளில் வானிலை மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. மனிதனின் அன்றாட வாழ்க்கை பாதுகாப்புக்காக வானிலையின் நிலையை அறிய சூரியன், காற்று, மழை, வெப்பநிலை, காற்றழுத்தம் மற்றும் மேகங்கள் போன்ற பல காரணிகள் ஆராயப்படுகின்றன. அவற்றில் மேகங்களின் உருவாக்கம், நகர்வு, வேகம் மற்றும் இயக்கதிசை ஆகியவை இயற்கை நிகழ்வுகளை முன்னறிவிக்க உதவுகின்றன. இவ்வாறு மேகங்களின் இயக்கத்தை அளவிட உதவும் முக்கிய கருவி தான் நெபோஸ்கோப் (Nephoscope) ஆகும்.

சூரிய வெப்பத்தின் காரணமாக, நீர் ஆவியாகி, மேலே எழுந்து குளிர்ந்து திரளும்போது மேகங்கள் உருவாகின்றன. மேகங்கள் பல வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. சீரஸ் (Cirrus), க்யூமுலஸ் (Cumulus), ஸ்ட்ராட்டஸ் (Stratus), நிம்பஸ் (Nimbus).

இந்த மேகங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு உயரத்திலும், வேகத்திலும், திசையிலும் நகர்கின்றன. அவற்றின் இயக்கத்தை அறிந்தால், எதிர்கால வானிலை நிலைகளை கணிக்க முடியும். இதற்கு நெபோஸ்கோப் (Nephoscope) உதவுகிறது. 'Nepho' என்ற கிரேக்கச் சொல் மேகம் என்பதையும், 'Scope' என்ற சொல் பார்ப்பது அல்லது கண்காணிப்பது என்பதையும் குறிக்கிறது.

இதன் மூலம் வானில் நகரும் மேகங்கள் எந்த திசையில் செல்கின்றன, எவ்வளவு வேகத்தில் நகர்கின்றன என்பதைக் கண்டறிய முடிகிறது.



நெபோஸ்கோப்பின் அமைப்பு: நெபோஸ்கோப் பொதுவாக வட்ட வடிவ அமைப்பைக் கொண்டுள்ளது. அதில் திசைகளை குறிக்கும் கோடுகள், அளவீட்டு கோடுகள், சில நேரங்களில் கண்ணாடி அல்லது பிரதிபலிப்பு தளம் உள்ளன. இந்த அமைப்பு மூலம் மேகங்களின் நகர்வை எளிதாகக் கண்காணிக்க முடிகிறது.

செயல்முறை: நெபோஸ்கோப் பயன்படுத்தப்படும் போது, வானில் நகரும் மேகங்கள் கவனிக்கப்படுகின்றன. மேகம் எந்த திசையில் நகர்கிறது என்பதை முதலில் கண்டறிகிறார்கள். குறிப்பிட்ட நேர இடைவெளியில் மேகம் எவ்வளவு தூரம் நகர்கிறது என்பதை கணக்கிடுகிறார்கள். மேகத்தின் உயரம் தெரிந்தால், அதன் வேகத்தை துல்லியமாக கணக்கிட முடியும். இவ்வாறு அறிவியல் முறையில் மேகங்களின் இயக்கம் பதிவுசெய்யப்படுகிறது.




நெபோஸ்கோப்பின் பயன்பாடுகள்:

1.வானிலை முன்னறிவிப்பு: மேகங்களின் இயக்க திசையும் வேகமும் மழை மற்றும் புயலின் வருகையை முன்கூட்டியே அறிவிக்க உதவுகின்றன. இதன் மூலம் மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க முடிகிறது.

2. விவசாயத்தில் பயன்பாடு: விவசாயிகள் மழை காலத்தை அறிந்து விதைப்பு, அறுவடை போன்ற பணிகளை திட்டமிட முடிகிறது. நெபோஸ்கோப் மூலம் பெறப்படும் தகவல்கள் விவசாயத்திற்கு பெரிதும் உதவுகின்றன.

3. விமானப் போக்குவரத்து: விமானங்கள் பறக்கும் போது மேகங்களின் இயக்கம் மிக முக்கியமானது. மேகங்களின் திசை மற்றும் வேகம் தெரிந்தால் விமானப் பயணம் பாதுகாப்பாக அமையும்.

4. கடல் பயணம்: கடலில் பயணம் செய்யும் கப்பல்களுக்கு புயல் மற்றும் மழை பற்றிய முன்னறிவிப்பு அவசியம். நெபோஸ்கோப் இதற்கும் உதவுகிறது.

# "காணாமல் போன குட்டிநாய்"

அந்த தெருவில் இன்று சத்தமே இல்லை.
ஒரே ஒரு சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.
அது தீக்ஷா பாப்பாவின் அழுகைச் சத்தம்.

"ஜூலி... ஜூலி..."
சிறுமியின் குரல், வீட்டின் வாசலிலிருந்து தெருமுனை வரை ஒலித்தது.
நேற்று வரை அவள் பின்னாலேயே ஓடித் திரிந்த குட்டி நாய்
இன்று காணாமல் போய் விட்டிருந்தது.

ஜூலி வந்த முதல் நாளை தீக்ஷா மறக்கவில்லை. மழையில் நனைந்து நடுநடுங்கி நின்றிருந்த அந்தச் சின்ன உயிரை அவள் அப்பா தான் வீட்டுக்குக் கொண்டு வந்தார்.

கொண்டு வந்த அன்று, "இன்று ஒரு நாள் மட்டும் இருக்கட்டும்.. நாளை கொண்டு போய் எங்காவது விட்டு விடலாம்" என்றார். ஆனால் அந்தக் குட்டி நாயே தீக்ஷாவின் உலகமாகிப் போனதால் அமைதியானார்.
பள்ளியிலிருந்து வந்ததும்
முதலில் அவள் கண்கள் தேடுவது
ஜூலியின் வாலாட்டு வைபவத்தை.
எப்போதும் வாசல் கதவைச் சாத்தியே வைத்திருப்பாள். "எங்காச்சும் ஓடிப் போயிடுச்சுன்னா..." என்பாள்.
இன்று... வாசல் திறந்திருக்கிறது.
ஜூலி இல்லை.

அம்மா சொன்னாள், "தீக்ஷா அது எங்காவது ஓடிப் போயிருக்கும் விடு."
அப்பா அமைதியாக இருந்தார்.
அந்த அமைதி தீக்ஷாவை இன்னும் பயமுறுத்தியது.
தெருவெங்கும் ஓடினாள். ஒவ்வொரு வீட்டிலும் கேட்டாள்.
"எங்க குட்டி நாய் பார்த்தீங்களா?"
அப்போதுதான் யாரோ சொன்னார்கள்,
"ரோட்ல ஒரு நாய் அடிபட்டுக் கிடக்குதாமே..."
அந்த ஒரு வாக்கியம்
தீக்ஷாவின் கண்ணீரை நிறுத்தியது.
அவளுக்குள் ஏதோ உடைந்து விழுந்தது.
மாலை வந்தது. வீட்டில் சாப்பாடு தயார்.
தீக்ஷா தட்டைக் கூடத் தொடவில்லை.
"ஜூலி திரும்பி வந்தால்தான் சாப்பிடுவேன்"
என்று வாசலிலேயே உட்கார்ந்தாள்.
மெல்ல அவளருகில் வந்தமர்ந்தார் அவள் தந்தை கோபால்.
"தீக்ஷா... ஒரு உண்மை சொல்லுவேன் நீ கத்திக் களேபரம் பண்ணக் கூடாது."
அவள் தலையை உயர்த்தினாள்.
அவள் கண்களில் குழந்தைத்தனம் இல்லை.
ஒரு தாய் தெரிந்தாள்.
"தீக்ஷா... நேற்று ராத்திரி ரோட்டுல..."
அப்பாவின் குரல் உடைந்தது.
தீக்ஷா எதுவும் பேசவில்லை. மெல்ல எழுந்து, வீட்டுக்குள் சென்று
ஜூலிக்காக வைத்திருந்த சிறிய கிண்ணத்தை எடுத்தாள்.



அதைக் கொண்டு போய் வாசலில் வைத்தாள். "பரவாயில்லைங்க அப்பா... ஜூலி போனா என்ன...
இன்னொரு குட்டி நாய் வாங்கிக்கலாம்."

அப்பா அதிர்ந்தார். அம்மா அழுதாள்.
தீக்ஷா தொடர்ந்தாள்.
" அப்பா... நீங்க அடிச்சுத் துரத்தியதால்தான்
ஜூலி ரோட்டுக்குப் போச்சு...
நான் பார்த்தேன்."
நெஞ்சில் கை வைத்து
அதிர்ந்தார் தந்தை.
அன்று இரவு தீக்ஷா
அழவில்லை
முதன் முறையாக
அவள் தந்தை
உடைந்து
போய்க்
கதறினார்.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# கமழி



இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் போதெல்லாம் கமழியை அவள் வீட்டுவாசலில் பார்த்துவிட்டுச் செல்வான் செழியன்.
எப்போதும் சிரித்த முகத்தோடு கலையாக இருப்பவள் கமழி. குண்டு முகம். கருத்த நிறம். வெள்ளை நிற முல்லை பூக்களுக்கு நிகரான வரிசையான பற்கள். அடர்த்தியான நீளமானக் கூந்தல் இவை அனைத்தும் கமழின் உடல் மொழியின் அடையாளங்கள்.
வளைவான சாலை. வரிசையாய் புளிய மரங்கள். மும்முனை சந்திப்பில் இடது பக்கத்தில் உள்ளது கமழியின் கட்டி முடிக்கப்படாத கல்லு வீடு.
பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் கடை விரித்து வகை வகையாய் மீன்களை அடுக்கி வைத்திருந்தால் அனலிக்கா.
வாகனங்கள் நொடிகொண்று வருவதும் போவதுமாக இருந்தது. இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஈ மொய்த்த மீன்களை இடது கையால் ஓட்டியவாறு "வாங்கனா, என்ன கொஞ்சம் நாளா காணோம்" என்றால் அனலிக்கா.
ஓரமாக வண்டியை நிறுத்தி "எங்கம்மா. நான் வழக்கமா வந்துட்டுதான் இருக்கேன். உன்னதமா பார்க்க முடியல" என்றான் செழியன்.
"ஆமாண்ணா உடம்பு சரியில்ல. அதான் இந்தப் பக்கம் வர முடியல" என" கவல மீனு இருக்கு. அப்படியே வாங்கிக்கண்ணா. சீக்கிரமா வீட்டுக்குப் போயிடுவேன்" என உரிமையோடு கேட்டாள் அனலிக்கா. " கமழிய கூப்பிடவா?" என்று சிரித்தாள்
"பதிலுக்குச் சிரித்துவிட்டு, கமழியைப் பற்றிப் பேசாமல், சரிம்மா அப்படியே ஆஞ்சிக் கொடுத்துடு. திரும்பி வரும்போது வாங்கிக்கிறேன்" எனச் சொல்லிவிட்டு இருசக்கர வாகனத்தில் புறப்பட்டான் செழியன்.
எப்போதும் இந்தப் பக்கம் வந்தாலும் கமழியைப் பார்த்துவிட்டுச் செல்லும் செழியனின் பார்வை இன்று அவள்மீது படாமல் போனதால், வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தவளின் முகம் லேசாக வாடியது.
அன்று இரவு முழுவதும் கமழி சரியாகத் தூங்கவில்லை. மறுநாள் காலையிலிருந்து அவளின் கலையான முகத்தில் சோகக் கோடுகள் பரவிப் படர்ந்திருந்தது. வழக்கமாகச் செய்ய வேண்டிய வேலைகளில் அவளுக்கு நாட்டம் இல்லை. "ஏண்டி அப்படியே உக்காந்துட்டு இருக்க. போட்ட வேலை அப்படியே இருக்கு. எனக்கு வேற நேரம் ஆகுதுடி" எனக் கோபமாகக் கத்தினாள் அவள் அம்மா.
அம்மாவின் அதட்டலுக்கு அசராமல் வாசலில் சோகமான முகத்தோடு உட்கார்ந்திருந்தாள் கமழி. மார்கழி குளிருக்கு காலை இளம் சூரியஒளி அவள் உடலுக்கு இதமாக இருந்தது. "தோட்டத்தில் இருக்கிற பூவையாவது பெரியாண்டி, உதிர்ந்து கீழே கொட்டுது" என டிசம்பர் பூவை ஞாபகப்படுத்தினாள். டிசம்பர் பூக்கள்மீது கொள்ளை ஆசை கமழிக்கு.
சிரித்த முகத்தோடு வெடுக்கென எழுந்த கமழி, கழுவி காய வைத்திருந்த அலுமினிய கிண்ணத்தை எடுத்துக்கொண்டு தோட்டத்திற்கு சென்றாள். சட்டெனச் சூரிய வெளிச்சம் குறைந்தது. மேகங்கள் வானத்தில் ஊர்வலம் நடத்தின. சில நேரங்களில் கார்திகை கனமழை பொழியாதபோது, மார்கழியில் வெளுத்து வாங்கும். மேகமூட்டத்தோடு இருந்தது வானம்.
வருத்தத்தில் படுத்துத் தூங்கினாள் கமழி.
சாரல் நகர் முழுவதும் தூறல் போடத் துவங்கியது. செழியன் இரண்டுச் சக்கர வாகனத்தில் தூரல் அதிகமாக வருவதற்குள் மழையூருக்கு சென்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் வேகமாக வாகனத்தை ஓட்டினான்.
வெள்ளிக்கிழமை என்பதால் கவலை மீனை விற்க முடியவில்லையே என்ற கவலையோடு உட்கார்ந்திருந்தால் அனலிக்கா.
வேலைக்குச் சென்று வீடு திரும்பிய அம்மா மழையில் நனையாமல் இருக்க முந்தானையை தலைக்கு மேலே போட்டுக்கொண்டு வேகமாக நடந்துவர.
இருசக்கர வண்டியிலிருந்து இறங்கி மழைக்காகப் புளிய மரத்தடியில் ஒதுங்கி நின்றிருந்தான் செழியன்.
"ஏண்டா இங்கே நிக்கிற. வீட்டுக்கு வா" எனத் தம்பியை அழைத்தால் கமழியின் அம்மா.
மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு தூரலுக்கு ஒதுங்க ஓடி வந்தான் செழியன்.
தூங்கி எழுந்து கொட்டாவி விட்டபடி, நெற்றியில் தொட்ட கருத்து முடியைப் பின்னோக்கி தள்ளிவிட்டபடியே வெளியே வந்தாள் கமழி.
"எந்த வேலையும் செய்யாத. தின்னுட்டு தின்னுட்டு தூங்கு" என எரிச்சலோடு தொடப்பத்தை எடுத்து வீடு பெருக்கினாள் கமழியின் அம்மா.
"ஏண்டா அங்க நிக்கிற. உள்ள வா" என அழைக்க,
வெளியே நின்றிருந்த மாமனைப் பார்த்த கமழி"வராத, அங்கேயே நில்லு. நேத்து அப்படியே பாக்காம போன. இன்னைக்கு மழைக்கு ஒதுங்க வந்துருக்கியா?" எனக் கோபமாகக் கேட்டாள் கமலி.
"அவன் கூட என்னடி வம்பிழுக்கற" என அதட்ட,
"விடுக்கா ஆசையா திட்டுறா." எனக் கமழியைப் பார்த்துச் சிரித்தவன், பின்னால் மறைத்து வைத்திருந்த டிசம்பர் பூவை அவளிடம் நீட்டினான்.
திட்டுவதை நிறுத்தி, அசடுவழியச் சிரித்து செழியன் கொடுத்தப் பூவை வாங்கிக்கொண்டு "வா மாமா."எனக் கமழி அழைத்தாள்.
ஆசையாய் வாங்கி வந்தப் பூவைத் தன் மகளுக்குத் தம்பி கொடுக்கிறான் என்று தெரிந்துகொண்டவள், "இதுக்குள்ள என்னடி ஆச்சு உனக்கு, இப்பவே இப்படின்னா, அவனக் கட்டிகிட்டப் பிறகு என்னென்னப் பாடுபடுத்தப் போறியோ" எனத் திட்டியபடியே வேலையைச் செய்தாள்.
தலைகொள்ளப் பூ'வை வைத்துக்கொண்டு சட்டெனக் கமழி திரும்ப,
செழியனின் பார்வை கமழியின் முகம் பார்க்க. கமழி செழியனை நேர்கொண்டுப் பார்க்காமல், சற்று விளகியப் பார்வையால் பார்த்தாள். அவள் பார்த்த நொடியில் கனத்த மனதுடன் கண்ணீர் சிந்தினான் செழியன்.
புரிந்துகொண்ட கமழி" விடு மாமா ... உன்னப் பாக்க கண்ணுயிருந்தா போதும்.அது நேரா இருந்தா என்ன, சாயலா இருந்தா என்ன" என்றவள் அவனின் கண்ணீரைத்துடைத்த படி சொன்னாள்" எனக்குக் கண்ணே இல்லன்னாகூட நீ என்னக் கட்டிக்குவ, அந்த நம்பிக்க இருக்கு" என்றபடிச் சாயலானக் கண்ணோடு செழியனின் மார்பில் சாய்ந்தாள் கமழி.



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

# திருவிளையாடல் புராணம் 20



**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி.

## எல்லாம் வல்ல சித்தரான படலம்

இறைவனான சிவபெருமான் சித்தர் வடிவம் கொண்டு மதுரை மக்களிடையே நடத்திய செயற்கரிய செயல்களை விளக்கிக் கூறுகிறது.

அபிடேகப்பாண்டியனுக்கு வீடுபேறினை அளிக்கும் நோக்குடன் இறைவனார் சித்தர் வடிவம் தாங்கி வந்ததை நாம் இப்படலத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

வருணன் ஏவிய மேகங்களைத் தடுத்து மதுரையை நான் மாடக்கூடலாக்கிய இறைவனார் அபிடேகப்பாண்டியனுக்கு வீடுபேற்றினை அளிக்க திருஉள்ளம் கொண்டார்.

இதனால் அவர் சித்தம் வடிவம் தாங்கி மதுரையில் தோன்றினார். அவர் ஜடாமுடி, காதுகளில் வெள்ளிக் குண்டலங்கள், ஸ்படிகம், ருத்ராட்சமாலைகள் அணிந்தமார்பு, உடலெங்கும் திருநீறு, கையில் தங்கப்பிரம்பு, மழு என்னும் ஆயுதம், புலித்தோலாகிய கோவணம் ஆகியவற்றை அணிந்து இருந்தார்.

முகத்தில் யாவரையும் மயக்கும் புன்முறுவலும் கொண்டு திருக்கோவிலில் வீற்றிருந்தார்.

அவர் அவ்வப்போது மதுரையின் கடைவீதிகளிலும், நாற்சந்தி கூடும் இடங்களிலும், வீதியிலும், மாளிகைகளின் வாயிலிலும், திண்ணைகளிலும் தோன்றி பல சித்து வேலைகளை செய்தருளினார்.

மதுரை மக்கள் அவரின் சித்து வேலைகளைக் காணும் பொருட்டு அவர் இருக்கும் இடத்தில் கூட்டமாகத் திரண்டனர். அவர் ஓரிடத்தில் சித்து வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போதே திடீரென அந்த இடத்தில் இருந்து மறைந்து விடுவார்.

மக்கள் அவரைத் தேடிக் கொண்டிருக்கும்போதே வேறு ஒரு இடத்திற்குச் சென்று ஏதாவது செய்து கொண்டிருப்பார். மக்கள் சித்தர் இருக்கும் இடத்திற்கு ஓடி சித்தரின் சித்து வேலைகளைக் காண முயல்வர்.

சித்தரை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் இளைஞர்களை



முதியவராக்குவார். முதியவர்களை இளைஞர்களாக்குவார். ஆண்களைப் பெண்களாக மாற்றுவார். பெண்களை ஆண்களாக்குவார்.

பிறவியிலேயே பார்வையற்றவர், காது கேளாதோர், பேச முடியாதோர் ஆகியோர்களை பார்க்க, கேட்க, பேச வைத்து அதிசயம் காட்டுவார்.

ஊனமுற்றவர்களை குணமாக்குவார். ஏழைகளை பணக்காராக்கியும், பணக்காரர்களை ஏழையாக்கியும் காட்டுவார். கடல் நீரை நன்னீராக்கியும், நன்னீரை உப்பு நீராக்கியும் அதிசயங்கள் புரிந்தார்.

கசப்பு சுவையினை உடைய எட்டி மரத்தில் இனிப்புச் சுவையுடைய பழங்களை உண்டாக்கினார். திடீரென வைகையில் வெள்ளத்தைப் பெருக்கச் செய்தும், பின் அவ்வெள்ளத்தை வற்றச் செய்தும் காட்டினார்.

பட்டமரத்தில் இலையையும், பூவையும் உண்டாக்கி பசுமையாக்கினார். இவ்வாறாக சித்தர் பல சித்து வேலைகளைச் செய்து மக்களின் மனதினைக் கொள்ளை அடித்தார்.

சித்தரின் சித்து வேலைகளால் மதுரை மக்கள் தன்னிலை மறந்து தங்களின் வேலைகளையும் மறந்து கூட்டம் கூட்டமாக சித்தரிடமே இருந்தனர்.

சித்தரின் சித்து விளையாடல்களையும், மதுரை மக்கள் மனம் மயங்கிய நிலையினையும் கேட்ட அபிடேகப்பாண்டியன் தனது அமைச்சர்களை அழைத்தான்.

அமைச்சர்களிடம் "மதுரை மாநகருக்கு வந்து சித்து வேலைகளைச் செய்யும் சித்தரைப் பற்றி கேள்விப்பட்டீர்களா?. மதுரை மக்கள் எப்போதும் அவரைச் சுற்றியே நின்று கொண்டிருக்கிறார்களாமே?. நீங்கள் விரைந்து சென்று அவரை அரண்மனைக்கு அழைத்து என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள்" என்று கட்டளையிட்டான்.

அமைச்சர்களும் சித்தர் இருக்கும் இடத்திற்கு விரைந்து சென்றனர். சித்தரின் சித்து விளையாட்டுகளில் மெய் மறந்து நின்றனர்.

சிறிது நேரத்தில் சுயநினைவு திரும்பியவர்களாய் சித்தரை அணுகி "தங்களின் திருவிளையாடல்களை கேட்டறிந்த எங்கள் மன்னர் தங்களை அரண்மனைக்கு அழைத்து வரச் சொன்னார்" என்று கூறினர்.

அதற்கு சித்தர் "உங்களின் மன்னவனால் எனக்கு ஆக வேண்டிய காரியம் ஒன்றுமில்லை. உங்கள் மன்னவனுக்கு என்னால் ஆகவேண்டியது ஏதும் இருப்பின் உங்கள் மன்னரை வந்து என்னைக் காணச் சொல்லுங்கள்" என்று கூறினார்.

சித்தரின் பதிலினைக் கேட்ட அமைச்சர்கள் வருத்தத்துடன் அரண்மனைக்குத் திரும்பினர். அபிடேகப்பாண்டியனிடம் சித்தர் வரமறுத்து அவர் கூறிய காரணத்தையும் கூறினர்.

அபிடேகப்பாண்டியனும் "முதல்வனாகிய சிவபெருமானின் திருவருளைப் பெற்று இம்மை மறுமைப் பயன்களை வெறுத்த யோகிகள் இந்திரன், திருமால், பிரம்மா முதலிய தேவர்களை மதிக்க மாட்டர். இப்பூமியை ஆளும் மன்னரையா மதிப்பர்" என்று கூறினான்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி யாரையும் கட்டாயப்படுத்த முடியாது என்பதே எல்லாம் வல்ல சித்தரான படலத்தின் கருத்தாகும்.

(தொடரும்)




குடும்ப தோஷங்களை போக்கும் அரிய சிவஸ்தலம்

திருநெல்வேலிக்கு அருகிலுள்ள அருகன்குளம் என்னும் சிற்றூரில், பல தலைமுறைகளாக தொடரும் குடும்ப தோஷம், பித்ரு தோஷம், சந்ததி தடைகள் இவற்றிற்கு நிவாரணம் தரும் ஒரு அரிய சிவஸ்தலம் உள்ளது.
அதுவே "பழைய ராமேசுவரம்" எனப் பக்தர்களால் போற்றப்படும் ராமலிங்க சுவாமி திருக்கோவில்.

**தலத்தின் சிறப்பு**
திருநெல்வேலி சந்திப்பு அருகே, சுமார் 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ள அருகன்குளம் கிராமம், பண்டைய காலத்தில் புனித பூமியாகக் கருதப்பட்டது.
இங்குள்ள சிவலிங்கம், திரேதா யுகத்தில் ஸ்ரீ ராமபிரான் தாமிரபரணி கரையில் பிரதிஷ்டை செய்ததாக தல புராணங்கள் கூறுகின்றன.
அதனால் தான் இந்த தலம் "பழைய ராமேசுவரம்" என்று அழைக்கப்படுகிறது.

**ஜடாயு தீர்த்த வரலாறு.**
சீதையை ராவணன் கடத்திச் செல்லும்போது, அதைத் தடுக்க முயன்ற வீரப் பறவையான ஜடாயு, ராவணனுடன் கடும் போரில் ஈடுபட்டான்.
அந்தப் போரில் காயமடைந்த ஜடாயு, அருகன்குளம் வனப்பகுதியில் வீழ்ந்து கிடந்தான்.
அப்போது அங்கு வந்த ஸ்ரீ ராமரும் லட்சுமணரும், ஜடாயுவை பரிவுடன் பார்த்து அவனுக்கு ஆறுதல் அளித்தனர்.
இறப்பிற்கு முன், "என் இறுதிச்சடங்குகளை நீங்களே செய்து தர வேண்டும்" என்று ஜடாயு வேண்டிக்கொண்டதாக புராணங்கள் கூறுகின்றன.
அதன்படி தாமிரபரணி நதிக்கரையில் ராமபிரான் தர்ப்பணம், தீர்த்தம், மரியாதைகள் செய்து ஜடாயுவுக்கு பூரண விரதோசனம் அளித்தார்.
இந்தப் புனித இடமே இன்று "ஜடாயுத்துறை" என்று அழைக்கப்படுகிறது.

**ராமலிங்க சுவாமி கோவிலின் மகிமை**
இங்கு ஸ்ரீ ராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் "ராமலிங்க சுவாமி" என்ற திருநாமத்துடன் அருள்பாலிக்கிறார்.

**கோவில் வளாகத்தில் :**
ராமலிங்க சுவாமி
பிண்ட ராமர்
ஜடாயு
பர்வதவர்த்தினி அம்மை
விநாயகர்
முருகன்
தட்சிணாமூர்த்தி
என பல சன்னதிகள் அமைந்துள்ளன.
பிற்காலத்தில் வல்லபாண்டிய மன்னர்களால் இக்கோவில் புனரமைக்கப்பட்டதாகவும், பூஜை முறைகள் இன்றளவும் தொடர்வதாகவும் கூறப்படுகிறது.

**தீர்த்தங்களின் தெய்வீக தன்மை**
இத்தலத்தில் மிக முக்கியமான மூன்று தீர்த்தங்கள் உள்ளன :

ஜடாயு தீர்த்தம்
ராம தீர்த்தம்
சிவ தீர்த்தம்

இந்த தீர்த்தங்கள் தாமிரபரணி நதியில் கலக்கும் இடத்தில் ஸ்நானம் செய்து வழிபட்டால்,

**27 தலைமுறை தோஷங்கள்**
பித்ரு தோஷம்
வம்ச தடைகள்
நீங்கும் என்பது பக்தர்களின் ஆழ்ந்த நம்பிக்கை.

**குடும்ப தோஷ நிவாரண பரிகாரம்**

இக்கோவிலில் உள்ள பழமையான கல் விளக்கில்,

இலுப்பை எண்ணெய்
நல்லெண்ணெய்
இரண்டையும் கலந்து தீபம் ஏற்றி வழிபடுவது,

**குடும்ப சாந்தி**
உறவுகளில் ஒற்றுமை
வாழ்க்கை முன்னேற்றம்
இவற்றை அளிக்கும் என்று பெருமையுடன் கூறப்படுகிறது.
குழந்தை பாக்கியம் வேண்டுவோர்
ராமலிங்க சுவாமி மற்றும் பிண்ட ராமர் இவர்களுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வழிபட்டால்,
குழந்தை பாக்கியம்
சந்ததி விருத்தி
கிடைக்கும் என்பது பல பக்தர்களின் அனுபவ நம்பிக்கை.

**கோவில் நேரம்**
காலை: 8.00 10.00
மாலை: 5.00 6.30

**செல்லும் வழிகள்**

திருநெல்வேலி சந்திப்பு 5 கி.மீ
தாழையூத்து 3 கி.மீ

மினிபஸ் வசதி உள்ளது
ஆட்டோ மூலம் செல்லலாம்
சென்னை நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலை அருகே அமைந்துள்ளது.

**சிறப்பு நாட்கள்.**

ஆடி அமாவாசை
தை அமாவாசை
புரட்டாசி மகாளய அமாவாசை

இந்த நாட்களில் ஜடாயுத்துறையிலதர்ப்பணம் செய்து, ராமலிங்க சுவாமி & பிண்ட ராமர் வழிபாடு செய்தால் மிகுந்த புண்ணியம் என நம்பப்படுகிறது.
இறுதிக் குறிப்பு

**பழைய ராமேசுவரம் ஒரு சாதாரண சிவாலயம் அல்ல.**

இது ஒரு தலைமுறை அல்ல பல தலைமுறைகளுக்கான பாவ நிவாரண ஸ்தலம்.

குடும்ப சாந்தி, பித்ரு தோஷ நிவாரணம், வாழ்க்கை முன்னேற்றம் வேண்டுபவர்கள் இந்த தலத்தை தவறாமல் தரிசிக்க வேண்டிய ஒரு அரிய புனித ஸ்தலம்.

முனைவர்
**இராம.வேதநாயகம்**

# தினம் ஒரு தலைவர்கள் ஸ்டாலின் சீனிவாசன் வரலாறு

**வாழ்க்கைக் குறிப்பு**
ஸ்டாலின் சீனிவாசன் மே 30, 1899-ல் தஞ்சை மாவட்டம் சீர்காழியில் பிறந்தார். தந்தை பெயர் குப்புசாமி. தொடக்கக் கல்வியை சீர்காழியில் பயின்றார். சட்டத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். சென்னை பிரசிடென்சி கல்லூரியில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

**தனிவாழ்க்கை**
ஸ்டாலின் சீனிவாசன் தேசியப் பள்ளியில் பணிபுரிய சி. ராஜகோபாலாச்சாரியால் அழைக்கப்பட்டார். சுதந்திரத்திற்குப் பின் மெட்ராஸின் முதல் தலைமை திரைப்படத் தணிக்கை அதிகாரியாக மூன்று வருடங்கள் பணியாற்றினார். 'பராசக்தி' படம் வெளிவரக் காரணமாக இருந்தார். அதன்பின் சினிமா உற்பத்தியாளர் சங்கத்தின் காரியதரிசியாகப் பணியாற்றினார்.

குற்றவியல் வழக்கறிஞர் ராதா சீனிவாசன் ஸ்டாலின் சீனிவாசனின் மகள்.

**பெயர்க்காரணம்**
இதழியல் வரலாற்றில் மூன்று சீனிவாசன்கள் இருந்தனர். இந்து இதழின் ஆசிரியர் கஸ்தூரி சீனிவாசன். சுதேசமித்திரன் ஆசிரியர் சி.ஆர். சீனிவாசன், கு. சீனிவாசன். முதல் இரு சீனிவாசன்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட கு. சீனிவாசனை ஸ்டாலின் சீனிவாசன் என்று அழைத்தனர். சீனிவாசனுக்கு சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் தலைவர் ஸ்டாலின் போன்ற மீசை இருந்ததால் இந்தப் பெயர் பெற்றார். ஆனால் இதற்கும் கு. சீனிவாசனின் கொள்கைக்கும் தொடர்பு இல்லை. கு. சீனிவாசன் கம்யூனிசத்தை ஏற்காதவர்.

**இதழியல்**
**தொடக்க காலம்**
ஸ்டாலின் சீனிவாசன் 'டெய்லி எக்பிரஸ்' என்ற ஆங்கில நாளிதழில் தன் இதழியல் பணியைத் தொடங்கினார். 'சன்', 'டான்' ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளில் பணிபுரிந்தார்.
அவரது எழுத்துக்கள் காங்கிரஸ் இயக்கத்தின் கொள்கைகளைப் பிரதிபலித்தன.

பம்பாயில் எஸ். சதானந்தின் சுதேசி செய்தி நிறுவனமான 'தி ஃப்ரீ பிரஸ் ஜர்னல்' என்னும் (THE FREE PRESS OF INDIA NEWS AGENCY) ஆங்கில நாளேட்டின் செய்தி நிருபராகச் சேர்ந்தார். சீனிவாசனின் கட்டுரையை வெளியிட்டதற்காக சதானந்தன் சிறையில் அடைக்கப்பட்டபோது சதானந்தை விடுவிக்க நீதிமன்றம் சென்றார். காங்கிரஸ் இயக்கத்தின் பிரசாரக் கருத்துக்களை தனது எழுத்தில் முன்நிறுத்திய சீனிவாசனை, ஆட்சிக்கு குந்தகம் விளைவிப்பதாக குற்றம் சாட்டி நாசிக் சிறையில் அடைத்தது பிரிட்டிஷ் அரசு

**சிறையிலிருந்து**
வெளிவந்தபின் பம்பாயில் 'பம்பாய் ஸ்டாண்டர்ட்' எனும் ஆங்கில வார இதழையும் தொடங்கி சில காலம் நடத்தினார். 1922-ல் சென்னையில் டி. பிரகாசம் 'ஆந்திரகேசரி'யையும், காந்தியத்தைப் பரப்ப 'ஸ்வராஜ்யா' எனும் ஆங்கில இதழையும் தொடங்கிய போது அதில் தொண்டாற்றிய இளம் எழுத்தாளர்களில் (ஜி.வி. கிருபாநிதி, காசா சுப்பாராவ், கே.ராமகோடீஸ்வரராவ், என்.எஸ். வரதாச்சாரி) சீனிவாசனும் ஒருவர். தமிழில் வெளிவந்த 'ஸ்வராஜ்யா' இதழிலும் பங்காற்றினார்.

**மணிக்கொடி**
நாசிக் சிறைவாசம் சீனிவாசனைப் பற்றிய நாடு தழுவிய கவனத்தை உண்டாக்கியது. அவரது எழுத்துக்கு வரவேற்பும், மதிப்பும் கூடியது. விடுதலை செய்யப்பட்ட சில மாதங்களில் மும்பையில் இருந்து சென்னைக்கு வந்தார் சீனிவாசன். தன் கருத்தொத்த நண்பர்களான வ.ராமசாமியையும், டி.எஸ். சொக்கலிங்கத்தையும் சந்தித்தார். மற்றவர்களின் இதழ்களில் பணியாற்றுவதை விட நாமே ஏன் ஒரு இதழைத் தொடங்ககூடாது என்ற கேள்வியை முன்வைத்து மூவரும் விவாதித்து, முடிவில் இலக்கியம் சார்ந்தும், சமகால சமூக பிரச்னைகளை முன்னிறுத்தியும் ஒரு இதழ் தொடங்க முடிவெடுத்தனர். லண்டனில் இருந்து வெளிவந்த சண்டே அப்சர்வர் இதழை ஒத்து மணிக்கொடி சிற்றிதழை செப்டம்பர் 17, 1933-ல் தொடங்கினர்.

**தொடக்கத்தில்**
மணிக்கொடிக்கு ஓரளவுக்கு வரவேற்பு கிடைத்தாலும் தொடர்ந்து நடத்துமளவுக்கு பொருளாதாரப் பின்புலம் இல்லாததால் ஆறு மாதத்திலேயே தள்ளாடத் தொடங்கியது. ஆனால் சீனிவாசன் இதழைத் தொடர்ந்து நடத்துவதில் உறுதியாக இருந்தார். மணிக்கொடியை வ.ரா, சொக்கலிங்கம் ஆகியோரின் பொறுப்பில் விட்டுவிட்டு மும்பைக்கு சென்ற சீனிவாசன் அங்கு ஆங்கில இதழ்களில் கட்டுரைகள் எழுதி ஈட்டிய பணத்தை மணிக்கொடி இதழை நடத்த அனுப்பினார். இவ்வாறு இரு மணிக்கொடி இதழ்கள் வெளிவந்தன. இடையே, சொக்கலிங்கத்துக்கும், வ.ராவுக்கும் கருத்து மோதல் ஏற்பட்டது. வ.ரா மணிக்கொடியில் இருந்து விலகி, வீரகேசரி இதழில் பணியாற்ற கொழும்பு சென்றார். சிறிது காலத்திலேயே சொக்கலிங்கமும் மணிக்கொடியில் இருந்து விலகி தினமணி இதழின் ஆசிரியராகி விட்டார். மும்பையில் இருந்த சீனிவாசன், இனிமேல் மணிக்கொடியை நடத்துவது சாத்தியமில்லை என்று உணர்ந்து அந்த இலட்சிய இதழை நிறுத்திவிட்டார்.

புதிய படைப்பாளிகளை தமிழ் இலக்கியத்துக்கு அறிமுகப்படுத்தியது மணிக்கொடியின் பிரதான சாதனைகளில் குறிப்பிடத்தகுந்த ஒன்று. மணிக்கொடியில் சீனிவாசனின் எழுத்துக்களைப் பற்றிய விவரங்களை அறிய முடியவில்லை. சீனிவாசன் பம்பாய்க்குப் போன பிறகு மணிக்கொடியில் அரசியலின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. மணிக்கொடி பல தேக்கங்களையும் மாறுதல்களையும் கண்டு நின்றுவிட்டது.



இந்தியன் பார்லிமண்ட் ஸ்டாலின் சீனிவாசன் 1946-47-களில் 'இந்தியன் பார்லிமண்ட்' எனும் திங்கள் இதழையும் நடத்தினார். இதில் 'தனிஷ்டா' என்னும் புனைப்பெயரில் எழுதினார். இப்பத்திரிக்கை சில இதழ்களே வெளிவந்தது. பார்லிமெண்ட் என்ற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என அரசு தடை விதித்தது. மேலும் இவர் என்னென்ன புனைப்பெயர்களில் எழுதினார் என்ற விவரம் சரிவர இல்லை.

**அரசியல் வாழ்க்கை**
ஸ்டாலின் சீனிவாசன் காங்கிரஸ் மகாசபை கூட்டங்கள், சத்தியாகிரங்கள் பற்றிய செய்திகளை பத்திரிக்கையில் விரிவாக வெளியிட்டார். காந்தியுக காங்கிரஸில் பங்கேற்றார். காங்கிரஸ் பிரச்சாரத்திற்காக மறைமுகமாக துண்டு பிரசுரங்களை வெளியிட்டதற்காக 1932-ல் கைது செய்யப்பட்டார். நாசிக் சிறையில் பதினைந்து மாதங்கள் இருந்தார். அங்கு ஜெயப்பிரகாஷ் நாராயணின் தொடர்பு ஏற்பட்டது.

**இலக்கிய வாழ்க்கை**
ஸ்டாலின் சீனிவாசன் சங்க இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். தம் கட்டுரைகள், நேர்ப்பேச்சில் சங்க இலக்கியங்களை உதாரணம் காட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பாரதியின் மேல் பற்று கொண்டிருந்தார். பாரதி பற்றிய கட்டுரைகள் எழுதினார். பாரதியின் குயில் பாட்டிற்கு விளக்கம் அளித்துள்ளார். பாரதியின் படைப்புகள் சார்ந்த தன் விளக்கங்களைக் கட்டுரைகளாக எழுதினார். நாசிக் சிறையில் அடைக்கப்பட்டபோது தத்துவமேதை பிளேட்டோவின் தத்துவங்களை மொழிபெயர்த்தார். அரசியல், சமூகம் சார்ந்து சில நூல்கலையும் எழுதினார்.

**வெள்ளிவட்டக் கூட்டம்**
1963 காலகட்டத்தில் ஸ்டாலின் சீனிவாசன் வீட்டில் ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமை இலக்கியக் கூட்டம் நடைபெற்றது. அதில் தி. ஜானகிராமன், சிட்டி ஆகியோர் கலந்து கொண்டனர். வெள்ளிவட்டக் கூட்டத்தில் இருபது முப்பது பேர் கலந்து கொள்வர். கூட்டத்திற்கு ஆலோசகராகவும், அவற்றை நடத்துபவராகவும் சிட்டி இருந்தார்.

இலக்கிய இடம்
"ஃப்ரீ பிரஸ் ஜர்னலில் சீனிவாசன் எழுதிய தலையங்கம் ஒவ்வொன்றும் ஒரு சிறந்த இலக்கியக்கட்டுரை. அவற்றின் நடை, சொல்லாட்சி, கருத்து ஆழம், சிந்தனை உயர்வு, உணர்ச்சிவேகம் யாவும் இலக்கியத்தரத்தில் இருந்தன. படிப்பவர் உள்ளத்தில் விடுதலை ஆர்வம் கொப்பளித்துப் பொங்கும் விசையுடன் எழுதப்பட்ட வியப்பிற்குரிய இலக்கியக் கட்டுரைகள் இவை. இலக்கியம், ஆன்மிகத்துறைகளில் பாரதி நடையின் இசை, இன்பம், உணர்ச்சி, ஆவேசம், கருத்து ஆழம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டவர் மணிக்கொடி சீனிவாசன்" என பி.எஸ். ராமையா குறிப்பிட்டார்.

**மறைவு**
ஸ்டாலின் சீனிவாசன் ஜூன் 2, 1975-ல் காலமானார்.

**நூல் பட்டியல்**
இவரைப்பற்றிய நூல்கள் மணிக்கொடி சீனிவாசன் எழுத்துக்கள் (ஜெயதேவ் சீனிவாசன்) (கவிதா பதிப்பகம்)

# பிப்.13ல் வெளியாகிறது ‘My Lord’!




சசிகுமார் நடிப்பில் கடைசியாக வெளியான படம் டூரிஸ்ட் ஃபேமிலி. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதோடு மட்டுமல்லாமல், சசிகுமார் படங்களிலையே அதிக வசூல் செய்த படம் என்ற பெருமையையும் பெற்றது. மேலும் ஆஸ்கார் தகுதிப்பட்டியலிலும் இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து தற்போது சசிகுமார் நடித்து முடித்துள்ள படம் 'மை லார்ட்'. இப்படத்தை ஜோக்கர், குக்கூ, ஜப்பான் போன்ற படங்களை இயக்கிய ராஜுமுருகன் இயக்கியுள்ளார். கன்னட நடிகை சைத்ரா ஜே ஆச்சார் கதாநாயகியாக நடித்துள்ளார். படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார்.

படத்தின் பாடல்கள், டிரெய்லர் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றநிலையில், தற்போது ரிலீஸ் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி படம் வரும் 13ஆம் தேதி வெளியாக உள்ளது. நாட்டில் நடக்கும் சமூக அவலங்களை காண்பிக்கும் கதைக்களமாக அமைந்துள்ளது.



கடந்த 2025ஆம் ஆண்டு இறுதியில் வெளிவந்து தமிழ் சினிமாவிற்கு மாபெரும் வெற்றியையும், பெருமையையும் தேடி தந்த படம் சிறை. இப்படத்தை அறிமுக இயக்குநர் சுரேஷ் ராஜகுமாரி இயக்க விக்ரம், எல்.கே. அக்ஷய் குமார் மற்றும் அனிஷ்மா அனில்குமார் ஆகியோர் நடித்திருந்தனர்.

இதில் கதாநாயகியாக நடித்து ரசிகர்களின் மனதை கொள்ளை கொண்டவர்தான் நடிகை அனிஷ்மா அனில்குமார். இவர் மலையாளத்தில் பிரபலமான நடிகையாவார். இந்த நிலையில், நடிகை அனிஷ்மா அனில்குமார் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ...ன்னுடைய லேட்டஸ்ட் கியூட் போட்டோஷூட் ...கைப்படங்களை பதிவு செய்துள்ளார்.

# பிரபல பாலிவுட் இயக்குநர் வீட்டின் முன் மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு..





பிரபல பாலிவுட் இயக்குனர் ரோகித் ஷெட்டியின் வீட்டின் முன் மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் மும்பையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ரோகித் ஷெட்டி இந்தியில் சிங்கம், சென்னை எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட படங்களை இயக்கியவர் ஆவார். மும்பையின் ஜுஹு பகுதியில் உள்ள ரோகித் ஷெட்டியின் அடுக்குமாடி குடியிருப்புக்கு வெளியே, நேற்று நள்ளிரவு சுமார் 12:45 மணியளவில் இந்தத் துப்பாக்கிச் சூடு நிகழ்ந்துள்ளது.

அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் அந்த கட்டிடத்தை நோக்கி சுமார் 4 முதல் 5 சுற்றுகள் துப்பாக்கியால் சுட்டதாகப் போலீசார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயங்களோ அல்லது உயிர்ச்சேதமோ ஏற்படவில்லை. துப்பாக்கிச் சூடு நடந்த சமயத்தில் ரோகித் ஷெட்டி வீட்டிற்குள்ளேயே இருந்ததாகக் கூறப்படுகிறது. தகவலறிந்த போலீசார் மற்றும் தடவியல் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சோதனையிட்டனர். அந்தப் பகுதியில் உள்ள CCTV கேமரா காட்சிகளை ஆய்வு செய்து வரும் போலீசார், தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே பாலிவுட் நடிகர் சல்மான் கான் வீட்டின் முன் இத்தகைய துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நிகழ்ந்த நிலையில், தற்போது ரோகித் ஷெட்டி இலக்கு வைக்கப்பட்டிருப்பது பாலிவுட் திரையுலகினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பாவனாவின் ‘அனோமி: தி ஈக்வேஷன் ஆஃப் டெத்’



இந்திய திரையுலகில் 23 ஆண்டுகளாக தனது நடிப்பு திறமையாலும், விடாமுயற்சியாலும் ரசிகர்களின் மனதில் தனி இடம்பிடித்தவர் பாவனா. பல்வேறு திரைப்படங்கள், பிரபல நடிகர்களுடன் பணியாற்றி இருக்கும் பாவனா தனது 90வது மைல்கல் திரைப்படமான 'அனோமி: தி ஈக்வேஷன் ஆஃப் டெத்' மூலம் மீண்டும் ரசிகர்களை வியப்பில் ஆழ்த்த உள்ளார்.

'நம்மல்' திரைப்படம் மூலம் அறிமுகமான பாவனா, இதுவரை பல்வேறு விதமான கதாபாத்திரங்களில் தனது நடிப்புத்திறனை வெளிப்படுத்தியுள்ளார். அந்த வரிசையில், ‘அனோமி’ படத்தில் அவர் புது கதாபாத்திரம் ஒன்றை ஏற்று நடித்துள்ளார். இந்த திரில்லர் படத்தை அறிமுக இயக்குநர் ரியாஸ் மரத் எழுதி இயக்கியுள்ளார். வழக்கமான குற்றவியல் திரில்லர் எல்லைகளைத் தாண்டி, பேரலெல் இன்வெஸ்டிகேஷன் எனும் தனித்துவமான கதை சொல்லும் முறையில், உணர்ச்சிகளும் பதற்றமும் கலந்த திரைக்கதையை அமைந்துள்ளார். படத்தில் பாவனா, 'சாரா' என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். உணர்ச்சி ஆழமும், புத்திசாலித்தனமும் கொண்ட ஒரு தடயவியல் நிபுணராக அவரது நடிப்பு முக்கிய களமாக இருக்கும்.

மேலும் நடிகர் ரஹ்மான், இந்தப் படத்தில் விசாரணை அதிகாரியாக மலையாள சினிமாவுக்கு மீண்டும் திரும்புகிறார். அவரது கதாபாத்திரம் படத்திற்கு முக்கிய பலமாக அமைந்துள்ளது. இந்தப் படத்தில் பினு பப்பு, விஷ்ணு அகஸ்த்யா, அர்ஜுன் லால், ஷெபின் பென்சன் மற்றும் த்ரிஷ்யா ரகுநாத் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தை டி சீரிஸ் ஃபிலிம் மற்றும் பனோரமா ஸ்டுடியோஸ் வழங்க குமார் மங்கத் பாதக் மற்றும் அபிஷேக் பாதக் தயாரித்துள்ளனர். ராஜேஷ் மேனன், ராம் மிர்சந்தானி, நிதின் குமார் மற்றும் மன்சூத் டி.பி. இந்தப் படத்தை இணைந்து தயாரித்துள்ளனர். இந்தப் படத்தை ப்ளிட்ஸ்கெர்க் ஃபிலிம்ஸ் (Blitzkrieg Films), ஏபிகே சினிமா (APK Cinema) மற்றும் நடிகை பாவனாவின் சொந்த நிறுவனமான பாவனா ஃபிலிம் ப்ரொடக்ஷன்ஸ் இணைந்து தயாரித்துள்ளன.

'அனோமி: தி ஈக்வேஷன் ஆஃப் டெத்' மர்மம், உணர்ச்சி, மற்றும் புத்திசாலித்தனமான விசாரணை ஆகியவற்றின் சங்கமமாக, ரசிகர்களுக்கு ஒரு வித்தியாசமான திரையரங்க அனுபவத்தை வழங்க தயாராக உள்ளது. இப்படம் திரையரங்குகளில் பிப்ரவரி 6 ஆம் தேதி வெளியாக உள்ளது.

நடிகை கீர்த்தி சுரேஷ் தற்போது கைவசம் ஏராளமான படங்கள் வைத்து இருக்கிறார். திருமணத்திற்க்கு பிறகு அவர் படுபிஸியாக படங்கள் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

படங்களில் நடிப்பது ஒருபக்கம் இருந்தாலும், விளம்பரங்கள் உள்ளிட்ட மற்ற நிகழ்ச்சிகளிலும் அவர் நடித்து வருகிறார்.

இந்நிலையில் கீர்த்தி சுரேஷ் சமையல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள ட்ரெண்டியான உடையில் வந்திருக்கும் ஸ்டில்களை பாருங்க.



# நடிகர் ராம் சரண் உபாசனா தம்பதிக்கு இரட்டை குழந்தைகள்



இத்தம்பதிக்கு திருமணமாகி 11 ஆண்டுகள் கழித்து 2023-ம் ஆண்டு பெண் குழந்தை பிறந்தது. பலரும் ராம் சரண்- உபாசனாவுக்கு வாழ்த்துகள் தெரிவித்து வருகின்றனர்.

தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகரான ராம் சரண் கடந்த 2012 ஆம் ஆண்டு உபாசனா என்பவரை திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதிக்கு திருமணமாகி 11 ஆண்டுகள் கழித்து 2023-ம் ஆண்டு பெண் குழந்தை பிறந்தது. அப்பெண் குழந்தைக்கு கிளின் காரா என பெயர் சூட்டி இருந்தனர்.

இதனை தொடர்ந்து, உபாசனா மீண்டும் கர்ப்பமாக இருந்த நிலையில் மொத்த குடும்பமும் புது உறுப்பினரின் வருகைக்காக காத்திருந்தனர்.

இந்த நிலையில், ராம் சரண்- உபாசனா தம்பத்திக்கு நேற்று இரட்டை குழந்தைகள் பிறந்து இருப்பதாக ராம்சரணின் தந்தையும் நடிகருமான சிரஞ்சீவி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "மிகுந்த மகிழ்ச்சியுடனும், நிறைந்த இதயத்துடனும் ராம்சரண் மற்றும் உபாசனாவுக்கு இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளது. ஒரு ஆண் குழந்தை மற்றும் ஒரு பெண் குழந்தை. குழந்தைகளும், தாயும் ஆரோக்கியமாகவும் நலமாகவும் உள்ளனர். இந்த குழந்தைகளை எங்கள் குடும்பத்தில் வரவேற்பது தாத்தா பாட்டிகளாகிய எங்களுக்கு மகிழ்ச்சி. அனைவரின் பிரார்த்தனைகள், அன்பு, ஆசீர்வாதங்கள் மற்றும் நல்வாழ்த்துக்களுக்கு நாங்கள் மனமார்ந்த நன்றி கூறுகிறோம் என்று தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து பலரும் ராம் சரண்- உபாசனாவுக்கு வாழ்த்துகள் தெரிவித்து வருகின்றனர்.

# சரத்குமாரின் ‘ஆழி’ படத்திற்கு தேதி குறிச்சாச்சு

‘ஆழி’ படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது. இயக்குநர் பொன்ராம் இயக்கத்தில் மறைந்த விஜயகாந்தின் இளைய மகனான சண்முக பாண்டியன் நடிப்பில் வெளியான படம் 'கொம்புசீவி'. இப்படத்தில் சரத்குமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து இருந்தார். இதனை தொடர்ந்து தற்போது நடிகர் சரத்குமார் 'ஆழி' படத்தில் நடித்துள்ளார்.

இந்த படத்தினை இயக்குனர் மாதவ் தாசன் இயக்கியுள்ளார். இந்த படம் கடலை மையமாக கொண்டு வித்தியாசமான கதைக்களத்தில் உருவாகி உள்ளதாக கூறப்படுகிறது. 'ஆழி' படத்தில் தேவிகா சதீஷ், இந்திரஜித் ஜெகன், தாமரை செல்வி, வையாபுரி மற்றும் ஸ்ரீஜித் ரவி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

888 புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பில் பொன்னு கண்ணன் தயாரித்துள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்து, வெளியீட்டிற்கு தயாராகி உள்ளது. இதனிடையே, 'ஆழி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது.

இந்த நிலையில், 'ஆழி' திரைப்படம் வருகிற 27-ந்தேதி திரையரங்குகளில் வெளியாகும் என போஸ்டர் வெளியிட்டு படக்குழு தெரிவித்துள்ளது.




# ராஷ்மிகா- விஜய் தேவரகொண்டாவுக்கு இன்று டும் டும் டும்?



தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகையான ராஷ்மிகாவுக்கும், தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகரான விஜய் தேவரகொண்டாவுக்கும் ஐதராபாத்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் திருமண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்தது. ஆனால் காதலை போலவே, இருவரும் இந்த விவகாரம் குறித்து வாயைத் திறக்காமல் ரகசியமாகவே வைத்திருந்தனர். ஆனாலும் ராஷ்மிகா விரலில் இருந்த நிச்சயதார்த்த மோதிரம் அதை சொல்லாமல் சொல்லியது.

இந்த நிலையில், விஜய் தேவரகொண்டா- ராஷ்மிகா ஜோடி ராஜஸ்தானின் உதய்பூரில் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் நாளை திருமணம் செய்து கொள்ள உள்ளதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வீடியோவில் திருமணத்திற்காக பிரமாண்டமான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. ஆனால் இதற்கு எப்போதும் போல இருதரப்பினரும் பதிலளிக்காமல் மவுனமாக உள்ளனர்.

மேலும் வீடியோவை கண்ட ரசிகர்கள், பயனர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.


Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel


CUSTOMIZED
MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169


SATHLOKHAR
SYNERGYS E&C GLOBAL LIMITED
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company
We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.
Vacancies
Civil | PEB | MEP Engineers
Qualification
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed
Experience
only 0 to 3 years
Apply Now
hr@sathlokhar.com
Contact: 98408 96529
Build your career with a company committed to construction engineering excellence.


MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.999/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247
7684053514


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
WhatsApp: 7789951009
Phone: 7789951009
Email: orderjust499@gmail.com


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699


TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com






விடியலை எதிர்நோக்கிக்
காத்திருக்கிறது
சேவல்–கூவுவதற்கு.
விடியலை எதிர்நோக்கிக்
காத்திருக்கின்றனர்
சேவலை
வளர்ப்போர்
அதைக்
கூறு போட்டு
சாப்பிடுவதற்கு.



**உ.மு.ந.ராசன்**
**கலாமணி**
கோயம்புத்தூர்.



## இன்றும்......

திரும்பி பார்க்கும் தூரத்தில்
அவன் சென்றாலும்..ஏனோ
அவள் குரலை
கேட்டும்.. கேட்காமல்
திரும்பி பார்க்காமல்
கடந்து சென்றான்
நேற்றைய காதலி இன்று
வேறு ஒருவன் மனைவி
அவன் மட்டும்
அவளையே.. நினைத்து
நடைப்பயணம்மாய்.. இன்றும்.

**சுரேஷ்,** திருச்சிற்றம்பலம்



## அவள்

ஒரு முறை திரும்ப
உபயோகித்தாலும்
கண்டுபிடித்து விடுகிறாய்,
'இதையே எத்தனை
முறை சொல்வே?' என்று
செல்லமாய் அதட்ட.
அதனாலேயே
இன்னொரு
முறை
சொல்லத்
தோன்றுகிறது
உன் எழிலை.



**கே. பி.**
**ஜனார்த்தனன்**

## "கோபம் என்பதோர் சாபம்"

கோபம் என்பதோர் சாபம்
குணநலன் கெடுக்கும்
சர்ப்பம்!
பாவம் விதைக்கும் சதி
பழிகள் சேர்க்கும் விதி!

நாவால் நஞ்சு சிந்திட
நலங்கள் நொடியில் சாயும்!
மாவீரன் வாளினாலும்
மனத்தை வெல்லல் அரிது!

அன்பே அணையா விளக்கு,
அறமே அவனிக்கு உயிர்ப்பு!
கோபம் அடக்கிக் காப்பான்
குலமும் வாழும் கூறு!

சாந்தம் செழிக்கும் இல்லம்
சார்ந்தோர் நலமும் உயரும்!
காந்தம் போலே ஈர்த்து
காலம்
முழுதும்
நிலவும்!



**முகில்**
**தினகரன்**
கோயமுத்தூர்

## கருவறை முதல் கல்லறை வரை

இந்தப்பிறவியில்
தனிமனிதனாக உனக்குச்
சொந்தமென்பது
நீ யாரென்று அறிவதற்கு
முன்பே நம்மீது பாச
வைத்து பத்துத்திங்கள்
சுமந்த தாயின் "கருவறை"
உனக்குச் சொந்தமே



நம் வாழ்வில்
யார் யாரோ
வந்தாலும்
போனாலும்
மீண்டெழ
முடியாமல்
நாம் உறங்கும்
(ஆறடி நிலமே) கல்லறை
நமக்குச் சொந்தமே

**G.A.கோவிந்தராஜ் (எ)**
**சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

1. உருவத்தைக் கண்டு
யாரையும் தாழ்வாக எண்ணி
விடாதே பெரிய ஆலமரம்
கூட புயல் அடித்தால்
வேரோடு சாய்ந்து விடும்
ஆனால் சிறிய புல் காற்றில்
அசையும் தவிர கீழே விழாது

2. உலகில் கடினமான ஒன்று
நம் மனதை நாமே
அமைதிப்படுத்துவது தான்

3. கவலையை நினைத்து
கண்ணீர் சிந்துவதை விட
லட்சியத்தை நினைத்து
வியர்வை சிந்துங்கள்
எளிதில் சாதித்து விடலாம்

4. தனக்கு மதிப்பில்லை
என்று தெரிந்த பிறகு
அந்த இடத்தை விட்டு
விலகிச் செல்வதற்கு
பெயர்தான் தன்மானம்

5. சில உறவுகள் யோசித்து
பேச வைக்கும்
சில உறவுகள்
பேசியதை
யோசிக்க
வைக்கும்
சில உறவுகள்
பேசவே
யோசிக்க
வைக்கும்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



மழையில் தோகை
விரித்தாடும் மயில் பற்றி
கவிதை எழுத
சொன்னார்கள்.
நான் உன்னைப் பற்றி
எழுதினேன்!

மெழுகாய் உருகி, உருகி
காதலிப்பவனை
கல் என்றாய், அதற்குள்ளும்
ஈரமிருப்பதை மறந்து விட்டு!!

ஜன்னலோர
இரயில் பயணம்
இதுவரை கனவு தான்
உன் காதலை போலவே...

ஏ கடவுளே வலிகளோடு
வாழ பழகிக் கொள்கிறேன்.
ஒருபோதும்
அவள்
நினைவுகளை
என்னிலிருந்து
எடுத்து
விடாதே!



**லி.நௌஷாத்**
**கான்**

## பேடியே

அடிபட்டு காயம் அழகு
உடலெல்லாம் இடிபட்டு
அவனால் இம்சைக்கு
ஆளாகி... விடியாதா
நம்வாழ்வு என்றா நிற்கிறாய்
விடியும் நிச்சயம்
முடித்திடு அவன்கதை
அடித்து அவனுக்கு
நெருக்கடி கொடுத்திடு
பொடித்துத் தூளாக்கி
புகையாய் ஆக்கிடு!!
பேடியே யாவான்
பெண்ணை வதைப்பவன்!

**வைரமணி ,** சென்னை

## "பட்டினத்தாரின் கை கரும்பு"

இயற்கை வாழ்வில்
இன்பமுண்டு!இயன்றவரை
வாழப்பழகு! செயற்கையாக
வந்தது எல்லாம் செயலிழந்து
தானாய் போகும் !இயற்கை
மட்டும் நிலையாக! இறக்கை
கட்டி தான் பறக்கும்!
அளவாய் என்றும் இருக்கும்
வரை! நிலவாய் வாழ்வு தான்
குளிரும்! போதும் என்ற
வார்த்தையிலே! (போ)ய்விடும்
(து)ன்ப(ம்)எல்லாமே! எறும்பு
போல சேமித்து!என்றும் வாழ
பழகிக் கொள்! துறும்பும்
உதவிடும் என்பதனால்!
அதையும் சேர்த்து
வைத்துக்கொள்! அரும்பும்
ஆசை எல்லாமே! கரும்பின்
சோகை போல்மாறும்!
பட்டினத்தாரின் கை
கரும்பு!பாடம் சொல்லி தான்
கொடுக்கும்.

## "மரணத்திற்கு கண்ணீரில்லை"

பத்து மாத பனிக்கூடத்தில்
தண்ணீரில் கருவாகி!!வித்து
அது வளர்ந்ததனால்
விருச்சமாக விரிவாகி!!சத்து
அது கிடைத்த பின்னே முழு
வடிவாய் வெளியாகி!!
சுற்றுகின்ற
பூமியிலே உடலோடு
உயிராகி!!சூழ்நிலைக்கு
ஏற்றபடி வாழ்வதனை
உருவாக்கி!!
வத்தும் அந்த குளத்தை போல
வாழும் வரை வளமாக்கி!!
தத்திதாவும் தவளை
போல இரு நிலையும்
தனதாக்கி!!
முத்தி பெற்ற முனிவருக்கும்
முடிவுரை தான் முடிவாக்கி!!
நித்திரையை நிரந்தரமாய் தந்த
பின்னே பெயராக்கி!!
உயிரற்ற உடலெல்லாம்
மண்ணோடு மண்ணாக்கி!!
வேதனையை தான்
கொடுத்து சாதனையை தான்
படைக்கும்மரணத்துக்கு
கண்ணீரில்லை!!!
மாண்டவர்
மீண்டதில்லை மீளா
பயணத்தை துவக்கிவைக்கும்
மரணத்திற்கு
கண்ணீரில்லை!!!
இயற்கை தந்த
உயிர்களதன் இயக்கத்தை
நிறுத்துகின்ற மரணத்திற்கு
கண்ணீரில்லை!!!செயற்கையாக
படைத்தாலும்செயல் இழக்க
செய்துவிடும்மரணத்துக்கு
கண்ணீரில்லை!! விண்ணிரு

## "என்னவளே!"

என்னவளே கண்னவளே
ஏக்கம் தீர்த்த சின்னவளே!
மானவளே மீனவளே
வலையில் என்னை
பிடித்தவளே!
பொன்னவளே பூவவவலே
மனதில் என்றும்
பூப்பவளே!பெண் அவளாய்
தான்பிறந்து எனக்குள்ளே
நிறைந்தவளே.



## "மனிதகுலம் உள்ளவரை..."

பெரியார் என்று
சொன்னாலே பேரதிர்வு
இன்றும் உண்டாகும்!
பெரியார் சொல்படி நீ
நடந்தால் மானமும் அறிவும்
பலமாகும்!
தொண்டு செய்து பழுத்த பழம்
என்றும் கல்எறி
அதற்கு விழும்!
தூயதாடி போலவே மனதின்
இருந்தது வெண்மை நிறம்!

பழமை வாத இருள் அகற்ற
இருட்டை கிழிக்கும்
சிவப்புநிறம்! கொடியின்
வடிவம் அதை காட்டும்
பட்டுஒளிவீசி பறக்கும் தினம்!
பெரியார் அவரின்
சிந்தனைகள் ஆறாய் என்றும்
ஊற்றெடுக்கும்! அவரின்
பெயரை உச்சரித்தால் பெரும்
பலம் இங்கு உண்டாகும்.

அன்றவர் வாழ்ந்த
காலத்திலே ஜாதிக்கொடுமை
அடர்ந்திருக்கும்!
உயர்தோர் தாழ்ந்தோர்
என்றழைக்கும்
வர்க்கபேதம்
நிறைருக்கும்!
அறிவுக்கு
ஒவ்வாகதைகள்
எல்லாம் கலாச்சாரத்தில்
கலந்திருக்கும்!
மூடநம்பிக்கைதான்
தொடங்கி பெண்ணடிமை
கொடுமை தலைத்திருக்கும்!

பகுத்தறிவாலே சிந்திக்க
வேண்டும் என்று அவர்
உரைத்தார்! அறிவால்
அறிவியல் ஆராய்ச்சி
வியந்திடும் சாதனை
பார்என்றார்! சுயசிந்தனை
செய்து தீர்வு காண முடிவை
உன்னிடம்தான் தந்தார்!
எப்பொருள் யார்வாய்
கேட்பினும்மெய்பொருள்
காண்பது அறிவு என்றார்!

ஜாதி மத வர்க பேதம் எல்லாம்
மூர்க்கமாக எதிர்த்து நின்றார்!
பெண்ணடிமை விலங்கை
அகற்றிட கல்வி வேலை
தேவை என்றார்!
குலத்தொழிலை தான்
ஒழித்து தனித்திறமையை
மதிக்கசொன்னார்!
எண்ணும் எழுத்தும்
கண்ணனமதித்து இறுதி
வரையில் பேனா பிடித்தார்!

தமிழில் எழுத்து சீர்திருத்தம்
அரசியலில் ஆட்சியர்
உருவாக்கம்! திருக்குறளுக்கு
இயக்க மாநாடு வாழ்நாள்
முழுவதும் பிரச்சாரம்!
திராவிடஇயக்கம்
தான்வளர்ந்து தமிழகம்
என்றும் வளங்கொழிக்கும்!
சாதிய மாற்றம் தான்
நிகழ்ந்து சமத்துவம்
என்றும்நிலைத்திருக்கும்!

எதிர்காலம் பற்றிய
சிந்தனைகள் இன்றும் நம்மை
வியக்கவைக்கும்!
முக்காலம்உணர்த்தும்அவர்
எழுத்து என்று மண்ணில்
நினைத்துநிற்கும்!
இறுதி மூச்சுவரையில் அவர்
பேச்சு அதிசயம் கொண்ட
உரைவீச்சு! கடவுளைமற
மனிதனைநினை! மானமும்
அறிவும்மனிதனுக்கு அழகு!
என்ற
தத்துவசிந்தனைகள்
மனிதகுலம் உள்ளவரை
நிலைத்திருக்கும்!



**கவிஞர் பொன்.**
**பனகல்**
**பொன்னையா**

# நூல் விமர்சனம்

**இல்லறம் இனிக்க!**
**நூல் ஆசிரியர் : முதன்மைச் செயலர் முதுமுனைவர் வெ.இறையன்பு இ.ஆ .ப .**
**நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி!**
**நேசம் பதிப்பகம், எண் : 9, ஜி.ஏ.ரோடு, சென்னை–600 021. பேச : 94443 61136, பக்கம் : 32, விலை : ரூ. 20.**

நாடு அறிந்த நல்ல பேச்சாளர்; நல்ல எழுத்தாளர் ; நல்ல சிந்தனையாளர் ; நல்ல செயலாளர் ; முதன்மைச் செயலர் ; முதுமுனைவர் வெ. இறையன்பு இ.ஆ.ப. அவர்கள் எழுதிய இந்நூல் இரண்டு ஆண்டுகளில் நான்கு பதிப்பு வந்துவிட்டது.

திருமண நிகழ்வுகளில் தாம்பூலப்பையில் இந்த நூலை இட்டு வழங்கலாம். 'இல்லறம் இனிக்க' வழி சொல்லி உள்ளார். மணமான ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நூல். இந்த நூலை வாங்கி ஆழமாகப் படித்து உணர்ந்தால் 'மணவிலக்கு' பெற வேண்டிய அவசியம் இருக்காது.

திரு. இறையன்பு இ.ஆ.ப. அவர்கள் முதலில் கவிஞர்; பிறகு தான் எழுத்தாளர். விஜயா பதிப்பகம் வேலாயுதம் அவர்களிடம் முதன்முதலில் அச்சிட வேண்டியதும் கவிதை நூலைத்தான். இந்த நூல் கவித்துவமாக உள்ளது. கவிதைகளும் உள்ளன.

கையடக்க நூல் விலையும் மிகக்குறைவு. இந்த விமர்சனம் வாசிக்கும் அனைவரும் வாங்கிப்படித்துப் பயன்பெற வேண்டிய சிறந்த நூல். பொருத்தமான படங்களுடன், உள் அச்சு, அட்டைப்பட வடிவமைபு யாவும் மிக நேர்த்தியாக உள்ளன. நேசம் பதிப்பகத்திற்கு நேசம்மிக்க பாராட்டுக்கள். ஒரு நூல் என்ன செய்யும்? என்பதற்கு விடை சொல்லும் நல்ல நூல்.




காதலித்துக் கரம்பிடித்த இணைகள் பலரும் விவாகரத்து ( மணவிலக்கு ) வேண்டி நீதிமன்ற வாயில்களில் காத்திருக்கும் அவலம் நடந்து வருகின்றது. இந்த நூல் பல சிக்கல்களுக்கு தீர்வு சொல்லும் விதமாக உள்ளது. குடும்பம் என்பதற்கு விளக்கம் கூறும் விதமாக அமைந்துள்ள கவிதை.

**குடும்பம்!**

அன்பைக் கூர்மைப்படுத்தியது;
பாசத்தைப் பதப்படுத்தியது ;
உடையை விரிவாக்கியது ;
உழைப்பை முறைப்படுத்தியது ;
மொழியை முழுமையாக்கியது ;
உணவை சீராக்கியது ;
வீட்டை அழகுபடுத்தது!

உண்மை தான். குடும்பம் என்ற ஒன்று தான் மனிதனை ஆற்றுப்படுத்தி மனிதனாக்கியது. திருமணம் வேறு ; இல்லறம் வேறு. திருமணம்-சடங்கு மட்டுமே. இல்லறமே உண்மையான வாழ்வு. இல்லறமே நல்லறம் என்பதை மிக அழகாக விளக்கி உள்ளார். ஒருவரை ஒருவர் புரிந்து மதித்து நடந்தால் இல்லறம் இனிக்கும். "வாழ்நாள் முழுவதும் நாம் பிரியாமலிருக்கப் போகிறோம்" என்று இயற்கையின் முன் சபதம் எடுப்பதே திருமணத்தின் தத்துவார்த்தம்".

சீர்திருத்தத் திருமணங்களிலும் "இன்ப, துன்பங்களில் பிரியாமல் உடன் இருப்பேன்" என்று உறுதிமொழி எடுப்பார்கள். அதுபோல மணமானவர்கள் பிரியவே கூடாது என்ற உறுதிமொழியை எடுத்துக்கொள்ள வேண்டும். பிரிவதற்கு இடம் தரக்கூடாது. பிரிய வேண்டும் என்ற எண்ணம் வராதவாறு இருவரும் நடந்து கொள்ள வேண்டும். இப்படி பல சிந்தனைகளை விதைத்துள்ளது இந்நூல்.

கசக்கினாலும் மணப்பேன் என்று சொல்லுவதற்கு மலரும்; கடித்தாலும் இனிப்பேன் என்பதற்குக் கற்கண்டும்; கரைந்தாலும் நறுமணம் தருவேன் என்பதற்கு சந்தனமும் திருமணத்திற்கு சாட்சியாக்கப்படுவது இருவருடைய சங்கற்பத்தை உணர்த்தவே!

"மணமகன் மோதிரம் அணிவிப்பது - அதன் மூலம் நான் உன் இதயத்தையே தொடுகிறேன் என்று சூசகமாக உணர்த்துவதற்காகவே. மணமகன் அணிவிக்கும் தாலி - பெண்ணின் இதயத்தின் மேற்பரப்பில் அவனையே நினைவூட்டுவது இம்மண்ணின் மரபு. மோதிரம் அணிவித்தல், தாலி கட்டுதல் போன்றவற்றின் காரண காரியங்களை நன்கு விளக்கி உள்ளார்.

"கணவனும் மனைவியும்" இந்த நொடியிலிருந்து புதிதாகப் பிறந்திருக்கிறோம் என்று முழுமையாய் உணரும் போது இல்லறம் மொட்டு விட துவங்கி. "நான் ஏற்கனவே குறையாகப் பிறந்தவன்(ள்) ; நீயே என்னை முழுமையாக்குகிறாய்" என்று இருவரும் எண்ணும் போது அது மலராகிறது.

ஒரு கணவன் முழுமையாவது மனைவியால்தான், ஒரு மனைவி முழுமையாவது கணவனால்தான். இந்த உண்மை இருவரும் புரிந்து நடந்தால் வாழ்க்கை இனிக்கும்.

திருமணம் முடிந்து முதல் முப்பது நாட்கள் சண்டை சச்சரவுகள் இன்றி அமைதியாக வாழ்க்கை நடத்தி விட்டால் அது முப்பது ஆண்டுகளுக்கும் மேல் நிலைக்கும், இனிக்கும் என்பதை நன்கு விளக்கி உள்ளார். திருமணமான இணைகள் முதல் முப்பது நாட்கள் கவனமாக வாழ்வது நல்லது. பின்னர் அந்த கவனமே தொடர்ந்து அமைதியாகவும், மகிழ்வாகவும் நிலைத்து விடும்.

"ஒருவர் கொதிக்கும் போது மற்றவர் பனிக்கட்டியாக வேண்டும். ஒருவர் பாலாய் பொங்கினால் மற்றவர் நீராய் இறங்க வேண்டும்"

உள்ளத்தால் ஒன்றி வாழ வழி எழுதி உள்ளார். இப்படி வாழ்க்கை பற்றிய புரிதலை உண்டாக்கும் நல்ல நூல். ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டை உலகிற்கே உணர்த்தியவர்கள் தமிழர்கள். இன்று இல்லறம் பற்றிய புரிதல் இன்றி பலர் மணவிலக்கு பெற்று வருகின்றனர். புரிதல் இருந்தால் விலக்கு வரவே வராது.

ஆணாதிக்க சிந்தனையின்றி கணவன் மனைவிக்கு இல்லறப் பணியில் உதவிட வேண்டும். மனைவியும் பணக்கார வீட்டில் பிறந்து இருந்தாலும், ஏழை வீட்டில் மணமுடிக்க நேர்ந்து இருந்தாலும் பிறந்த வீட்டுப் பெருமை பேசி கணவனை நோகடிக்கக் கூடாது. இதுபோன்ற பல அறிவுரைகள் நூலில் உள்ளன.

"பணியாளர் இருந்தாலும் பாசத்தோடு ஆற்ற வேண்டிய பணிகள் உண்டு. குழந்தையைக் குளிப்பாட்டுவது, கொஞ்சுவது, ஊட்டுவது" என்று பெற்றோர் பார்க்கும் பணிகளை அவர்களே கவனிப்பதே முறைமை. என்ன தான் பெரிய அதிகாரியானாலும் நடைப்பயிற்சி செய்ய நேர்முக உதவியாளரை நியமிக்க முடியாதே!

பணம் கொட்டிக் கிடந்தாலும் பணியாளர் பலர் இருந்தாலும் குடும்பத்தில் பாசத்தோடு பார்க்க வேண்டிய பணிகளை பெற்றோரே பார்க்க வேண்டும் என்று வலியுறுத்தியது சிறப்பு. 'இல்லறம் இனிக்க' இறையன்பு அவர்களின் அறிவுரைகள், அறவுரைகள், நல உரைகள், நல் உரைகள்.



உன் கவிதையில்
அடர்த்தியில்லையென
குறை கூறினான்
நண்பனொருவன்
அவளிருந்தால் போதுமென
மனதுக்குள்ளயே
நினைத்து கொண்டேன்!

அமுத விஷம் நீ பேசும்
வார்த்தைகள் தான்!

நரகத்தையும்,
சொர்க்கத்தையும்
ஒன்றாய் காணலாம்?
உன்னோடு இருக்கையில்!

சாப்பிட்டியா?
நல்லா இருக்கியா?
உன்னை பார்க்கணும்
போலிருக்கு ஐ லவ் யூ
ஐ மிஸ் யூ இப்படி
தினம்,தினம் சலிக்காமல்
உன்னோடு உரையாடும்
தொலைபேசி
உரையாடல்களை விட
அழகான வார்த்தை
தமிழில் ஏதடி?!

கடைசி துளி மிடறும் தேநீர்
உன்னை பிரியும் தருவாயில்
கிடைக்கும் முத்தம்
இரண்டும் அமுதம் தான்!!

**லி.நௌஷாத் கான்**



## அவனும் அவளும்

அவன் மௌனம்
அவள் விழிகள்...
சொல்லாத சொற்கள்
சந்திக்குது ஓர் நிமிடம்...

காற்றோடு போன கனவுகள்,
கண்ணில் தங்கிய
நினைவுகள், இரு உள்ளம்
அறியாமல் ஒரு பாதை
தேடும் நொடிகள்...

அவனும் அவளும்
பேசாத மொழியில்
புரிந்து
கொண்டஉறவல்லவா...
நிழலாய் நடந்து, நினைவாய்
போனாலும் நெஞ்சில் பதிந்த
உறவல்லவா...

அவன் பார்வையேக் கவிதை,
அவள் மௌனமே மொழி
இணையாமல் இணைந்தது
இதயம் அறியாத திசை...

ஒரே வானத்தின் கீழ்
வேறு வேறு நட்சத்திரங்கள்...

நேரம் சாட்சி இல்லை,
வார்த்தை தேவை இல்லை,
பார்வை ஒன்றே போதுமென
உலகம் மறந்த நிலை...

பெயரில்லா அந்த பந்தம்,
பிரிவில்லா ஒரு சொந்தம்,
காலம் மாறி போனாலும்
மாறாத ஓர் நினைவு...



அவனும்... அவளும்...
இதயத்தின் மூலையில்
என்றும் வாழும்
உயிரல்லவா...

**நா.பத்மாவதி**
கொரட்டூர்




## "கொள்ளிமேல் எறும்பு"

(இக்கவிதை அந்தாதித் தொடையில் அமைக்கப்பட்டது – அதாவது "ஒரு பத்தியில்
முடியும் சொல்லைக்கொண்டு அடுத்த பத்தியைத் தொடங்குவது" அந்தாதி எனப்படும்.
இன்னொன்று: கவிதையின் தொடக்கத்திலும் முடிவிலும் "உனக்கு" என்ற வார்த்தை வந்துள்ளது – இதுவும் "அந்தாதியின்" சிறப்பம்சமாகும்)

**அவன்**

உனக்காக ஒருமலரைத் தூதுவிட்டேன் அடிசகியே!
எனக்காக ஒருவார்த்தை சொல்லாமல் செல்கின்றாய்;
தினம்தினமும் எதிர்பார்த்து ஏக்கத்தில் இளைக்கின்றேன்–
வனமாக மாறிவிட்டால் என்னாகும் என்வாழ்க்கை?

**(1) அவள்**

வாழ்க்கைக்குத் துணையாக எவரேனும் கிடைத்திடுவர்!
பாழ்கிணற்றில் வீழ்ந்திட்டேன் என்மீது ஏன்காதல்?
ஊழ்வினையை மாற்றிவிட நீயென்ன பெருங்கடவுள்?
தாழ்வான குலத்தினிலே பிறந்ததுதான் என்குற்றம்.

**(2) அவன்**

குற்றத்தை உரைத்திட்டால் குறுகிடுமோ உன்வாழ்க்கை?
நற்றாமரை மலரடிநீ ஆதவனாய் நானிருப்பேன்;
பற்றற்று பேசிட்டால் ஞானிமனம் கொள்வாயோ?
சொற்பேச்சு கேட்டிடுவாய் உரைத்திடுநீ உன்காதல்.

**(3) அவள்**

காதலிங்கே குற்றமாகும் எவரேனும் புரிந்திட்டால்!
நீதிக்கு முரணாக வாழ்வதுதான் எம்வாழ்க்கை;
சோதனைகள் நீசெய்தால் கலக்கந்தான் தோன்றுமடா–
போதனைகள் செய்தாலும் கேட்கஇங்கே யாருமில்லை.

**(4) அவன்**

இல்லையென்று கூறுவதிலே உனக்கென்ன பெருவிருப்பம்?
சொல்லுக்கு மதிப்பின்றி எதிர்ப்பதுதான் உன்குற்றம்;
தொல்கதைகள் பலவுண்டு காதலுக்கு சாதியில்லை–
வில்வித்தை செய்கின்றாய் காதலுண்டு உன்கண்ணில்!

**(5) அவள்**

கண்ணில்லை காதலுக்கு என்றமொழி நானறிவேன்;
புண்பட்ட வாழ்க்கைக்கு இரையானேன் என்விதிதான்;
விண்மீது பறப்பதற்க்கு எனக்குள்ளும் ஆசையுண்டு–
மண்வாரித் தூற்றிடுவர் காதல்சொன்னால் எம்குலத்தார்!

**(6) அவன்**

குலத்தினிலே நாமெல்லாம் மனிதகுலம் தெளிந்திடுநீ;
புலன்களிலே நீகலந்தாய் உருகுதடி என்குருதி;
கலக்கத்தில் மூழ்கிட்டேன் காதல்வந்த நாள்முதலாய்–
நிலந்தனிலே சாய்ந்திடுவேன் நீமறுத்துப் போயிட்டால்.

**(7) அவள**

போய்விடுவேன் உனைவிட்டுப் போனாலும் சொல்வேன்கேள்!
மாயமாகும் காதலெல்லாம் வேறொருத்தி மணந்திட்டால்;
தேய்ந்திடுவேன் நிலவுபோல எறும்புக்கும் இரையாவேன்–
மாய்ந்திடுவேன் பின்னாளில் வருவாய்நீ இரங்கலுடன்.

**(8) அவன்**

இரங்கலுடன் வந்தலற நானொன்றும் கோழையில்லை;
உறங்காமல் காத்திடுவேன் காதலைநான் சேய்போல!
குரங்கைப்போல் தாவிட்டால் காதல்பழி கொள்ளுமடீ–
கிறங்கிப்போய் பேசவில்லை என்காதல் வெல்லுமடீ.

(9) (இதுவரை மறுப்பு சொன்னவள், மனம் மாறி, அவன் காதலை ஏற்கிறாள்) வெல்வதற்கு வந்துவிடு இப்பொழுதே பறைசாற்று!
வில்லறுத்து மணந்தவனைப் போல்நீயும் வென்றுவிடு!
மல்யுத்தம் புரிந்திடுவர் அனைவரையும் வென்றிடுவாய்!
கல்மாரிப் பொழிந்திடுவர் எனைநினைத்து அதைத்தாங்கு!

**(10) (மகிழ்ச்சியில் அவன் கூளுரைக்கின்றான்)**

தாங்கிட்டேன் இந்நாளாய் மனத்தாங்கல் ஏதுமில்லை!
தாங்கிடுவேன் எதைநானும் நீசொன்ன உறுதிபோதும்!
வாங்குவதற்கு நீயொன்றும் விலைமகளல்ல பெண்ணேகேள்!
ஆங்கேஎன் காதல்சொல்லி மணமுடிப்பேன் உன்னைநான்!

**(11) (அவனைப் புகழ்ந்து, அவனை மணப்பதாக உரைக்கின்றாள்)**

நானாளாய் வளர்ந்தகாதல் கண்டுவிடும் மணப்பந்தல்;
வானைப்போல் உயர்ந்திட்டாய் எல்லையில்லா நேசமிது;
ஊனக்கண் கொண்டிட்டார் எம்குலத்தார் என்செய்ய?
மானத்தைக் காத்திடுவேன் மனையாவேன் நானுனக்கே!

**B.Venkatakrishnan,** Thiruvallikeni



## ஹைக்கூ

ஆலமர நிழலில்
ஆழ்ந்த உறக்கத்துடன்
100 நாள் வேலையாட்கள்

பாரதி வேடம் போட
பக்கத்து வீட்டிற்கு சென்றது
மேக்கப் மேனின் குழந்தை

முதல் சம்பளத்தை யாரிடம்
கொடுப்பது.....? தவித்தார்..
பட்டிமன்ற நடுவர்.!

பொக்கை வாய்களால்
சிரித்து மகிழ்ந்தனர்...
பேத்தியும் பாட்டியும்.....!

100 சி.சி.டி.வி
1000 போலீசார்
இருந்தும்
உடைக்கப்பட்டது
உண்டியல்

காணிக்கை பணம்
எண்ணுவதற்கு...!

போலீஸ் பாதுகாப்பு
கத்தியுடன் நுழைந்தார்
டாக்டர், பிணவறைக்குள்....

எதையும் தாங்கும் இதயம்
நாங்க... பேசிய தலைவர்...
கீழே விழுந்தார்...
மேடை சரிந்து...!
பொரை ஏற போகுது
மெதுவா குடி என்றான்
சக குடிகாரன்...!

செல்லாத ரூபாயை
கிழவியிடம் தள்ளி விட்ட
மகிழ்ச்சியில் வண்டியை
எடுத்தான்...
இரு வீலும் பஞ்சர்...!

குடிகார நாயேன்னு
கணவனைதிட்டிய
மனைவியை
முறைத்தது தெருநாய்..!

அழும் குழந்தையை பார்த்து
அட்டகாசமாய்
சிரித்ததுபொம்மை...!



நோஞ்சான் வாலிபனை
குண்டர் சட்டத்தில்
அடைத்தனர் போலீசார்.

**நாகை பாபு.**

## எங்கள் ஊர்

கல்விக்கூடம் உள்ள ஊர்
கற்றவர்கள் நிறைந்த ஊர்
கதவே சாத்தாத ஊர் களவே
நடக்காத ஊர்

நாட்டில் உள்ள மொழிகள்
யாவும் வீட்டில் உள்ளோர்
பேசும் ஊர் காட்டில் வாழும்
மிருகம் கூட கூட்டில் வாழ
நினைக்கும் ஊர்

உண்மை அன்பு உணர்வு
எங்கும் உணர வைக்கும்
இந்த ஊர் உலக அனைத்து
மக்கள் வாழ்வில் உயர்வு
வேண்டி வணங்கும் ஊர்

வீதிகள் நிறைந்த ஊர்
சாதிகள் தெரியாத ஊர்
போதிமரம் வளரும் ஊர்



நீதிதேவன்
வாழும் ஊர்

தேடிவந்து
யாவரும்
கூடிவாழ நல்ல
ஊர்

**மீனாட்சி பாண்டியன்.**
திருவண்ணாமலை.

## கண்ணாடி

முகம் காட்டும் கண்ணாடி.
அகம் காட்டும் கண்ணாடி.
விதவிதமாய்க் கண்ணாடி.
வெளிநாட்டுக் கண்ணாடி.
வீடுகட்டக் கண்ணாடி.
கூடுகட்டக் கண்ணாடி. கண்
கெட்ட போது கண் தெரியக்
கண்ணாடி.

கண்ணைக் காப்பதற்கு கலர்
கலராய் கண்ணாடி. பின்னாடி
முன்னாடி கார் ஓட்டக்
கண்ணாடி தன்னை ரசித்து
தரம் உயர்த்தக் கண்ணாடி.
தண்ணீருக்குள் கண்ணாடி.
கண்ணீர் துடைக்கும்
கண்ணாடி.

விழி தெரியக் கண்ணாடி.
வழிகாட்டக் கண்ணாடி.
உடைமாற்றக் கண்ணாடி.
உருப்பெருகக் கண்ணாடி

முடிவெட்டக் கண்ணாடி.
முகமழிக்கக் கண்ணாடி.
சிங்காரிக்க கண்ணாடி.



சிலைவடிக்க
கண்ணாடி.
பனித்துளியில்
கண்ணாடி.
படிக்கட்டில்
கண்ணாடி.
விரிந்தும்
சுருங்கியும் விழிக்கச் செய்யும்
கண்ணாடி.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

## யார் விலங்கு

மானுட வடிவில் நடமாடும்
நயவஞ்சக குணத்தில்
உறவாடும்

இதழில் இனிமை
கலந்தோடும் செயலில்
வஞ்சகம் இழையோடும்

தன்னலம் மட்டும் தனதாக்கி
குணமே இல்லா மனிதரும்
கொண்ட கொள்கையால்
விலங்குக்கு ஒப்பாவர்

பெண்மையின் புனிதம்
அறியாது தாய்மையின்
தவமும் புரியாது தன்னலம்
பேணும் பிள்ளைகள்

உணர்ச்சி வேகச்
செயல்பாட்டால்
உணர்வை மறக்கும் மானுடம்

பிறர் மனம் உணராது
தேவை மட்டுமே இயல்பாக்கி
தேடித்தேடி உறவாக்கி
தேவைக்குப்பின் தூசாக்கி
தூக்கி எறியும் மனித குணம்

உருவில் மனித உடலெடுத்து
திருவாய்ப் பெற்ற குணம்
விடுத்து நயவஞ்சக
குணத்தாலேநானிலம் சுற்றும்
நாடக மனிதர்கள்

உருவம் பெற்ற விலங்கும்
உதவும் இங்கு சில நேரம்



உள்ளத்
தூய்மை
இல்லாதோர்
யாவரும்
இங்கே
விலங்காவர்.

**தமிழ்நிலா**



## பைரவர்!

மனிதரைச் சார்ந்து வாழும்
மாண்புடன் நன்றி சூழும்
கனிவுடன் மோப்பத் திறனும்
காணுமே ஒலியை அறியும்!

வீட்டுநாய் நன்றி காட்டும்
வெறிநாயைக் கண்டால்
ஓட்டும்
காட்டுநாய் கூட உண்டு
கடுமையாய்க் கோபம்
கொள்ளும்!

பன்மொழிப் பெயர்கள்
காணும் பைரவர் பெயரும்
உண்டு நன்றியில் நாயே
சிறப்பு நானிலம் போற்றும்
நாயை!

இலக்கியம் நாயைப் பாடும்



எகினனெனும்
பெயரும்
உண்டு
வளர்த்திடும்
நாயா னாலும்
வண்ணமாய்க்
கவனம்
வேண்டும்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## தேர்தல் காலம்

" பரிசுப் பொருட்களும்
இலவசமும் பணமும் காசும்
வேட்டி சேலை ..."

குவார்ட்டர் பிரியாணி
துண்டு சால்வை
மாலை மரியாதை .... "

கண்டதும் கும்பிடு
தனி விசாரிப்பு நலம் கேட்பு
விழாவிற்கு வருகை
தருவது.... "

காரணம் தேடி
போட்டி வைத்து
பரிசு கொடுப்பது ..."

சாலை ஒடுக்கு எடுப்பது
தெரு விளக்கு எரிய
வைத்தல் தண்ணீர் குழாய்
சரி செய்தல் ..."

சிறுவர் சிறுமியருக்கு
விளையாட்டு
பொருள் அளித்தல் ..."

மின் வெட்டு இல்லாமல்
சரிகட்டுதல் டீ குடித்தல்
டீ போடுதல் ... "

பஸ்ஸில் பயணம் நடந்து
மக்களை சந்தித்தல் ..."

வீதி உலா தொகுதி பக்கம்
முற்றுகை விடா முயற்சி ..."

தேர்தல் வரும் நேரம் காட்டும்
விளம்பர வித்தைகள்



கண்டுகளியுங்கள்
இலவச காட்சி
கட்டணம்
இல்லை ..."

**ஆர்.**
**சீதாராமன்**
சீர்காழி

## அன்புமொழி!

அன்புமொழி கேட்டுவிட்டால்
ஆறுதல்தான்
அடைந்திடுவோம்
அன்பொன்றே நிலையாகும்
அருளொன்றே கலையாகும்!
அன்பாலே அனைத்தையுமே
அடைந்திடலாம் எப்போதும்
அன்பேதான் வித்தாகும்
அழகான வாழ்க்கைக்கு!

அன்பாலே துன்பநிலை
அடுத்தநொடி மாறிவிடும்
அன்பைப்போல் ஒருசக்தி
யாருக்கும் அமைந்திடுக!
அன்பேதான் கடவுளென்றே
ஆன்றோரே உரைத்தனரே
அன்பேதான் வலிமையாகும்
அன்புக்கே ஈடில்லை!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

இழந்ததை எண்ணி தான்
பொல்லாத மனம் ஏங்குமாம்.
அந்த ஈவு இரக்கமுள்ள
கடவுளின் கால் பற்றி
வேண்டினேன். நான்
அவளோடு வாழ்ந்த
வாழ்க்கையை திரும்ப கொடு
என்று! கடவுள் இராட்சனாய்
மாறி புன்னகையித்தான்
வாழ்க்கையொன்றும் சினிமா
அல்ல டைம் லூப் கொடுத்து
உன்னை திரும்ப
அனுப்புவதற்கு என்று
பரிகாசித்தான்.
--------------------
கருவறைக்கு
மீண்டும் ஏங்கும்
பச்சிளம் குழந்தை.
உன் காதலுக்காக
மீண்டும் ஏங்கும்
பச்சபுள்ள மனசு!!
--------------------
நேரில் வந்த கடவுள்
உனக்கு என்ன வரம்



வேண்டுமென்றான்?
உன்னை காதலிப்பதே
வரம்தான் என்பதை
அவனுக்கு எப்படி சொல்ல?!
--------------------
நீ குடைபிடித்தால் மட்டும்
தண்டனைக்குரிய
குற்றமாக அறிவிக்கப்பட

வேண்டும் ஏனெனில்
மயில் மழையில்
நனைந்தால் தானே அழகு!!
--------------------
கடந்த காலம் மீண்டும்
வருமென்றால் உன் காதலை
தவிர வேறென்ன
கேட்டு விடப் போகிறேன்!!
--------------------
கலைடாஸ்கோப்பில்
சேகரிக்கப் பட்ட உன்
உடைந்த வளையல்கள் கூட
மண்ணை கிண்டும்
கோழியாய் உன் நினைவுகளை
கீறி,கிளறி அந்த பாழாய்
போன மனசை காயப்படுத்தி
விட்டு தான் செல்கிறது!



----------
----------
இப்பிரபஞ்சத்தின்
பேரழகான ஒன்று
உன் வெட்கம்!

**லி.நௌஷாத்**
**கான்**

## என்னைத் தெரியுமா?!

உன்னைப்பார்க்கா விட்டால்
பேசா விட்டால்
அணைக்கா விட்டால்
நினைக்கா விட்டால்
என் விழிகளில் கண்ணீரும்
மனதில் வலியும்
எண்ணத்தில் ஏக்கமும்
கொடிய பசலையும்
என்னை ஆட்டிப் படைக்கிறது
என்றெல்லாம் நீ
சொல்லும் போது கூட நான்
உணரவில்லை!
மெல்ல மெல்ல உன் பிரிவு
உன்னைப்பற்றிய ஏக்கம்
என்னில் படர்ந்த போது தான்
அறிந்தேன்!
கா த ல் எவ்வளவு
அழகானதோ
அத்தனைக்கத்தனை
ஆபத்தானதுமென்று!
உன் பிரிவும் சொல்லியது
நாம் பிரிந்திருக்கும் போது
நீ என்னிடம்
காதலைத் தெரியுமா?
*என்னைத் தெரியுமா?!
என்று பரிதவிப்புடன் கேட்கும்
போது மிக மிக நன்றாகவே
புரிகிறது நீயும் காதலும்
எனக்கு வெவ்வேறல்ல என்று!
--------------------
நீ என் எதிரே வரும்
போதெல்லாம் உன்
விழிகளின் பார்வைகள்
*என்னைத் தெரியுமா?!
என்று திரும்பத் திரும்பக்
கேட்டதால் தான் நான்
உன்னையும் உன்னிடமிருந்து
என் மீது பாய்ந்த
கா த லை யு ம் தெரிந்து
கொண்டேன்! ஒரு போர்ப்படை
போல் உன் விழிகளிலிருந்து
தொடர்ச்சியாகப் பாய்ந்த
அந்தக்கா த ல் க ணை க ள்
ஒவ்வொரு முறையும்
என்னை வீழ்த்திய பிறகல்லவா
ஓய்கிறது! அப்படியும் கூட
என்னை மீண்டும் மீண்டும்
எழ வைப்பது *என்னைத்
தெரியுமா?! என்ற உன்



பார்வை தானே!
--------------------
சில மங்கையரை நான்
பார்த்தும் பல தேவியர்
என்னைக்கண்டும்
கடந்து சென்றாலும்
தேவதை உன் கண்கள்
மட்டுமே என்னை
நேருக்கு நேராயப் பார்த்ததும்
*என்னைத் தெரியுமா?!
என்று கேட்டது!
இத்தனை கவிதைகளைக்
கூடக்கண்களில் வைத்திருக்க
முடியும் என்ற ஓர் அதிசய
அழகிய உண்மையை
உன் விழிகளைக் கண்ட
பிறகே நான் பிரமிப்பாக
நம்பினேன்! என் தொடர்
பார்வையோ கண்களை
மட்டுமா?! என்னையே நீ
படிக்கலாம் என்று
உன்னைக்கா த லா க் கி
என்னிடம் அழைத்து வந்தது!
--------------------
உத்தம புத்திரனாமே நீ?!
கா த லெ ன் றா ல் உனக்கு
என்னவென்றே தெரியாதாமே!
ஓர் ஓரப்பார்வை கூடப்

பார்க்கத் தெரியாத
அப்பாவியாமே நீ!
அடப்பாவி *என்னைத்
தெரியுமா?! உனக்கு!
உன்னை மிக விரைவிலேயே
உத்தம வில்லனாக்குகிறேன்
பார் என்றேல்லாம் பேசுகிறது
சொல்கிறது உன் பார்வை!
இதற்குப் பின்னரும் அமைதி
காக்க என் மனம் எனக்கு
உத்தரவிடுமா என்ன?
விரும்புகிறேன்
வரவேற்கிறேன்
வழி மொழிகிறேன்
காதலிக்கிறேன் என்றெல்லாம்
சொல்லச் சொல்லி
ஆணையிட்டு விட்டது!
உன் மீது கா த ல் கொண்ட
கா த லை மட்டுமே கொண்ட
என் அன்புள்ளம்!
--------------------
பீட்சா பர்கர் பாஸ்தா
நூடுல்ஸ் இவைகளின் நலன்
விரும்பி நீ!
*என்னைத் தெரியுமா?
என்று கேட்கிறாய்! உனக்கு
நான் கொழுப்பு கோமதி
என்று பட்டம் வழங்கிய
பின்னர் தானே நீ
என்னைச் சுற்ற ஆரம்பித்தாய்!
இதுதொடர்பாக பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள், அமைச்சர் ஆகியோருடன் 2 முறை நடத்திய பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படவில்லை. அதேபோல், போராட்டத்தில் பங்கேற்ற ஆசிரியர்களுக்கு ஊதியம் பிடித்தம் செய்யப்படும் என்று தொடக்கக் கல்வித் துறை எச்சரிக்கை விடுத்தது. எனினும், ஆசிரியர்களின் போராட்டம் தொடர்ந்தது.

இதற்கிடையே போராட்டத்தில் ஈடுபட்ட பெரும்பாலான இடைநிலை ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதத்துக்கான ஊதியத்தை தமிழக அரசு நிறுத்திவைத்தது. அதேநேரம் தொடர்ந்து 37-வது நாளாக சென்னை டிபிஐ வளாகம் முன் நேற்றும் இடைநிலை ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: விரைவில் மூவர் குழு அறிக்கை வெளியிடப்பட உள்ளது. அதன் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்கள் ஊதியப் பிரச்சினை குறித்து முடிவு எடுக்கப்படும். போராட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் பள்ளிக்குத் திரும்பி கற்பித்தல் பணிகளில் ஈடுபட வேண்டும். தமிழக அரசின் மீது நம்பிக்கை வைத்து போராட்டங்களில் ஈடுபடாமல் மாணவர்கள் நலன் கருதி பள்ளிக்கு தொடர்ந்து சென்று கற்பித்தல் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். மேலும், மொத்தமுள்ள இடைநிலை ஆசிரியர்களில் பணிகளுக்குச் செல்லாமல் இருக்கின்ற 5,781 ஆசிரியர்களையும் கற்பித்தல் பணிக்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து எஸ்எஸ்டிஏ பொதுச்செயலர் ஜெ.ராபர்ட் வெளியிட்ட அறிக்கையில், "அமைச்சர் கோரிக்கையை ஏற்றும், தமிழக அரசு மற்றும் முதல்வர் மீது நம்பிக்கை வைத்தும், மாணவர்கள் கல்வி நலன், நெடுநாட்களாகப் போராடிவரும் இடைநிலை ஆசிரியர்கள் உடல்நலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும் நல்லெண்ண அடிப்படையில் போராட்டம் தற்காலிகமாக தள்ளிவைக்கப்படுகிறது. கற்றல் இடைவெளியை நீக்கி முன்பைவிட கற்பித்தல் பணியில்வெகு சிறப்பாக ஈடுபடுவோம்" என்று தெரிவித்துள்ளார்.

## க்ரைம் கார்னர்

### கஞ்சா, போக்சோ வழக்கில் 2 பேர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது

**தூத்துக்குடி, பிப்.2:**

தூத்துக்குடியைச் சேர்ந்த அருள்ராஜ் (வயது 28), தூத்துக்குடி மாவட்டம், ஆத்தூர் பகுதியில் கஞ்சா விற்பனைக்காக வைத்திருந்த வழக்கில் தொடர்புடையவர் ஆவார். விளாத்திகுளத்தைச் சேர்ந்த அப்பண்ணசாமி(37), விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நடந்த போக்சோ வழக்கில் தொடர்புடையவர் ஆவார். மேற்சொன்ன 2 பேர் மீதும் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு ஆத்தூர் மற்றும் விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல்நிலைய இன்ஸ்பெக்டர்கள் மாவட்ட எஸ்.பிக்கு வேண்டுகோள் விடுத்தனர். அதன்பேரில் தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின் பேரில், மேற்சொன்ன 2 பேரையும் நேற்று போலீசார் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைத்தனர்.

### தூத்துக்குடியில் பெட்ரோல் குண்டு வீசிய 3 சிறுவர்கள் கைது

**தூத்துக்குடி, பிப்.2:**

தூத்துக்குடி முள்ளக்காடு, நேருஜிநகர் பகுதியை சேர்ந்த ரத்தினதுரை (வயது 70), அதே பகுதியில் மளிகை கடை நடத்தி வருகிறார். கடந்த மாதம் 10-ம்தேதி நள்ளிரவு மர்ம நபர்கள் இவரது மளிகை கடையின் ஷட்டர் பூட்டை உடைத்து கல்லாவில் இருந்த 10 ரூபாய் நாணயங்கள் மற்றும் அரை லிட்டர், ஒரு லிட்டர் குளிர்பானங்கள், சிப்ஸ், பிஸ்கட் வகைகள் 5 உள்ளிட்ட சிற்றுண்டி வகைகளை திருடிச் சென்றனர். தெருவில் நாய்கள் குறைக்காமல் இருக்க பிஸ்கட் மற்றும் சிப்ஸ்களை போட்டு விட்டு தப்பி சென்றனர். இதுகுறித்த புகாரின் பேரில் முத்தையாபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில் நேருஜி நகரில் திருட்டு நடைபெற்ற மளிகை கடை அருகே உள்ள பாஸ்கர் என்பவர் வீட்டு முன்பாக முன் விரோதம் காரணமாக 11 வயது, 12 வயதுக்கு உட்பட்ட 3 இளஞ்சிறார்கள் பெட்ரோல் குண்டு வீசியுள்ளனர். அது தரையில் விழுந்து வெடித்து சிதறி எரிந்துள்ளது. இதன் சத்தம் கேட்டு மளிகை கடைக்காரர் ரத்தினதுரை மற்றும் வீட்டில் வசித்த பாஸ்கர் ஆகியோர் வெளியே வந்து பார்த்து சிறுவர்களை சத்தம் போட்ட போது அவர்களையும் அந்த சிறுவர்கள் மிரட்டியுள்ளனர். இதுகுறித்த புகாரின் பேரில் முத்தையாபுரம் போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தி 3 இளஞ்சிறார்களையும் கைது செய்தனர். தொடர்ந்து விசாரணை நடத்தி மளிகைக் கடை திருட்டு வழக்கில் தொடர்பு உடையவர்களா? என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கிணற்றில் மூழ்கி 3 சிறுமிகள் உயிரிழப்பு

**ஆற்காடு, பிப்.2:**

ராணிப்பேட்டை மாவட்டம் கலவை வட்டம் ஆரூர் கிராமம் பொன்னியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் அசோகன் (36). தொழிலாளி. இவரது மூத்த மகள் யுவஸ்ரீ (13), இளைய மகள் பிரியங்கா (12). அப்பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் யுவஸ்ரீ 8-ம் வகுப்பும், பிரியங்கா 6-ம் வகுப்பும் படித்து வந்தனர். யுவஸ்ரீயின் தோழியான அப்பகுதியைச் சேர்ந்த வெங்கடேசன் என்பவரது மகள் பிரியா(13), அப்பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8-ம் வகுப்பு படித்து வந்தார். இந்நிலையில், யுவஸ்ரீ, பிரியங்கா, பிரியா ஆகியோர் அப்பகுதியில் உள்ள கிணற்றில் நேற்று துணி துவைக்கச் சென்றுள்ளனர். அப்போது, கிணற்றில் இறங்கிய 3 சிறுமிகளும் அடுத்தடுத்து நீரில் தவறிவிழுந்து மூழ்கினர். அவர்களது அலறல் சப்தம் கேட்டு வந்த அக்கம்பக்கத்தினர் மூவரையும் மீட்கும் பணியில் ஈடுபட்டனர். எனினும், சிறுமிகளை மீட்க முடியவில்லை. தகவலறிந்து வந்த கலவை போலீஸார் மற்றும் தீயணைப்புத் துறையினர் கிணற்றில் இறங்கி, நீரில் மூழ்கி உயிரிழந்த 3 சிறுமிகளின் உடல்களையும் மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் முதல்முறையாக சாம்பியன் பட்டம் வென்ற ரைபகினா

**சென்னை, பிப்.2:**

ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் தொடரின் 114ஆவது சீசன் தற்போதுஇறுதிக்கட்டத்தைஎட்டியுள்ளநிலையில்,சனியன்று மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள பெலாரசின் சபலென்கா – தரவரிசையில் 5ஆவது இடத்தில் உள்ள கஜகஸ்தானின் ரைபகினா பலப்பரீட்சை நடத்தினர். தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ரைபகினா வெற்றி பெற்று, முதல் முறையாக ஆஸ்திரேலிய ஓபன் கோப்பையை கைப்பற்றினார். ரைபகினாவிற்கு இது 2ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும். இதற்கு முன் 2022ஆம் ஆண்டு விம்பிள்டன் பட்டம் வென்றார். 3ஆவது முறையாக ஆஸ்திரேலிய ஓபன் பட்டம் வெல்லும் முனைப்பில் களமிறங்கிய சபலென்கா அதிர்ச்சி தோல்வியுடன் 2ஆம் இடம் பிடித்துள் ளார்.

### 25ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்வாரா ஜோகோவிச்?

**சென்னை, பிப்.2:**

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொட ரின் ஆடவர் ஒற் றையர் பிரிவின் இறுதி ஆட்டம் விடுமுறை நாளான ஞாயிறன்று நடைபெறு கிறது. இந்த ஆட்டத்தில் உலக தரவரிசையில் முதலி டத்தில் உள்ள ஸ்பெயி னின் அல்காரஸ் – தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருப்பவரும், அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான (24) செர்பியாவின் ஜோகோவிச்சும் பலப்பரீட்சை நடத்துகின்ற னர். இந்திய நேரப்படி மதியம் 2 மணிக்கு (சேனல் : சோனி ஸ்போர்ட்ஸ், சோனி லைவ் – ஓடிடி) நடைபெறும் இந்த ஆட்டத் தில் வெற்றி பெற்றால் ஜோகோவிச் "சில்வர் கிராண்ட்ஸ்லாம் (25ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம்)" என்ற மாபெரும் சாதனை க்குச் சொந்தக்காரராக உரு வெடுப்பார். இதனால் இறுதிப்போட்டியில் வெல்ல அவர் தீவிர முயற்சி மேற்கொள்வார் என எதிர் பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் முதல் முறையாக ஆஸ்திரேலிய ஓபன் கோப்பையை கைப்பற்றி, 7ஆவது கிராண் ட்ஸ்லாம் பட்டம் வெல்லும் முனைப்பில் அல்காரஸ் களமிறங்குகிறார். இரு வீரர்களும் வெற்றியின் மீது குறியாக களமிறங்குவதால் இந்த ஆட்டம் பரபரப்பாக நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

### கேரளாவில் சஞ்சு சாம்சன், தோனிக்கு பிரமாண்ட கட் அவுட்

இந்தியா – நியூஸிலாந்து அணிகளுக்கு இடையேயான 5ஆவது மற்றும் கடைசி டி–20 போட்டி (சுற்றுப்பயணத்தின் கடைசி போட்டி) கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் சனியன்று நடை பெற்றது. இந்த போட்டியை முன்னிட்டு இந்திய வீரர் சஞ்சு சாம்சன் மற்றும் முன்னாள் கேப்டன் தோனிக் காக திருவனந்தபுரத்தில் ரசிகர்கள் பிரமாண்ட கட் அவுட் வைத்துள்ளனர். கேரளாவைச் சேர்ந்த சஞ்சு சாம்சன், தோனி ஆகிய இருவரும் ஐபிஎல் தொடரில் ஒரே அணிக்காக (சென்னை) விளையாடி வரும் நிலையில், அம்மாநிலத்தைச் சேர்ந்த சென்னை ரசிகர்கள் இந்த கட் அவுட்டை வைத்து இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## நீலகிரியில் எத்தனை தனியார் தங்கும் விடுதிகளுக்கு சீல்? - அறிக்கை அளிக்க ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, பிப்.2:**

நீலகிரி மாவட்டத்தில் உரிய அனுமதியின்றி செயல்படும் எத்தனை ஹோம் ஸ்டே தனியார் தங்கும் விடுதிகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என்பது குறித்து அறிக்கை அளிக்க அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வனம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் என்.சதீஷ்குமார் மற்றும் டி.பரதசக்கரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வில், நீலகிரி மாவட்டம் ஊட்டியில் தங்கும் விடுதிகள் சட்டவிரோதமாக செயல்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்பட்டது.

இந்த சட்டவிரோத தங்கும் விடுதிகளுக்குஎதிராகநடவடிக்கை எடுக்காதது குறித்து கேள்வி எழுப்பிய நீதிபதிகள், ஊட்டி, கொடைக்கானலில் உள்ள அனைத்து HOME STAY தங்கும் விடுதிகளையும் ஆய்வு செய்ய, மாவட்ட வருவாய் அதிகாரி, நகராட்சி ஆணையர், மாவட்ட சுற்றுலாத்துறை அதிகாரி ஆகிய மூன்று பேர் அடங்கிய குழுவை நியமித்து உத்தரவிட்டனர்.

இக்குழுவினர் தங்கும் விடுதிகளை ஆய்வு செய்து, அவை உரிய கட்டிட அனுமதி பெற்றுள்ளனவா? சுற்றுலாத்துறை உரிமம் பெற்றுள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த ஆய்வில், உரிய அனுமதிகளை பெறாத சட்டவிரோத தங்கும் விடுதிகளை எதிராக உடனடியாக மூட வேண்டும் என உத்தரவிட்டிருந்தனர்.

இந்த நிலையில் வழக்கு மீண்டும் விசாரணை வந்தபோது, வனத்துறை சார்பாக அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், சிறப்பு வழக்கறிஞர் சீனிவாசன் ஆகியோர் ஆஜராகி, இதுவரை நீலகிரி மாவட்டத்தில் விதிமுறை மீறிய சுமார் 920 ஹோம் ஸ்டே தங்கும் விடுதிகளுக்கு நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளதாகவும், 76 விடுதிகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவாக நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிட்டு நிலை அறிக்கை ஒன்றையும் தாக்கல் செய்தனர்.

இதையடுத்து நீதிபதிகள், அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை ஏன் எடுப்பது இல்லை என கேள்வி எழுப்பினர். பின்னர் வழக்கு விசாரணையை 4 வாரம் ஒத்தி வைத்து அன்றைக்கு எத்தனை ஹோம் ஸ்டே (HOME STAY) விடுதிகள் மீது நடவடிக்கை எடுத்தீர்கள் என்ற விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

## பொங்கல் பரிசு தொகுப்பு, ரூ.3 ஆயிரம் ரொக்க பணத்தை 6 லட்சம் பேர் வாங்க ஆர்வம் காட்டவில்லை

**சென்னை, பிப்.2:**

தமிழகத்தில் கடந்த (ஜனவரி) மாதம் 15-ந்தேதி பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு, ரேஷன் கடைகளில் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுநீள கரும்பு மற்றும் வேட்டி, சேலையுடன் ரொக்க பணம் ரூ.3 ஆயிரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ரூ.3 ஆயிரம் ரொக்க பணத்திற்காக ரூ.6687.51 கோடியும், பச்சரிசி, சர்க்கரை, கரும்பு வாங்க ரூ.248.66 கோடியும், வேட்டி-சேலைக்காக ரூ.668.12 கோடியும் என மொத்தம் ரூ.7,604.29 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த நிலையில், ஜனவரி 4-ந்தேதி முதல் 7-ந்தேதி வரை வீடு வீடாக டோக்கன் வழங்கப்பட்டது. ஜனவரி 8-ந்தேதி பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகிக்கும் பணியை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை ஆலந்தூரில் தொடங்கி வைத்தார்.

உடனடியாக, தமிழகத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணிகள் தொடங்கின. போகி பண்டிகையான ஜனவரி 14-ந்தேதி வரை பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகிக்கும் பணிகள் நடைபெற்றன. ஆனால், பலர் சொந்த ஊருக்கு பொங்கல் கொண்டாட சென்றுவிட்டதால், இந்த பணியில் தொய்வு ஏற்பட்டது. இதனால், பொங்கல் விடுமுறை முடிந்த பிறகு, அதாவது ஜனவரி 19-ந்தேதி முதல் விடுபட்டவர்கள் ரேஷன் கடைகளில் பொங்கல் பரிசு தொகுப்பையும், ரூ.3 ஆயிரம் ரொக்க பணத்தையும் வாங்கி கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஜனவரி மாதம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில், சுமார் 6 லட்சம் ரேஷன் அட்டைதாரர்கள் பொங்கல் பரிசு தொகுப்பு, ரூ.3 ஆயிரம் ரொக்க பணம் ஆகியவற்றை வாங்க ஆர்வம் காட்டவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

## பட்ஜெட் அறிவிப்பில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் எதையும் காண முடியவில்லை - செல்வப்பெருந்தகை

**சென்னை, பிப்.2:**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

2026 - 27ம் ஆண்டுக்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை சம்பிரதாய நடைமுறைகளை மீறி விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்திருக்கிறார். 83 நிமிட உரையில் ஏராளமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால் நாட்டில் நிலவுகிற வேலையில்லா திண்டாட்டம், விவசாயிகளின் வருமானத்தை கூட்டுவது, விலைவாசிகளை கட்டுப்படுத்துவது, சிறு, குறு தொழில்களுக்கு ஊக்கம் தருகிற வகையில் எந்த விதமான அறிவிப்பும் வரவில்லை. அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பின்படி இந்தியாவில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிற பொருட்களுக்கு 50 சதவீத வரிவிதிப்பில் இருந்து நாட்டில் உள்ள தொழில்களை எப்படி பாதுகாக்க போகிறார் என்பதற்கான எந்த விதமான அறிவிப்பும் இல்லை. நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள் பயனடைந்த வகையில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் எதையும் பட்ஜெட் அறிவிப்பில் காண முடியவில்லை என்றார்.

## வணிகச் செய்திகள்

### மத்திய பட்ஜெட் தாக்கம்: பங்குச் சந்தைகள் கடும் வீழ்ச்சி!

**புதுடெல்லி, பிப்.2:**

மத்திய பட்ஜெட் 2026-ல் எதிர்கால ஒப்பந்தங்களுக்கான பத்திரப் பரிவர்த்தனை வரி (STT) உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, பங்குச் சந்தைகள் கடும் சரிவை சந்தித்தன.

மத்திய பட்ஜெட்டில் எதிர்கால ஒப்பந்தங்களுக்கான பத்திரப் பரிவர்த்தனை வரி (SECURITIES TRANSACTION TAX) தற்போதுள்ள 0.02 சதவீதத்திலிருந்து 0.05 சதவீதமாக உயர்த்தப்பட்டது. அனைத்து வகை பங்குதாரர்களுக்கும் பங்குகளைத் திரும்பப் பெறுதல் மூலம் கிடைக்கும் வருமானம் இனி மூலதன ஆதாயமாக வரி விதிக்கப்படும் என்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். இதனால் சென்செக்ஸ் 1,800 புள்ளிகளுக்கு மேல் சரிந்தாலும், பட்ஜெட் முழுமையாக தாக்கல் செய்யப்பட்ட பின்னர் மீண்டு 1,000 புள்ளிகள் சரிந்த நிலையில் வர்த்தகமானது. அதே சமயம், பிற்பகல் 1:09 மணி நிலவரப்படி, என்எஸ்இ நிஃப்டி50யானது 211.35 புள்ளிகள் சரிந்து 25,109.30 ஆக இருந்தது. இன்று நிஃப்டி 50 குறியீடு 25,333.75 இல் வர்த்தகத்தை தொடங்கியது. அதே நேரத்தில் பிஎஸ்இ சென்செக்ஸ் 82,445.97-இல் தொடங்கியது.

பிஎஸ்இ சென்செக்ஸ் பட்ஜெட் தாக்கலின் போது 2,370.36 புள்ளிகள் அல்லது 2.88 சதவீதம் சரிந்து, 80,000 புள்ளிகளுக்கு கீழே சென்றது. அதேபோல 50 பங்குகளைக் கொண்ட என்எஸ்இ நிஃப்டியும் இதே சரிவைப் பிரதிபலித்து, 748.9 புள்ளிகள் அல்லது 2.95 சதவீதம் சரிந்து 24,571.75 ஆக இருந்தது. பாரத் எலெக்ட்ரானிக்ஸ் பங்குகள் 6.50 சதவீதம் சரிந்தது, அதே நேரத்தில் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, எச்சிஎல் டெக், டாடா ஸ்டீல், ஏசியன் பெயிண்ட்ஸ் மற்றும் எடர்னல் ஆகிய பங்குகளும் சரிவை சந்தித்தன. சன் பார்மா, கோடக் மஹிந்திரா வங்கி மற்றும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் ஆகியவை லாபம் ஈட்டிய பங்குகள் ஆகும்.

## லட்டு தயாரிப்புக்கு விலங்கின் கொழுப்பு கலந்த நெய் விநியோகம்! ஆந்திர அமைச்சர் மீண்டும் குற்றச்சாட்டு

**திருப்பதி, பிப்.2:**

ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் திருப்பதி கோயில் லட்டு தயாரிப்புக்கு விநியோகிக்கப்பட்ட நெய்யில் விலங்கின் கொழுப்பு கலக்கப்பட்டதாக ஆந்திர நிதியமைச்சா பையவுலா கேசவ் மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளாா.

ஆந்திர சட்டப்பேரவைத் தோ்தலுக்கு பிறகு முதல்வராகப் பதவியேற்ற சந்திரபாபு நாயுடு கடந்த 2024-ஆம் ஆண்டு பேசுகையில், முந்தைய ஒய்எஸ்ஆா காங்கிரஸ் அரசின் ஆட்சியில் திருப்பதி லட்டு தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட நெய்யில் விலங்கின் கொழுப்பு கலக்கப்பட்டு மோசடி செய்யப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டினாா். இது நாடு முழுவதும் அதிா்வலையை ஏற்படுத்தியது. இதுகுறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட சிபிஐ தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு (எஸ்ஐடி) அண்மையில் நெல்லூா் நீதிமன்றத்தில் இறுதி குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. அதில் 9 திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் உள்பட 36 பேரின் பெயா்கள் குற்றஞ்சாட்டப்பட்டோா் பட்டியலில் இருந்தது. மேலும், நெய்யில் பாமாயில் உள்ளிட்டவை கலப்படம் செய்யப்பட்டு இருந்ததாகவும், விலங்கு கொழுப்பு கலக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒய்எஸ்ஆா் காங்கிரஸ் கட்சியும் கலப்படம் செய்யவில்லை எனதிட்டவட்டமாக மறுத்தது.

செய்தியாளா்களிடம் ஆந்திர நிதியமைச்சா் பையவுலா கேசவ் கூறியதாவது: ஆந்திரத்தில் முன்பு ஆட்சியில் இருந்த ஒய்எஸ்ஆா் காங்கிரஸ் அரசு, திருப்பதி லட்டு தயாரிப்புக்கு நெய் கொள்முதல் செய்வதை வா்த்தக நடவடிக்கையாகப் பாா்த்தது. திருப்பதி வெங்கடேஸ்வர சுவாமி மீது அவா்களுக்கு நம்பிக்கை இல்லை. மிகவும் உணா்வுபூா்வமான இந்த விஷயம் அரசுக்குத் தெரிய வந்தபோது, பொதுமக்களுக்கு அதை தெரியப்படுத்தவேண்டுமா? இல்லை 2022-இல் அவா்கள் செய்தது போல மூடிமறைக்க வேண்டுமா? மிகவும் பொறுப்புடைய நபா் என்பதால் அவா் (முதல்வா் சந்திரபாபு நாயுடு) தெரியப்படுத்தினாா்.

மைசூரில் உள்ள மத்திய உணவு ஆய்வு அமைப்பு கடந்த 2022-ஆம் ஆண்டில் நெய்யில் கலப்படம் செய்யப்பட்டு இருப்பதாக தெளிவாகத் தெரிவித்துவிட்டது. ஆனால், ஜெகன்மோகன் ரெட்டி அரசு அதை மூடிமறைத்துவிட்டது. இந்நிலையில், தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் தரப்பில் அந்த நெய்யில் விலங்கின் கொழுப்பு கலக்கப்பட்டு இருக்க சாத்தியக்கூறு இருப்பதாகத் தெரிவித்துள்ளது. இதே கருத்தைதான் முதல்வா் சந்திரபாபு நாயுடுவும் தெரிவித்திருந்தாா்.

நெய் கொள்முதலுக்கு முந்தைய ஒய்எஸ்ஆா் காங்கிரஸ் அரசு அமைத்த வாரியம், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நிபந்தனைகளைத் திருத்தியது.

# 250 ஆண்டுகளுக்குப் பிறகு கேரள கும்பமேளா கோலாகலம்!

மலப்புரம், பிப்.2:



கேரளாவில் 250 ஆண்டுகளுக்குப் பிறகு கும்பமேளா நிகழ்வு கோலாகலமாக நடைபெற்று வருகிறது. 'தென்னிந்தியாவின் கும்பமேளா' என்று அழைக்கப்படும் இந்த விழா, 'தட்சிண கங்கை' என்றும் அழைக்கப்படும் பாரதப்புழா ஆற்றங்கரையில் ஜனவரி 18 அன்று மிகுந்த உற்சாகத்துடன் தொடங்கியது.

மலப்புரத்தில் உள்ள திருநவயாவில் உள்ள பாரதபுழா ஆற்றங்கரையில் கடந்த இரண்டு வாரங்களாக நடைபெறும் இந்த 18 நாள் கும்பமேளாவில் பல்லாயிரக்கணக்கானோர் படித்துறைகளில் புனித நீராடி வருகின்றனர்.

10 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படும் இந்த மாபெரும் கும்பமேளா நிகழ்வுக்கு கேரள தேவசம் துறை அமைச்சர் வி.என்.வாசன் மற்றும் மாதா அமிர்தானந்தமயி ஆகியோர் ஏற்பாடுகளையும், பொருளுதவிகளையும் செய்து வருகின்றனர்.

இந்த கும்பமேளா ஜனவரி 18 அன்று ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கரால் தொடங்கி வைக்கப்பட்டது. அவர் அங்கடிபுரம் அலிப்பரம்பா களரியிலிருந்து ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்ட கொடியை ஏற்றினார். ஆளுநர் தனது உரையில், மாநிலத்தில் சனாதன தர்மத்தின் பாரம்பரியம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டதாக பாராட்டினார். அதே நேரத்தில் இது எந்த மதத்திற்கும் எதிராகப் பார்க்கப்படக் கூடாது என்றும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வினால் ஒவ்வொரு மாலையும், சூரியன் மறையும் வேளையில், பாரதப்புழா ஆற்றங்கரைகள் ஒளியும் பக்தியும் நிறைந்த ஒரு கண்கொள்ளாக் காட்சியாக மாறுகின்றன. பிரபலமான கங்கை ஆரத்தியை நடத்தும் உத்தரபிரதேசத்தின் காசி விஸ்வநாதர் கோயிலைச் சேர்ந்த அர்ச்சகர்கள், இங்கு "நிலா (பாரதப்புழாவின் மற்றொரு பெயர்) ஆரத்தி" என்று அழைக்கப்படும் நிகழ்வை நடத்துகிறார்கள்.

இந்த விழாவை சிறப்பாக நடத்த 300-க்கும் மேற்பட்ட காவல் துறையினர் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் வெடிகுண்டு கண்டறியும் குழுக்கள் நிகழ்விடத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. கும்பமேளா நிகழ்விடம் மற்றும் யாகசாலைக்குள் நுழைய முழுமையான சோதனைக்குப் பிறகே அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிக்காக கேரள மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகிறது. மேலும், வாரணாசி மற்றும் ரிஷிகேஷில் இருந்து கேரளாவின் எர்ணாகுளத்திற்கு தலா ஒரு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

கேரள கும்பமேளா ஏன் நிறுத்தப்பட்டது?: பாரதப்புழா ஆற்றங்கரையில் பாரம்பரியமாக 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த கும்பமேளா நடைபெற்று வந்தது. மாமாங்கம் என அழைக்கப்பட்ட இந்த விழா, மலபார் ஆங்கிலேயர் வசமானதைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டது.

இது குறித்து விளக்கிய சுவாமி ஆனந்தவனம் பாரதி, "270 ஆண்டுகளுக்கு முன்பு, ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்த நிகழ்வை நிறுத்திவிட்டனர். சுதந்திரத்திற்குப் பிறகு, இந்த பாரம்பரியத்தை மீட்டெடுக்க சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 2-3 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன, ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அவை தொடரவில்லை.

கடந்த சில ஆண்டுகளாகவே இந்தபாரம்பரியத்தை மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவிற்குப் பிறகு இதை ஒரு பெரிய நிகழ்வாக நடத்த உறுதியான முடிவு எடுக்கப்பட்டது" என்று தெரிவித்தார்.

## கஞ்சா எண்ணெய் கடத்திய வழக்கில் பெண்ணுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை

பாலக்காடு, பிப்.2:

கேரள மாநிலம் பாலக்காடு ரெயில் நிலையம் பகுதியில் கடந்த 2018-ம் ஆண்டு அக்டோபர் 10-ந்தேதி கலால்துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எம்.ராகேஷ் தலைமையில் சோதனை நடத்தப்பட்டது. அப்போது கஞ்சா எண்ணெய் கடத்தி வந்த தமிழ்நாடு தஞ்சாவூரை சேர்ந்த சிந்துஜா(வயது 29) என்பவரை கைது செய்தனர்.

மேலும் அவரிடம் இருந்து 2.5 கிலோ கஞ்சா எண்ணெய்யை பறிமுதல் செய்தனர். இந்த வழக்கு பாலக்காடு 2-ம் கூடுதல் செசன்ஸ் கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இந்தநிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி டி.சுதீர் டேவிட், கஞ்சா எண்ணெய் கடத்தி வந்த வழக்கில் சிந்துஜாவுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.1 லட்சம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். அபராதம் செலுத்த தவறினால் மேலும் 3 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி கூறினார். இதற்கிடையே ஜாமீனில் வெளியே வந்த அவர் நிபந்தனைகளை மீறி மீண்டும் கஞ்சா கடத்தியதற்காக கன்னியாகுமரியில் மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆந்திர முதல்வர் சந்திரபாபு தொகுதியில் இ-சைக்கிள் விநியோகத்தில் கின்னஸ் சாதனை




குப்பம், பிப்.2:

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தனது சொந்த தொகுதியான குப்பம் தொகுதியில் 3 நாட்கள் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். இதில் 2-ம் நாளான நேற்று பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மூத்த குடிமகன்கள் (வீட்டில் எத்தனை பேர் இருந்தாலும்), கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகளுக்கு தலா ரூ.4 ஆயிரம், மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.6 ஆயிரம், கடும் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தலா ரூ.15,000 என ஒவ்வொரு மாதமும் சரியாக 1-ம் தேதி வழங்கப்படுகிறது.

இதில் சந்திரபாபு நாயுடு தனது குப்பம் தொகுதியில் உள்ள பயனாளிகளுக்கு நேரில் இந்த உதவி தொகையை அவரவர் வீடுகளுக்கே சென்று வழங்கினார்.

அதன் பின்னர், குப்பம் தொகுதி சாந்திபுரத்தில் மகளிர் சுய உதவி குழுவினருக்கு மொத்தம் 5,555 இ-சைக்கிள்களை வழங்கினார். அப்போது சந்திரபாபு, மகளிர் உட்பட அனைவரும் சுமார் 3 கி.மீ தூரம் பொதுக்கூட்ட மேடை வரை சைக்கிளில் வந்தனர். 5555 இ-சைக்கிள்கள் விநியோகம், 3 கி.மீ. தூரம் வரை அனைவரும் அதனை ஓட்டியபடி வந்தது என்பது கின்னஸ் சாதனை என கூறி, அங்கிருந்த கின்னஸ் புத்தக பிரதிநிதிகள் அதற்கான சான்றிதழை வழங்கினார்.

## தமிழக சட்டமன்ற தேர்தல்: 'இலவசம்' வாக்குறுதிகளுக்கு தடை கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு

புதுடெல்லி, பிப்.2:



தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு முன் இலவச வாக்குறுதி திட்டங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பதற்கு தடை விதிக்க உத்தரவிடக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மதுரையை சேர்ந்த கே.கே.ரமேஷ் சார்பில் வக்கீல் ஜெய சுகின், நரேந்தர் குமார்வர்மா ஆகியோர் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில், "தேர்தலுக்கு முன் இலவச வாக்குறுதி திட்டங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பதால் மாநில அரசுக்கு நிதிச்சுமை ஏற்படுகிறது.

அறிவிக்கப்படும் இலவச வாக்குறுதி திட்டங்களால் ஏற்படும் நிதிசார் பாதிப்புகள், அதற்கான நிதி முதலீடு குறித்து அரசியல் கட்சிகள் வெளியிட வேண்டும்.

எனவே, தமிழக சட்டப்பேரவைத்தேர்தலுக்கு முன் இலவச வாக்குறுதி திட்டங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பதற்கு தடை விதிக்க மத்திய அரசுக்கும், தேர்தல் கமிஷனுக்கும் உத்தரவிட வேண்டும்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன் இலவச வாக்குறுதி திட்டங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பதை தடுக்க தேர்தல் நடத்தை விதிகளை திருத்த வேண்டும்.

இலவச வாக்குறுதி திட்டங்களின் சாத்தியக்கூறுகளை ஆராய நிதி ஆயோக், ரிசர்வ் வங்கி போன்றவற்றின் நிபுணர்களை கொண்ட சுதந்திரமான குழுவை கொண்டு ஆராய வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.ஜி. அந்தஸ்து பெற 2 ஆண்டுகள் மத்திய பணி கட்டாயம் - மத்திய அரசு உத்தரவு

புதுடெல்லி, பிப்.2:

மத்திய அரசில் ஐ.ஜி. மற்றும் அதற்கு சமமான அந்தஸ்து கொண்ட ஐ.பி.எஸ். அதிகாரிகள் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு மத்திய அயற்பணியில் 2 ஆண்டுகள் போலீஸ் சூப்பிரண்டு அல்லது டி.ஐ.ஜி. அந்தஸ்தில் பணியாற்றுவது கட்டாயம் என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. 2011-ம் ஆண்டு பேட்ச் மற்றும் அதற்கு பிந்தைய பேட்ச் போலீஸ் அதிகாரிகளுக்கு இந்த உத்தரவு பொருந்தும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளுக்கு மத்திய அரசில் கீழ்மட்டத்தில் பணியாற்றிய அனுபவம் இருக்கவேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருப்பதாக ஒரு அதிகாரி தெரிவித்தார். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு ஏற்கனவே இதுபோன்ற நிபந்தனை உள்ளது.

## பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை: தலைமை ஆசிரியர் கைது

கவுகாத்தி, பிப்.2:

அசாம் மாநிலம் சோனித்பூர் மாவட்டம் மிசாமாரி நகரில் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியின் தலைமை ஆசிரியராக கனக் சந்திர பொர்டொலொய்.

இவர் பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வரும் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். கடந்த 23ம் தேதி இந்த சம்பவம் நடந்துள்ளது. இந்த சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவி கடந்த சில நாட்களுக்குமுன் பொற்றோரிடம் கூறியுள்ளார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர், உடனடியாக போலீசில் புகார் அளித்தனர். புகாரை தொடர்ந்து வழக்குப்பதிவு செய்த போலீசார், மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தலைமை ஆசிரியர் கனக் சந்திராவை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## இந்திய அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்திய பாரத் ஜோடோ யாத்திரை: காங்கிரஸ் கட்சி பெருமிதம்

புதுடெல்லி, பிப்.2:

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் 'எக்ஸ்' தளத்தில் நேற்று வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை மேற்கொண்ட பாரத் ஜோடோ யாத்திரை நகரில் மூன்று ஆண்டுகளுக்கு முன் நிறைவடைந்தது. 4,000 கி.மீ. தூர நடைப்பயணத்தை ராகுல் காந்தியும், 200-க்கும் மேற்பட்ட தொண்டர்களும் மேற்கொண்டனர். இது 145 நாட்களுக்கும் மேலாக நீடித்தது. 12 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களை கடந்து சென்றது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தல், சமூகப் பிளவு ஆழமடைதல், அரசியல் சர்வாதிகாரம் பெருகுதல் ஆகிய மூன்று செய்திகளை மக்களிடம் கொண்டு சென்ற இந்த யாத்திரை, நமது நாட்டின் அரசியலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகும். இது வரும் தசாப்தங்களுக்கு நினைவுகூரப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## அமெரிக்க பங்குச்சந்தையின் வக்கீல் நோட்டீசை ஏற்க அதானி சம்மதம்

புதுடெல்லி, பிப்.2:




அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் அமெரிக்காவில் முதலீட்டாளர்களிடையே முதலீடு திரட்டியது. லஞ்சம் கொடுக்கப்பட்டதை மறைத்து, தவறான தகவல்களுடன் முதலீட்டாளர்களை திசைதிருப்பி முதலீடு திரட்டப் பட்டதாக புகார் எழுந்தது.

இதுகுறித்து கவுதம் அதானி, அவருடைய உறவினர் சாகர் அதானி ஆகியோர் மீது அமெரிக்காவில் புரூக்ளின் நகரில் உள்ள கோர்ட்டில் கடந்த 2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்க பங்குகள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் வழக்கு தொடர்ந்தது. அத்துடன், இந்தியாவில் ரூ.2 ஆயிரத்து 400 கோடி லஞ்சம் அளித்ததாக அமெரிக்க அரசு வக்கீல்கள் மற்றொரு வழக்கு தொடர்ந்தனர்.

ஆனால், அதானியும், சாகர் அதானியும் இந்தியாவிலேயே இருந்து விட்டதால், அமெரிக்க முதலீட்டாளர்களை ஏமாற்றிய வழக்கில், அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையத்தால் அவர்களுக்கு நோட்டீஸ் அளிக்க முடியவில்லை. அதனால் இவ்வழக்கு ஓராண்டுக்கு மேலாக முடங்கிக் கிடந்தது.

வக்கீல் நோட்டீஸ் வழங்க மாற்று வழிமுறைகளை கையாளுமாறு கோர்ட்டை அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையம் கேட்டுக்கொண்டது. இந்நிலையில், புரூக்ளின் கோர்ட்டில் அதானியின் வக்கீல்கள் ஒரு மனு தாக்கல் செய்துள்ளனர். அதில், அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையத்தின் வக்கீல் நோட்டீசை ஏற்க அதானியும், சாகர் அதானியும் சம்மதம் தெரிவித்து விட்டதாக கூறியுள்ளனர்.

இந்த மனுவை நீதிபதி ஏற்றுக்கொண்டால், அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையம் வழக்கை முன்னெடுத்துசெல்லும். 90 நாட்களுக்குள் அதானி பதில் மனு தாக்கல் செய்ய நீதிபதி அனுமதி அளிப்பார்.

அதற்கு ஆணையம் 60 நாட்களுக்குள் ஆணையம் எதிர்மனு தாக்கல் செய்த பிறகு, அதானி 45 நாட்களுக்குள் மீண்டும் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று அமெரிக்க நீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## 2-வது திருமணம், லிவிங் டுகெதர் குற்றங்களுக்கு 7 ஆண்டு சிறை: உத்தராகண்ட் பொது சிவில் சட்டத்தில் திருத்தம்

டேராடூன், பிப்.2:

இந்தியாவில் முதல் மாநிலமாக உத்தராகண்டில் பொது சிவில் சட்டம் கடந்த 2025 ஜனவரி 27 முதல் அமலுக்கு வந்துள்ளது. இது மதம், பாலின வேறுபாடின்றி திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை மற்றும் லிவ்-இன் உறவுகளுக்கு (திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழ்வது) ஒரே சட்டவிதிகளை உறுதி செய்கிறது.

இந்நிலையில் பொது சிவில் சட்டத்தில் திருத்தங்கள் செய்து அதை உத்தராகண்ட் அரசு வலுப்படுத்தியுள்ளது. இந்த திருத்தங்கள் தொடர்பான அவசர சட்டத்துக்கு மாநில ஆளுநர் குர்மீத் சிங் ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து புதிய விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இதன்படி கட்டாயமாகவோ அல்லது மோசடியாகவோ திருமணம் செய்வது மற்றும் லிவ்-இன் உறவில் ஈடுபடுவதற்கு கடும் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒருவர் தனது திருமணத்தை மறைத்து இன்னொரு திருமணம் செய்துகொள்வது அல்லது லிவ்-இன் உறவில் ஈடுபடுவது இனி கடும் குற்றமாக கருதப்படும். இதுபோல் லிவ்-இன் உறவில் உள்ள ஒருவர் அதை மறைத்து மற்றொரு லிவ்-இன் உறவில் ஈடுபடுவதும் கடும் குற்றமாகும். இந்த குற்றங்களுக்கு இனி 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும். சிறாருடன் லிவ்-இன் உற வில் ஈடுபடும் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு 6 மாத சிறை, ரூ.50,000 அபராதம் விதிக்கப்படும்.

# எப்ஸ்டீன் கோப்புகளில் மோடியின் பெயரா? மத்திய அரசு மறுப்பு!

புதுடெல்லி, பிப்.2:




எப்ஸ்டீன் கோப்புகள் விவகாரத்தில் பிரதமர் மோடியின் இடம்பெற்றிருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்த நிலையில், மத்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம், "எப்ஸ்டீன் கோப்புகளிலிருந்து ஒரு மின்னஞ்சல் செய்தி பற்றிய அறிக்கைகளை நாங்கள் கண்டோம். அதில் பிரதமர் மோடி மற்றும் அவரது இஸ்ரேல் வருகை பற்றிய குறிப்பு உள்ளது.

2017 ஜூலையில் பிரதமர் மோடியின் இஸ்ரேல் வருகையைத் தவிர, மின்னஞ்சலில் உள்ள மற்ற குறிப்புகள் அனைத்தும் குப்பையைப் போன்ற வதந்திகளைவிட சற்று அதிகமே. இது மிகவும் அவமதிப்புடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்காவில் பெரும் பணக்காரரான ஜெஃப்ரி எப்ஸ்டீன், சிறுமிகளைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றவாளியும்கூட. இவரின் குற்றச் செயல்கள் அடங்கிய சுமார் 30 லட்ச பக்கங்கள் கொண்ட ஆவணங்கள், புகைப்படங்கள், விடியோக்கள் அடங்கிய தொகுப்புதான் எப்ஸ்டீன் ஃபைல்ஸ். அமெரிக்காவில் பெரும் பரபரப்பைக் கிளப்பிக் கொண்டிருக்கும் எப்ஸ்டீன் கோப்புகள் விவகாரத்தில் பல்வேறு அரசியல் மற்றும் முக்கிய பிரமுகர்களும் சிக்கியிருப்பதாக அவ்வப்போது அந்நாட்டு நீதித் துறை கூறி வருகிறது.

இந்த நிலையில், பிரதமர் மோடியின் பெயரும் இடம்பெற்றிருப்பதாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து, காங்கிரஸூம் கேள்வி எழுப்பியுள்ளது.

எப்ஸ்டீன் கோப்புகளைக் குறிப்பிட்டுப் பேசிய காங்கிரஸ் தலைவர் பவன் கேரா, "இது தேசத்துக்கே அவமானகரமான ஒன்று. அமெரிக்க அதிபருக்காக இஸ்ரேலில் பிரதமர் மோடி ஆடிப் பாடியதாக எப்ஸ்டீன் கோப்புகளில் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் மூலம் அவருடன் (எப்ஸ்டீன்) பிரதமருக்கு நெருக்கம் இருக்கக் கூடும் என்று தெரிகிறது.

எப்ஸ்டீனுக்கும் பிரதமர் மோடிக்கும் இடையிலான இந்த மன்னிக்க முடியாத தொடர்பு, நாட்டின் கண்ணியம் மற்றும் சர்வதேச நற்பெயரைக் கெடுப்பதாய் இருக்கும். இதுகுறித்து பிரதமர் மோடியிடமிருந்து உடனடியான பொறுப்புக் கூறலும் விளக்கமும் அளிக்கப்பட வேண்டும்" என்று பிரதமர் மோடி மீது கேள்வி எழுப்பினார்.

## ராமர் கோயில் கட்டுமான பணி ஏப்ரல் மாதம் முடிவடைகிறது

அயோத்தி, பிப்.2:

அயோத்தி ராமர் கோயில் கட்டுமான குழுவின் ஆலோசனை கூட்டம் நேற்று முடிவடைந்தது. இதன்பின் ராமர் கோயில் கட்டுமான குழுவின் தலைவர் நிருபேந்திர மிஸ்ரா அளித்த பேட்டியில் கூறியதாவது:

ராமர் கோயில் கட்டுமானப் பணிகளை எல் அண்ட் டி மற்றும் டாடா கன்சல்டன்சி நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. இந்த நிறுவனங்கள் ஏப்ரல் 30-ம் தேதிக்குள் தங்கள் பணிகளை முடித்து விட்டு கோயில் வளாகத்தை விட்டு வெளியேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. கட்டுமானத்துக்கான பணம் செலுத்துதல் உட்பட அனைத்து பணிகளையும் நிறைவு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் அனைத்துக்கும் 3 ஆண்டு உத்தரவாதம் வழங்கியுள்ளன. பராமரிப்பு பணிக்கான ஒரு சிறு குழு மட்டும் கோயில் வளாகத்தில் தங்கியிருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# வெனிசுலாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்கும்: டிரம்ப் சொல்கிறார்

**வாஷிங்டன், பிப்.2:**

ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்த அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்து, இந்திய பொருட்கள் மீதான வரியை 50 சதவீதம் உயர்த்தினார். இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்தியா-அமெரிக்கா இடையே வர்த்தக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதற்கிடையே ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை இந்தியா கணிசமாக குறைத்து விட்டதாக டிரம்ப் தெரிவித்தார்.



இதற்கிடையே வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மாடுரோ, அவரது மனைவியை போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் அமெரிக்கா கைது செய்த நிலையில், அந்நாட்டின் எண்ணெய் வளங்களை அமெரிக்கா நிர்வகிக்கும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.இதில், ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை குறைத்துள்ள இந்தியாவுக்கு வெனிசுலா நாட்டு கச்சா எண்ணெய்யை வழங்க முடிவு செய்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்தது.இந்த நிலையில் வெனிசுலாவின் கச்சா எண்ணெய்யை இந்தியா வாங்கும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார். தலைநகர் வாஷிங்டனில் இருந்து புளோரிடாவுக்கு டிரம்ப், ஏர் போர்ஸ் ஒன் விமானத்தில் சென்றபோது நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"வெனிசுலாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா வாங்க உள்ளது. அவர்கள் ஈரானிடம் இருந்து வாங்குவதற்குப் பதிலாக வெனிசுலாவிடம் இருந்து எண்ணெய் வாங்கப் போகிறார்கள். நாங்கள் ஏற்கனவே ஒப்பந்தத்தின் கருத்தை உருவாக்கிவிட்டோம். சீனா எண்ணைக்கான ஒரு சிறந்த ஒப்பந்தத்தைச் செய்வதை நாங்கள் வரவேற்கிறோம்... நாங்கள் ஏற்கனவே ஒரு ஒப்பந்தம் செய்துள்ளோம். வெனிசுலாவை இப்போது நான்தான் ஆட்சி செய்கிறேன். இடைக்கால அதிபரான டெல்சி ரோட் ரிக்ஸ், நான் விரும்புவதை எல்லாம் செய்யும் வரை அவர் அந்த பதவியில் இருக்க அனுமதித்துள்ளேன்." இந்தியாவின் முக்கிய கச்சா எண்ணெய் ஆதாரங்களில் ஒன்று ஈரான் இருந்தது.

ஆனால் ஈரான் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்ததையடுத்து, இந்தியா ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை பெருமளவில் குறைத்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## கியூபா விவகாரத்தில் அவசர நிலை அறிவிப்பு

**கீவ், பிப்.2:**

கியூபாவுக்கு கச்சா எண்ணெய் விநியோகம் செய்யும் நாடுகளின் மீது புதிய வரி விதிக்கும் நிர்வாக உத்த ரவில் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார். இந்த உத்தரவுக்குப் பதிலடியாக, கியூபா "சர்வதேச அவசரநிலை யை" பிரகடனப்படுத்தியுள்ளதாக அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் புருனோ ரோட்ரிக்ஸ் பரிலா தெரிவித்துள்ளார். இந்த அச்சுறுத்தல் அனைத்து நாடுகளின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள் கைகள், சர்வதேச அமைதி, பாதுகாப்பு, அணுசக்தி அச்சுறுத்தல்கள் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு மத்தியிலான மனிதகுலத்தின் உயிர்வாழ்விற்கும் ஆபத்தை விளைவிக்கும் எனவும் தெரிவித்தார்.

## சீனாவின் வளர்ச்சி அச்சுறுத்தலாக இருக்காது

சீனா- பிரிட்டன் ஆகிய இரு நாடுகளும் நீண்டகால, நிலையான மற்றும் விரிவான திட்டமிட்ட உறவை மேம் படுத்த ஒப்புக்கொண்டுள்ளன. உலக அமைதியை நிலைநாட்டவும், இரு நாட்டு மக்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்தவும் இந்த ஒத்துழைப்பு உதவும். சீனா எப்போதும் அமைதியான வளர்ச்சியை மட்டுமே விரும்புகிறது. சீனா இதுவரை எந்தப் போரையும் தொடங்கியதில்லை. சீனா எவ்வளவு வளர்ச்சியடைந்தாலும், அது மற்ற நாடுகளுக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக இருக்காது என சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் தெரிவித்துள்ளார்.

## சூடானில் போரை நிறுத்துங்கள் : குட்டரெஸ் வலியுறுத்தல்



தெற்கு சூடானில் நடைபெற்று வருகிற உள்நாட்டுப்போரை உடனடியாக நிறுத்திவிட்டுப் பேச்சுவார்த்தை யைத் தொடங்க வேண்டும் என்று ஐ.நா அவை பொதுச்செயலாளர் அந்தோணியோ குட்டரெஸ் வலி யுறுத்தியுள்ளார். இந்த போரில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். தெற்கு சூடானின் ஜொங்லே மாகாணத்தில் மட்டுமே சுமார் 1,80,000 பொதுமக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப் பட்டுள்ளனர். சூடானில் நிலவும் நெருக்கடிக்கு ராணுவ ரீதியான தீர்வு கிடையாது, அரசியல் ரீதியான தீர்வு மட்டுமே சாத்தியம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## காசாவில் குண்டு வீச்சு: 12 பேர் படுகொலை

காசா மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 12 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வடக்கு மற்றும் தெற்கு காசாவிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு, கூடாரம் என பாலஸ்தீன பொது மக்கள் இருக்கும் இடங்களை குறிவைத்து இஸ்ரேல் விமானப்படை குண்டுவீசியுள்ளது. இதில் இருவேறு குடும்பங் களைச் சேர்ந்த இரண்டு பெண்கள் மற்றும் ஆறு குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 2025 அக்டோபர் 10 அன்று போர்நிறுத்தம் அமலுக்கு வந்ததிலிருந்து இஸ்ரேல் ராணுவம் 500-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களை படுகொலை செய்துள்ளது.

## டிரம்ப், நேதன்யாகுதான் பதற்றத்தை தூண்டுகின்றனர் : ஈரான்

டிரம்ப், நேதன்யாகு மற்றும் ஐரோப்பிய நாடுகள் இணைந்து தான் ஈரான் மக்கள் போராட்டத்தில் பதற்றத்தைத் தூண்டி விட்டுள்ளனர் என ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியான் குற்றம் சாட்டி யுள்ளார். அமெரிக்கத் தடைகளால் உருவான பொருளாதார நெருக்கடி உச்ச கட்டத்தை அடைந்துள்ள நிலை யில், ஈரானில் மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. அரசின் அடக்குமுறையில் உள்ளது. இந்நிலையில் ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி 2,000 பாதுகாப்புப் படை வீரர்கள் உட்பட 3,100 பேர் இந்த போராட்டத்தில் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## பலுசிஸ்தானில் துப்பாக்கி சூடு: 15 பாகிஸ்தான் ராணுவ வீரர்கள், 92 பயங்கரவாதிகள் உயிரிழப்பு

**இஸ்லாமாபாத், பிப்.2:**

பாகிஸ்தானின் தென்மேற்கே அமைந்த இயற்கை வளங்கள் நிறைந்த பெரிய மாகாணம் பலுசிஸ்தான். அங்கு வாழும் ஒரு பகுதி மக்கள் பாகிஸ்தான் அரசிடம் இருந்து தங்களுக்கு விடுதலை வேண்டும் என போராடி வருகின்றனர். மேலும், பலுச் விடுதலைப்படை அமைப்பை சேர்ந்தவர்கள் வெடிகுண்டு தாக்குதல் உள்ளிட்ட பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தானில் செயல்பட்டு வரும் தலிபான்களின் கிளை அமைப்பான தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பை சேர்ந்தவர்கள் பலுசிஸ்தானில் பதுங்கி இருப்பதாக பாகிஸ்தான் அரசு குற்றம்சாட்டி வருகிறது. இதையடுத்து, பாகிஸ்தான் ராணுவம் பலுசிஸ்தானில் தொடர்ந்து பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், பலுசிஸ்தானில் நேற்று பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் நடத்திய பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையின்போது, ராணுவ வீரர்களுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கி சண்டை வெடித்தது. இந்த மோதலில் 15 பாகிஸ்தான் ராணுவ வீரர்கள், 92 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

இதே போல், நேற்று முன்தினம் பலுசிஸ்தானில் உள்ள பஞ்ஜ்குர் மற்றும் ஹர்னாய் ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 41 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இதன் மூலம், பலுசிஸ்தானில் கடந்த 2 நாட்களில் கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் எண்ணிக்கை 133 ஆக அதிகரித்துள்ளது.

பலுசிஸ்தானில் சமீபத்திய ஆண்டுகளில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அங்கு கடந்த ஆண்டு 956 பேர் பயங்கரவாத தாக்குதல்களில் உயிரிழந்துள்ளனர். இது முந்தைய ஆண்டை விட சுமார் 22 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைதி ஒப்பந்தத்தை மீறி இஸ்ரேல் தாக்குதலில் 25 பாலஸ்தீனர்கள் பலி

**ராபா, பிப்.2:**

காசாவில் உள்ள பாலஸ்தீனர்கள் எல்லையை கடந்து செல்ல ஏதுவாக, காசா-எகிப்து இடையேயான ராபா எல்லையை இஸ்ரேல் விரைவில் திறப்பதாக அறிவித்தது. அதன்படி சுமார் 3 ஆண்டுகளுக்கு பிறகு இன்று (ஞாயிற்றுக்கிழமை) திறக்கப்படுவதாக இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நேற்று அதிகாலை காசாவில் உள்ள ராபா பகுதி உள்பட பல்வேறு பகுதிகளில் இஸ்ரேல் ராணுவத்தினர் குண்டுகளை வீசியெறிந்தும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் தாக்குதல் நடத்தினர். இந்த கொடூர தாக்குதலில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்பட 30 பேர் உயிரிழந்தனர்.

காசா-இஸ்ரேல் இடையே அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தி போரை நிறுத்தினார். அமைதி ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளநிலையில் பாலஸ்தீனம் மக்கள் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

## பாலியல் புகாரில் சிக்கிய நார்வே இளவரசியின் மகன்

**ஓஸ்லோ, பிப்.2:**

நார்வே நாட்டு இளவரசி மெட்-மேரிட்டின் மூத்த மகன் மரியஸ் போர்க் ஹோய்பி (வயது 29) ஆவார். இவர் மயக்க நிலையில் இருந்த பெண்ணை வன்கொடுமை செய்தார். மேலும் பெண்களைத் தாக்கியது மற்றும் போதைப்பொருள் கடத்தல் உள்பட இவர் மீது 38 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மரியஸ் போர்க் ஹோய்பிக்கு சலுகை அளிக்கப்படாது எனவும், சட்டம் தன் கடமையைச் செய்யும் இதில் அரச குடும்பம் தலையிடாது என்று இளவரசர் ஹாகோன் அறிவித்துள்ளார்.

## அமெரிக்காவில் 300 நகரங்களில் 10 லட்சம் பேர் திரண்டு போராட்டம்




**வாஷிங்டன், பிப்.2:**

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக கடந்த ஆண்டு டிரம்ப் பதவியேற்றார். பதவியேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார். உரிய ஆவணங்களும் இல்லாமல் சட்டவிரோதமாக குடியேறிய வெளிநாட்டுகாரர்களை கைது செய்து நாடு கடத்த உத்தரவிட்டார். இதற்காக குடியேற்றம் மற்றும் சுங்க அமலாக்கம் (ஐஸ்) என்ற புதிய துறையை ஏற்படுத்தினார்.

கடந்த ஆண்டில் அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டினர், பிரபலங்கள் உள்பட ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு நாடு முழுவதும் தொடர் போராட்டம் நடந்து வருகிறது. கடந்த வாரத்தில் மினசோட்டாவில் உள்ள ஐஸ் அலுவலகம் முன்பு போராடிய அலெக்ஸ் பிரெட்டி என்பவர் அதிகாரிகளால் சுட்டு கொல்லப்பட்டார்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் வலுத்து வருகிறது. வார இறுதி நாளான நேற்று அமெரிக்காவின் நியூயார்க், வாஷிங்டன், சிகாகோ, பினீக்ஸ், சான் பிரான்சிஸ்கோ, பாஸ்டன் உள்பட 300-க்கும் மேற்பட்ட நகரங்களில் 10 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் திரண்டு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது டிரம்புக்கு எதிராக அவர்கள் கோஷங்கள் போட்டும், பதாகைகளை ஏந்தி வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போரட்டத்தை ஒடுக்க போலீசார் குவிக்கப்பட்டனர். பல இடங்களில் போலீசார்-ஆர்ப்பாட்டக்காரர்கள் இடையே ஏற்பட்ட மோதலில் கண்ணீர் புகைகுண்டுகள் வீசப்பட்டு கலைக்கப்பட்டனர். இதனால் அமெரிக்காவில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## பாலியல் நோயால் பாதிக்கப்பட்ட பில்கேட்ஸ்: எப்ஸ்டீன் கோப்புகளில் பகீர் தகவல்



**வாஷிங்டன், பிப்.2:**

அமெரிக்காவின் பெரிய அளவில் பேசும் பொருளாக ஜெப்ரி எப்ஸ்டீன் வழக்கு உள்ளது. ஜெப்ரின் எப்ஸ்டீன் என்பவர் வங்கிகளில் இருந்து பல்வேறு அரசியல்வாதிகள், அவர்களின் நிறுவனங்களுக்கு பணம் வாங்கி கொடுக்கும் பணியை மேற்கொண்டார். இதனால் அவருக்கு அரசியல்வாதிகள், தொழிலதிபர்களுடன் நல்ல உறவு இருந்தது. இந்நிலையில் ஜெப்ரின் எப்ஸ்டீன் மீது பாலியல் புகார்கள் எழுந்தன. அவர் சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்து பல பிரபலங்களுக்கு தாரை வார்த்ததாக கூறப்படுகிறது. இவர் தொடர்புடைய கோப்புகளில் பல முக்கிய புள்ளிகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இந்த சர்ச்சை கோப்புகள் நீதிமன்ற உத்தரவின் பேரில் பகுதி பகுதியாக வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அமெரிக்க நீதித்துறை நேற்று லட்சக்கணக்கான பக்கங்களைக் கொண்ட புதிய ஆவணங்களை வெளியிட்டது. அதில் அதிபர் டொனால்டு டிரம்ப், தொழிலதிபர்கள் எலான் மஸ்க், பில் கேட்ஸ், பிரிட்டன் இளவரசர் ஆண்ட்ரு, நியூ யார்க் மேயர் மம்தானியின் தாயும் பிரபல எழுத்தாளர மீரா நாயர் உள்ளிட்டோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் பேட்ஸ் குறித்து கோப்புகளில்அதிர்ச்சி தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

அதாவது, ரஷியப் பெண்களுடன் ஏற்பட்ட பாலியல் தொடர்பு காரணமாகப் பில் கேட்ஸிற்குப் பால்வினை நோய் (STD) ஏற்பட்டதாகவும், அதைத் தனது மனைவி மெலிண்டா கேட்ஸிற்குத் தெரியாமல் மறைக்க அவர் ரகசியமாக மருந்துகளை உட்கொண்டதாகவும் புதிய ஆவணங்கள் கூறுகின்றன. 2013-இல் எப்ஸ்டீன் தனக்குத்தானே அனுப்பிக்கொண்ட மின்னஞ்சல்களில் பில் கேட்ஸ் குறித்து இத்தகைய தகவல்களைக் குறிப்பிட்டுள்ளார்.ஆனால் இந்த குற்றச்சாட்டை பில்கேட்ஸ் தரப்பு மறுக்கிறது. பில்கேட்ஸ் பற்றி அவதூறான கருத்துகளை பரப்ப முயற்சி நடப்பதாக பில்கேட்ஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பில்கேட்ஸ் சார்பில் அவரது செய்தி தொடர்பாளர் கூறுகையில், "இந்தக் குற்றச்சாட்டுகள் மிகவும் அபத்தமானவை, முற்றிலும் பொய்யானவை" என்று தெரிவித்துள்ளது.

## டாண்டலம் சுரங்கத்தில் நிலச்சரிவு காங்கோவில் 200 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பலி

**கின்ஷாசா, பிப்.2:**

காங்கோ ஜனநாயகக் குடியரசில் உள்ள ருபாயா (RUBAYA) டாண்டலம் (TANTALUM) சுரங்கத்தில் ஏற்பட்ட சரிவில் சிக்கி 200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பலியாகியுள்ளதாக செய்திகள் வெளியாகி அதிர்ச்சியை கிளப்பியுள்ளது.

ருவாண்டாவில் உள்நாட்டுப்போரில் ஈடுபட்டுள்ள எம்23 என்ற ஆயுதக்குழுவின் ஆதரவுடன் காங்கோவில் ஏஎப்சி/எம்23 ஆயுதக்குழுக்கள் பல இடங்களை கைப்பற்றியுள்ளன. இவை அந்நாட்டின் சுரங்கங்களில் இருந்து பல்வேறு கனிமங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவருகின்றன. அதன்படி இந்த ஆயுதக்குழுவால் நியமிக்கப்பட்ட வடக்கு கிவு மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் லுபும்பா காம்பெரே முயிசா வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ருபாயா சுரங்க விபத்து குறித்த தகவலை தெரிவித்தார். காங்கோவில் டாண்டலம் (COLTAN-கோல்டன்), கோபால்ட், தாமிரம், வைரங்கள், தங்கம், தகரம் மற்றும் யுரேனியம் போன்ற பல உலோக கனிம வளங்கள் நிறைந்துள்ளன. இந்த டாண்டலமானது மொபைல் போன்கள், கணினிகள், விண்வெளி பாகங்கள் மற்றும் எரிவாயு விசையாழிகள் (GAS TURBINES) தயாரிப்பில் அதிக தேவையுள்ள முக்கிய கணிமமாக உள்ளது. உலகளவில் நடக்கும் டாண்டலம் உற்பத்தியின் மொத்த அளவில் சுமார் 15 சதவிகிதம் இந்த ருபாயா சுரங்கத்தில் இருந்து தான் எடுக்கப்படுகிறது. உள்ளூர் மக்கள் எந்தவித பாதுகாப்பு உபகரணங்களும் இல்லாமல் வெறும் கைகளால் இந்த சுரங்கத்தை தோண்டி வேலை செய்ய வேண்டும். இந்த பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அவர்களது தேவையை கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாத வகையில் சொற்ப சம்பளம் மட்டுமே வழங்கப்படும். இந்த சுரங்கமானது 2024 முதல் ஏஎப்சி/எம்23 ஆயுதக்குழுவின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. ஜன. 28,புதன்கிழமை ஏற்பட்ட இந்த நிலச்சரிவில் சுரங்கத் தொழிலாளர்கள், குழந்தைகள், பெண்கள் என சுமார் 200-க்கும் மேற்பட்டோர் சிக்கிப் பரிதாபமாக பலியாகியுள்ளனர். சிலர் மட்டுமே மீட்கப்பட்டு பலத்த காயங்க ளுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்நாட்டில் மழைக்காலம் என்பதால் மண் நெகிழ்வாக உள்ள நிலையில் மிக மோசமான ஆபத்தான நிலச்சரிவுகள் பல சுரங்கங்களில் ஏற்பட்டு வருகின்றன. தற்போது வரை 227 பேர் பலியாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக்கூடும். ருவாண்டாவில் உள்ள எம்23 ஆயுதக்குழு, தங்களின் உள்நாட்டுப்போர் நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை திரட்ட ருபாயாவின் கனிம வளங்களைச் சுரண்டி வருகிறது என ஏற்கெனவே ஐ.நா அவை குற்றம் சாட்டியுள்ளது. இந்த ஆயுதக்குழுவானது காங்கோ அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான முயற்சியில் உள்ளது.

கடந்த ஆண்டு தாதுக்கள் நிறைந்த பல பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.